# கல்கி



KALKI

8.6.1969

40 காசு




பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரேமா லால் தமது விசேஷ பக்குவ முறை ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

# பிரவுன் & போல்ஸன்

## வெரய்டி கஸ்டர்டு பவுடர்

## உபயோகித்து ஃப்ரூட்டி கஸ்டர்டு டார்ட் செய்து பார்த்திருக்கிறீர்களா?

உங்கள் குடும்பம் விரும்பும் இடை வேளைக்கான இனிய பழ வகைச் சிற்றுண்டி !



இளமையிலும், வளப்பத்திலும், மென்மையிலும் சிறந்தது பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு. பல்வேறு வகையான புட்டிங்குகளையும், தின்பண்டங்களையும் தயாரிக்க எப்போதும் உங்கள் வசம் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் இருக்கட்டும். இது அருமையான பொருள்களிலிருந்து கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால் வெரய்டி கஸ்டர்டு பவுடர்களில் மிகவும் சிறந்தது.

தேர்ந்தெடுக்க இனிமையான 6 சுவைகள்.




**பக்குவ முறை:**
(15 டார்ட்கள் தயாரிக்க)

- 250 கி. மைதா மாவு
- ½ டீஸ்பூன் உப்பு
- 125 கி. சர்க்கரைப் பவுடர்
- 125 கி. வெண்ணெய்
- 2 சிறிய முட்டைகள்
- 1 பாக்கெட் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர்
- 1 கப் நறுக்கிய ஆப்பிள் சுவைக்கு மேலே தூவ துருவிய தேங்காய்

1. மாவு, உப்பு மற்றும் சர்க்கரையை இருமுறை சலித்துக் கொள்ளவும். வெண்ணெயைச் சேர்த்துக் கலக்கவும். மெதுவாகக் கடைந்த முட்டையை சேர்த்து நன்கு கலக்கவும்.
2. பிசைந்த மாவை சிறிது மாவு தூவிய பலகை மீது மெல்லியதாகக் குழவியினால் இடவும் (⅛ அங். கனம்.)
3. தனிப்பட்ட டார்ட் டின்னை (அச்சை) மேலே அழுத்திப் பொருத்தவும். அந்த டார்ட் டின்னுள் மாவை வைக்கவும்.
4. அதை சுடு தட்டில் வைத்து 15-20 நிமிஷங்களுக்கு (400° பா.) சுடவும்.
5. பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டை பாக்கெட்டின் மீது குறிப்பிட்டுள்ளபடி கெட்டியான விழுதாகும் வரை தயாரிக்கவும்.
6. ஆப்பிளைக் கொட்டிக் கிளறவும்
7. டார்ட் மாவுக் கூட்டை ஆற வைத்து கஸ்டர்டைக் குளிர வைக்கவும்.
8. பேஸ்ட்ரி மாவுக் கூட்டினுள் கஸ்டர்டு கலவையை நிரப்பி, தேங்காய்த் துருவலை தாராளமாகத் தூவவும்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை செட்டை ஆங்கிலம் / இந்தி / வங்காளம் / தமிழ் / தெலுங்கு / மலையாளம் / குஜராத்தி / மராத்தி / கன்னடத்தில் / இலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர் ................................

முகவரி ................................

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்) ...

இது போல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின் வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்.


**உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!**

**கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.**
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்)

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ்-1
மற்றும் அவர்களது கிளைகள்

# சமையலறையில் உங்கள் உதவிக்கு

# க்ளிமிக்ஸ்



'க்ளிமிக்ஸ்' மிகவேகம்கொண்ட, தனித்தன்மை கொண்ட எலக்டிரிக் மிக்ஸர்.
'க்ளிமிக்ஸ்'ஸில் மசாலா, சட்னி அரைக்கலாம்.
பழச்சாறுகள் கலவை செய்யலாம்.
அரைக்கவேண்டிய பொருள்களை ஜாடியில் போட்டு ஸ்விட்சை தட்டினால் ஒரே நிமிடத்தில் வேலை முடிந்து விடுகிறது.
மிதமான, நடுத்தரமான, மிக வேகமான ஒட்டங்களை தேவைக்கேற்ப ஒழுங்கு படுத்த ரெகுலேட்டர் கொண்டது. இந்தியாவிலேயே முதன்முறையாக, கலவையை வெளியே எடுக்க குழாயமைப்பு கொண்டது.
'க்ளிமிக்ஸ்' அரைக்கவும், கலவை செய்யவும் இரு தனித்தனி கருவிகள் கொண்டது.
இதன் கலவை செய்யும் பிளாஸ்டிக் ஜாடி உடைக்க முடியாதது.

**cleamix**

தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கு விநியோகஸ்தர்கள் :

**அஸோஸியேடட் எலெக்ட்ரிகல்ஸ்**
**12/A, லிங்கி செட்டி தெரு, சென்னை-1**

*விநியோகஸ்தர்கள் இல்லாத இடங்களுக்கு விண்ணப்பிக்கவும்*




FD9CLX116ITM

# பக்திப் பரவசத்தில் மூழ்கச் செய்யும் லிப்கோ வெளியீடுகள்

ஸகல காரிய ஸித்தியும்



## சைவத் திருமுறைகளும்

- 428 பக்கங்கள்
- ரூ. 4; தபாலில் ரூ. 5.25

ஸகல காரியஸித்தியும்

## ஸ்ரீ தேவீ பாகவதமும்



- 184 பக்கங்கள்
- ரூ. 2.25; தபாலில் ரூ. 3.30



ஸகல காரியஸித்தி தரும்

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

- தேவநாகரியிலும் தமிழிலும்: 352 பக்கங்கள்
- ரூ. 5; தபாலில் ரூ. 6.25

"வரதமணி" அளிக்கும்

## கம்ப ராமாயணம்



- உரைநடை: 418 பக்கங்கள்
- ரூ. 3.90; தபாலில் ரூ. 5.15



ஆறுமுகனுக்குகந்த

## ஆறு படைவீடுகள்

- 320 பக்கங்கள்
- ரூ. 3.50; தபாலில் ரூ. 4.65

## ஸ்ரீமத் பகவத் கீதை



- தமிழ் உரையுடன்: 358 பக்கங்கள்
- ரூ. 3.50; தபாலில் ரூ. 4.70

ஒவ்வொன்றும் உள்ளமுருக்கும் ஏராளமான சித்திரங்களுடன் கூடிய ஆச்சரியமான பதிப்புக்கள்!

பதிப்பகத்தார்:

## தி லிட்டில் ப்ளவர் கம்பெனி


சென்னை-17

லிப்கோவின் திருச்சி விற்பனை நிலையம்:
6, நந்திகோயில் தெரு,
தெப்பக்குளம், திருச்சி-2

VSK




# இவை புதியவை! இவை ரீஸா தயாரிப்பு!!




## ரீஸா ரும்பா

முழுவதும் திடமான
2 பாண்டு டிரான்ஸிஸ்டர்

ரூ. 165/- எக்ஸைஸ் தீர்வை மற்றும் உள்ளூர் வரி தனி



## ரீஸா ரெப்யூட்

4 வால்வுகள் 3 பாண்டுகள்
உயர்ந்த ரக சுத்தமான A. C.

ரூ. 225/- எக்ஸைஸ் தீர்வை மற்றும் உள்ளூர் வரி தனி

இப்பொழுது ரீஸா புதிய தொழில் நுட்ப முறையில் ஜப்பானில் பயிற்சிபெற்ற என்ஜினீயரால் தயாரிக்கப்படுகிறது.

## ரீஸா கம்பெனி

11, மவுண்ட் ரோடு, சென்னை-2

டீலர்கள் இல்லாத இடங்களிலிருந்து டீலர்ஷிப் விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன

# கல்கி


## பொருளடக்கம்


சௌமிய. வைகாசி 26உ — 1969, ஜூன் 8உ



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே




செருப்புக்கு
ஏற்பக்
காலைச் சரி
செய்தல்
ஜனத்தொகை
உணவு உற்பத்தி


சைவ உணவு சிறந்தது!
நக்ஸல்பாரிகள்
புலிக்குப் பாட போதனை!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 45

# கேரோவும் வங்க மந்திரியும்

மேற்கு வங்க மந்திரிகளில் ஒருவரான திரு சுசீல்தரா என்ற வர்த்தக மந்திரி ''கேரோ'' முறைக்குத் தமது எதிர்ப்பை அஹிம்ஸா முறையில் தெரிவிக்க உண்ணுவிரதம் மேற்கொண்டார்.

மேற்கு வங்க கம்யூனிஸ்ட் மந்திரி சபைக்கு அடிப்படை ஆதரவாளர்களான தொழிலாளர்களே தம்மைக் கேரோ செய்ததை ஆட்சேபிக்கத்தான் மேற்கூறிய உண்ணுவிரதத்தை மேற்கொண்டார். அவரைச் சூழ்ந்து கொண்ட தொழிலாளர்களிடமிருந்து அவரை விடுவிக்க, முதல்மந்திரி போலீஸ் உதவியை அளிக்க முன் வந்தார். ஆனால் கேரோவுக்கு உள்ளான மந்திரி போலீஸ் உதவியை ஏற்க மறுத்துவிட்டார், அதற்குக் காரணம் தொழிலாளர்கள் மனத்தில் கேரோவுக்குத் தமது ஆட்சேபத்தை நிரந்தரமாகப் பதியச் செய்ய வேண்டும் என்பதே. அதற்கு உண்ணுவிரதம் இருப்பதே சாலச் சிறந்த உபாயம் என்று அவர் கருதி அதனை மேற்கொண்டார். தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தக் கையாளப்படும் சட்ட விரோதமான கேரோ முறையை நிறுத்த இவ்வுண்ணுவிரத சத்தியாக்கிரக முறை பயன்படும் என்று கருதினர். இப்பொழுது, அவருடைய சகாக்களின் வற்புறுத்தலின்மீது உண்ணுவிரதத்தைக் கைவிட்டிருக்கிறார்.

தொழிலாளர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தொழிற்சங்கம் அமைத்து நடவடிக்கைகளை எடுப்பது உலகில் எங்கும் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றேயாகும். ஆனால் இந்தக் கேரோ முறையைக் கையாள்வதால் தொழிற்சங்க முறையே இகழத்தக்க நிலைக்கு வந்துவிடும் போலிருக்கிறது. இந் நிலையை அது அடையாமல் தடுக்க வேண்டுமானால் மந்திரிகளையும், தொழிற்கூட நிர்வாகஸ்தர்களையும் சூழ்ந்து கொண்டு கொடுமைப்படுத்தும் இந்தக் கேரோ முறைக்கு முடிவு கட்டியேயாக வேண்டும். மறியல் என்பது அராஜக அக்கிரமச் செயல்களின் மற்றொரு உருவமாக மாறிவிட அனுமதிக்கக் கூடாது.

தொழிலாளர்கள் தங்கள் கருத்தை வற்புறுத்தவும் பொது முயற்சியில் ஈடுபாடு கொள்ளாமல் பின் தங்கும் சக தொழிலாளர்களின் மனமாற்றத்துக்காகவும் அமைதியான முறையில் கையாளப்படும் ஆயுதமே மறியல் என்பது. மறியலின் அந்த உண்மைப் பொருளை நல்லபடியாகக் காப்பாற்றி வர வேண்டும். ஆனால் இன்றோ நாராசமான வசவு மொழிகளைக் கையாள்வது, அவமானப்படுத்துவது, தொழிற்கூடத்துக்கு மனமொப்பிச் செல்லவிருக்கும் தொழிலாளர்களை மனித — சுவர் எழுப்பித் தடுக்க முயல்வது, இவையெல்லாம் நடக்கின்றன. இவை மறியல் ஆகா. கொடுமைப்படுத்தலாகும். இதைப் பல முறை காந்திஜி தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இவற்றைவிட மோசம் இப்பொழுது வழக்குக்கு வந்துள்ள 'கேரோ'. இந்தக் கெட்ட வழக்கம் நிரந்தரமாக நிலைபெற்று நின்றுவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. கேரோ முறையைக் கையாளுபவர்கள் ஆட்சியிலிருக்கும் மந்திரி சபையின் நண்பர்களாகவே அதே கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பினும் கூட அவர்களை இம்முறையை மேற்கொள்ளாதபடி தடுக்கவேண்டும்.

வங்கத்தின் கம்யூனிஸ்ட் உதவி முதல் மந்திரி, தமது கட்சியைச் சேர்ந்தவர்களே 'அடிக்கடி' கேரோக்கள் நடத்துவதை ஆட்சேபித்திருக்கிறார். கேரோ 'அடிக்கடி' நடத்தினாலும், எப்பொழுதாகிலும் ஒருமுறை செய்தாலும், கடுமையாகத் தண்டனை விதிப்பதற்கு இந்திய பீனல் கோடில் வேண்டிய சட்டங்கள் இருக்கின்றன என்பது அவருக்கே தெரியாதா? அல்லது இதனை அவருக்கு எடுத்துச் சொல்வதற்கு யாருமே இல்லையா? ராஜ்ய அரசாங்கம், இதனை எதிர்த்து ஹிதோபதேசம் செய்வதற்குமேல் ஒன்றும் செய்ய இடமில்லை என்றால் அந்த ராஜ்ய சர்க்காருக்கு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தகுதி யில்லை என்றுதான் பொருள்.

# கனவு நனவாகிறது!

சந்திர மண்டலத்தில் மனிதன் சென்று இறங்குவதென்பது கதைகளில் கையாளப்பட்டு வந்த கற்பனை என்ற நிலைமாறி இத்துறையில் வியக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டு விட்டன. இன்னும் இரண்டு மாதங்களில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கி விடுவார்கள் என்பது தொண்ணூற்று ஒன்பது சத வீதம் உறுதியாகி விட்டது.

அப்போல்லோ-ஒன்பது பயணத்தின்போது சந்திர மண்டலத்தைச் சுற்றி வந்ததுபோலவே அப்போல்லோ - பத்து பயணத்தின் போதும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனைப் பல முறை சுற்றி வந்திருக்கிறார்கள்.

ஆனால் விண்வெளிக் கப்பலிலிருந்து பிரிந்து சந்திர மண்டலத்தில் சென்று இறங்கவும் மீண்டும் சந்திரனிலிருந்து கிளம்பி விண்வெளிக் கப்பலில் இணைந்து கொள்ளவும் உண்டான 'லூனர் மாட்யூல்' என்ற வாகனம் சமீபத்திய அப்போல்லோ - பத்து பயணத்தில்தான் வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

பலவிதங்களிலும் முன்னேற்றமடைந்து வாழ்க்கை வசதிகள் நிரம்பப் பெருகிவிட்ட நிலையில் அமெரிக்கருக்கு ஒரு தேசிய லட்சியம் தேவைப்பட்டது. சந்திரனைச் சென்றடைவது என்ற லட்சியம் அமெரிக்க மக்களுக்கு ஓர் உத்வேகத்தையும் உழைப்பையும் விடா முயற்சியையும் ஏற்படுத்தித் தந்தது.

ஒவ்வொரு நாட்டுக்குமே அதனதன் சக்திக்கு ஏற்ப ஒரு தேசிய லட்சியம் தேவை. இல்லாவிடில் மக்களின் திறமையும் உழைப்பும் சரியானபடி பயன்படுத்தப்படாமல் சிதறிப் போகும்.

இந்த வகையில் அமெரிக்கர் அமைத்துக் கொண்ட லட்சியம், அந் நாட்டில் ஏராளமான விஞ்ஞானிகள் தோன்றவும் பொறி இயல் துறையில் - வான சாஸ்திரத் துறையில் - பூகோளத்துறையில் இன்னும் எத்தனையோ பல துறைகளில் வியக்கத்தகு முன்னேற்றங்கள் ஏற்படவும் காரணமாக இருந்திருக்கிறது. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் கல்வியின் தரம் பல மடங்கு உயர்ந்திருக்கிறது.

சந்திரனைச் சென்றடைவது என்ற லட்சியம் அந்த ஒரு நோக்கத்துக்கு மட்டுமின்றி அதன் கிளைகளாக மக்கள் சமுதாயத்துக்கு உதவுகிற விதத்தில் பல நூதன கண்டுபிடிப்புகளுக்கும் துணை செய்திருக்கிறது.

வரும் ஜூலை மாதத்தில் அமெரிக்கர்களின் லட்சியக் கனவு முழுமையாக நிறைவேற வாழ்த்துவோம்.

# ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ கோல்வால்கர் அவர்களும் ஜனசங்கத் தலைவர்களும் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் மக்களைத் தங்கள் அன்றாட வாழ்வில் குர்ரான் குறிப்பிட்டுள்ளபடி தெய்வத்துக்குப் பயந்து வாழும்படி கேட்டுக் கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும்! எவ்வளவு சிறப்பாக இருக்கும்! அதே சமயத்தில் இந்தியாவிலும் ஜன சங்கம் மக்களிடை தெய்வ நம்பிக்கை பரவ இயக்கம் நடத்தி, இந்தியாவில் உள்ள ஹிந்துக்களைப் பார்த்து, 'நீங்கள் எந்தத் துறையில் எவ்வளவு வெற்றி பெற்றாலும் தெய்வ பக்தியில் வெற்றி பெறவில்லையானால் பாரதம் மீண்டும் தனது பழம் பெருமையை அடையாது' என்று சொன்னால், ஜனசங்கம் உண்மையில் தனது லட்சியத்தை அடைந்ததாகும். காந்தி மகான் நடத்திய பாரத நாட்டுச் சுதந்திரப் போர், கிலாபத் இயக்கத்துக்கு ஆதரவாகவும், அரேபியாவில் உள்ள புனித ஸ்தலங்களின் விடுதலைக்காகவும் அவர் நடத்திய போர்களிலிருந்துதான் தொடங்கியது என்பதை நினைவில் வைத்துக் கொள்வோமாக. 1920ல் கல்கத்தாவில் நடைபெற்ற விசேஷ காங்கிரஸ் மகாநாட்டில் காந்திஜி கிலாபத் இயக்கத்துக்கு ஆதரவாக மூன்றுவித பகிஷ்காரத் தீர்மானம் கொணர்ந்தார். இதற்கு ஒரு திருத்தப் பிரேரணையாகத்தான் பூரண சுயராஜ்யக்கோரிக்கை சேர்க்கப்பட்டது. அதனால்தான் ஜனசங்கத்தை எனது கருத்தை நல்லபடி யோசிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1919ல் காந்திஜி சென்னையிலிருந்த போது எங்கள் பேச்சுக்களினிடையில், ஒரு மதத்தினர் தங்கள் மத சம்ரக்ஷணத்துக்காக அன்றி மற்றொரு மத சம்ரக்ஷணத்துக்காகப் போராடும் ஒரு விசேஷ அம்சம், ஹிந்துக்கள் கிலாபத் இயக்கத்துக்காக நடத்தும் போராட்டத்தில் இருப்பதை உணர்த்தினேன். காந்திஜி இதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார்.

★

கானடா நாட்டின் முன்னாள் பிரதமர் லெஸ்டர் பியர்ஸன் ஒரு பிரசங்கத்தினிடையே பின் வருமாறு குறிப்பிட்டார்:

"தேசிய உணர்ச்சி அழகானதுதான்; சீரியதுதான். அதாவது மனிதன் தான் பிறந்த நாடு என்று பெருமை கொள்வதும், அவனுடைய பிறந்த நாட்டுப் பற்றும் சிறப்பானவையே. ஆனால் அரசியல் ரீதியாய் தேசியம் என்பது உலக அரசாங்கம் நிறுவவும், உலக மக்கள் அனைவரும் ஒரே குலம் என்ற உணர்ச்சியைப் பேணவும் பெரும் இடையூறாக இருக்கலாம். சக்தி வாய்ந்த அகில உலக ஸ்தாபனம் ஒன்று நிறுவ வேண்டுமென்றால் - அகில உலக ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி, ஏதாகிலும் ஒன்றைக் கட்டுப் படுத்தும் பொறுப்பை அதனிடம் விடவேண்டும் என்று சொன்னால் - லட்சக் கணக்கான மக்கள் உடனே என்ன நினைக்கிறார்கள்? 'நம் நாட்டு விவகாரத்தை நடத்தும் பொறுப்பை வெளிநாட்

## ஆசாரியர் அருள்வாக்கு



திருமாலே! எனக்குப் பணிவை அருள்வாய்; என் மனத்தைக் கட்டுப்படுத்துவாய்; புலனின்பம் என்கிற கானல் நீரை வற்றச் செய்வாய்; சகல பிராணிகளிடம் அன்பை வளர்த்தருள்வாய்; சம்ஸாரத்திலிருந்து கடத்துவிப்பாய்!

டுக்காரார்கள் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்' என்றுதான்!''

மனித சமுதாயம் ஓர் உலக அரசாங்கம் ஏற்படாதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறது. அது ஏற்படவில்லையானால் மனித இனத்துக்கு எவ்விதப் பாதுகாப்பு உணர்ச்சியும் இருக்காது. ஆனால் கஷ்டம் என்னவெனில் திரு பியர்ஸன் குறிப்பிட்டுக் காட்டியுள்ளபடி, தேசிய உணர்ச்சி சுலபத்தில் அழிவதில்லை. ஒவ்வொருவரும் உலக க்ஷேமத்துக்கு எது அவசியமோ அதனை மற்றவர் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

★

காஷ்மீரத்தின் உள்நாட்டு விவகாரங்களை ராஜ்ய சர்க்கார் நிர்வகிக்கிறது. ஆனால் அந்த ராஜ்ய அரசு, தனது அரசியல் செலவினங்களுக்கும் மற்ற பல செலவினங்களுக்கும் பெருமளவுக்கு மத்திய சர்க்காரையே நம்பியிருக்கிறது. பெருவாரியான மக்களின் மனப்பூர்வமான ஆதரவின்றி, படை பலத்தையும், பண பலத்தையும் கொண்டு ஒரு ராஜ்ய நிர்வாகத்தை நடத்துவது விலையுயர்ந்த வேலைதான். நமக்குப் பெரும்பாலான மக்களின் ஆதரவு இருக்கிறது எனில், சவாலை ஏற்று, சுயநிர்ணய உரிமை அல்லது வாக்குரிமை அளித்து அந்தச் சந்தேக முடிச்சை ஏன் வெட்டி எறியலாகாது?

அரசாங்கம் கொடுத்துள்ள புள்ளி விவரம் காஷ்மீரில் நமது பணம் விரயமாகும் கதையைச் சொல்லுகிறது:

பல்வேறு ராஜ்யங்களிலிருந்து கடனாகவும் வட்டியாகவும் மத்திய சர்க்காருக்கு வந்து சேர வேண்டிய தொகை மார்ச் 31, 1967ல் 28 கோடிக்கு மேல். இதில் ஜம்மு காஷ்மீரிலிருந்து வரவேண்டிய தொகை 23½ கோடி. இதை மத்திய சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவந்த பொது தணிக்கைக் கமிட்டி ''ஜம்மு காஷ்மீரின் நிதி நிலைமை சென்ற பதினாறு வருடங்களுக்கு மேலாகக் கஷ்ட தசையில் இருக்கிறது. இந்த நிலையில் அதற்குச் சகாயம் செய்யாமல் இருப்பதும் சிரம சாத்தியமான காரியமே!'' என்று கூறுகிறது. அடுத்து மத்திய சர்க்காருக்கு வரவேண்டிய பெரிய தொகை நான்கு கோடி. மேற்கு வங்கம் தரவேண்டியது.

காஷ்மீரத்துக்குக் கொடுத்துள்ள பணத்தைக் கடன் என்று சொல்லி, மத்திய சர்க்காரின் மூலதனத்தோடு அத்தொகையைச் சேர்ப்பது இடக்கரடக்கல் ஆகும். அந்தத் தொகையைக் காஷ்மீரத்திடமிருந்து திருப்பிப் பெறவே முடியாது.

★

ஒரு காரின் முன் சக்கரங்கள் திசை காட்டுகின்றன. பின் சக்கரங்கள் வண்டியைத் தள்ளுகின்றன. இரண்டும் வெவ்வேறு பணிகள் புரிகின்றன. அதேபோல் ஜனநாயக முறையில் ஆளப்படும் நாட்டின் நிர்வாக விவகாரங்களும் அமைகின்றன. அரசியலில் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டசபை அங்கத்தினர்களாகவும் மந்திரிகளாகவும் வருபவர்கள் நிர்வாகத்துக்குக் கொள்கை என்னும் திசை காட்ட வேண்டியவர்கள். இதுவே அவர்கள் பணியாகும். உறுதியும், நியாய உணர்ச்சியும் நேர்மையும் கொண்ட உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தைத் திறமையாக நடத்தி, மக்களிடையே நீதியும் [ஒழுங்கும் நிலைநாட்டிப் பாதுகாப்பு உணர்ச்சி ஏற்படுத்த வேண்டியவர்கள். எந்த அரசியல் கட்சி பதவிக்கு வந்தாலும் எல்லா மக்களிடமும் நியாயமான முறையில் நிர்வாகம் நடந்து கொள்ளும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதே நிர்வாகஸ்தர்களின் பணியாகும். பின் சக்கரங்களின் பணி வண்டியைத் தள்ளுவது. அவ்வளவே. அவை திசை காட்ட — கொள்கையை நிர்ணயிக்க முயலக் கூடாது. திசை காட்ட வேண்டிய — கொள்கை வகுக்க வேண்டிய — முன் சக்கரங்கள் ஒழுங்காகச் செல்லும் நிர்வாகத்தில் தலையிட்டு, அரசியல் காரணங்களுக்காக ஒருவருக்கு அல்லது இன்னொருவருக்குச் சலுகைகள் கிடைக்க வழி செய்யக்கூடாது.


உத்தியோகஸ்தர்கள் என்ன செய்ய வேண்டும் என்று மந்திரிகளிடமிருந்து முன்னதாக உத்தரவுகள் பெறத் தொடங்கினால், மக்கள் உத்தியோகஸ்தர்களின் சுதந்திர நிர்வாகத்தில் நம்பிக்கை இழந்து விடுவார்கள். இயல்பான முறையில் நியாயம் பெறுவதற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்கள் மந்திரிகளையும், சட்டசபை அங்கத்தினர்களையும் அணுகுவார்கள். உத்தியோகஸ்தர்கள் விரைவில் தங்கள் நேர்மையையும் புகழையும் இழந்து விடுவார்கள். மக்கள், சட்டசபை அங்கத்தினர்களுக்கு நிதி வழங்கத் தொடங்குவார்கள். அதாவது லஞ்சம் கொடுக்க ஆரம்பிப்பார்கள். இதுதான் பல ராஜ்யங்களில் நடைபெற்று வருகிறது!

# திக்குத் தெரியாத காட்டில்....

கி. ராஜேந்திரன்



பாரதியாரின் கவிதையில் தலைமகள் மட்டுந்தானா, நாங்களும்தான் திக்குத் தெரியாத காட்டில் வலியச் சென்று சிக்கிக் கொண்டோம்; தேடித் தேடி அலையவும் செய்தோம்! ஒரே ஒரு வித்தியாசம். அவள் தேடியது கண்ணனை; நாங்கள் தேடியது வன விலங்குகளை!



சென்னையில் வெய்யிலின் உக்ரம் உச்ச கட்டத்தை அடையுமுன்பாகவே உதகைக்குச் சென்று பத்து நாட்கள் இருந்து விட்டு வந்து விடுவது எங்கள் குடும்பத்தில் வழக்கம். நிழலின் அருமை வெய்யிலில்தானே தெரியும்? அதோடு, ''அப்பப்பா! ஊட்டியிலேயே இன்னும் பத்து நாட்கள் இருந்துவிட்டு வந்திருக்கலாம்'' என்று நண்பர்களிடம் கூறிக் கொள்ளும் வாய்ப்பை இழந்துவிடலாமா?

இம்முறை ஊட்டியிலிருந்து கிளம்பி மைசூர் பங்களூர் வழியாகச் சென்னை திரும்புவது என்று முடிவு செய்தோம். உதகை—மைசூர் சாலை திடுமென ஓரிடத்தில் காட்டுப் பகுதியில் நுழைந்தது. இரண்டு பக்கங்களிலும் அடர்ந்த வனம்; மூங்கில் காடு!

கார் மேலே மேலே சென்றது. கானகத்தின் அடர்த்தியும் மிகுதியாகிக் கொண்டே போயிற்று. ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் குறைந்து, பேச்சு நின்று, காரில் இருந்தவர்கள் கவலையுடன் இருபுறமும் நோக்கத் தொடங்கிய தருணத்தில், 'அபயம்' என்று அருள்வது போல் 'அபயாரண்யம்' என்ற பெயர்ப் பலகை காட்சி தந்தது. அம்புக் குறி காட்டிய திசையில் சென்றோம். அரண்யத்தின் மத்தியில் பிரயாணிகள் தங்க அமைக்கப்பட்டிருக்கும் அபயாரண்யம் என்ற அந்த இல்லத்தில் அடைக்கலம் புகுந்தோம்.

வெய்யில் தாழக் கிளம்பி வனவிலங்குத் துறை காரியாலயத்துக்குச் சென்றோம். முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்தில் உள்ள மிருகங்களைப் பார்க்க வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தைத் தெரிவித்தோம்.

''ஆகா! தாராளமாகப் பாருங்கள்! உங்கள் காரிலேயே போய்ப் பார்க்கிறீர்களா?



யானை மேல் ஏறிச் சென்று பார்க்கிறீர்களா?'' என்று கேட்டார் ஓர் அதிகாரி.

''இரண்டு விதமாகவும் பார்க்கிறோம்'' என்றோம்.

''அப்படியானால் சரி, நீங்கள் காரில் ஏறிக் கொள்ளுங்கள்; நான் ஆள் அனுப்புகிறேன்'' என்றார் அவர்.

சில விநாடிகளில் சிவந்த கண்களும் கரிய மீசையும் கையில் பெரிய அரிவாளுமாக ஒரு நபர் கார் அருகே வந்தார். ''கதவைத் திறங்க !'' என்று உத்தரவு போட்டார்.

''அரிவாள் எதற்கு?'' என்றேன் நான் கீச்சுக் குரலில். அதில் தொனித்த நடுக்கம் என்னை மேலும் அச்சுறுத்தியது.

''பயப்படாதீங்க. காட்டு யானைங்க சில சமயம் மரக் கிளைகளை ஒடிச்சுப் போடும். பாதையிலே குறுக்காலே கிடக்கும். அதை வெட்டி நகர்த்தி அப்புறப்படுத்தத்தான். பின்னே கார் எப்படிப் போகும்?''

அவர் காரில் ஏறிக் கொண்டு வழி காட்ட முன்னேறினோம். பாதையின் ஓரத்தில் மைல் கற்கள் கரேலென்று இருந்தன. வெள்ளை வர்ணம் பூசப்பட்டால் யானைகள் இரவில் அவற்றைத் தும்பிக்கையினால் பற்றிப் பிடுங்கித் தூர வீசி எறிந்து விடுமாம்!









''யானைகள் ஏன் அப்படிச் செய்கின்றன?''

''அந்த மைல்கற்களை மனுஷங்கன்னு நெனைச்சிக்கிடும் ; அதனாலேதான் !'' என்று சர்வ சாதாரணமாகக் கூறிய அந்தக் காட்டிலாகா மேஸ்திரி, சட்டைப் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். கார் முழுவதும் புகையிலை நெடி 'கம்' மென்று நிரம்பியது.

மேஸ்திரியும் அவரது அரிவாளும் பக்கபலமாக அருகிலிருந்த போதிலும் உள்ளூற எங்களுக்கு ஏற்பட்ட பயத்தைப் போக்கிக் கொள்ளத்தானோ என்னவோ நாங்கள் வழக்கத்தைவிட உரக்கப் பேச ஆரம்பித்தோம்.

இங்கே புலிகள் கூட்டம் கூட்டமாய்க் கார் எதிரே வந்து நிற்கும் என்றும் அபூர்வமாக ஓர் எலிகூடக் கண்ணில் தட்டுப்படலாம் என்றும் தமாஷ் செய்து கவலையை மறக்க அடிக்கப் பார்த்தோம். ''அதோ, பார் !'' என்று நான் சொல்ல, ''என்ன? என்ன?'' என்று எல்லாரும் சரணாலயத்தில் உள்ள ஏதோ ஒரு மிருகத்தைக் காணும் ஆர்வத்துடன் கேட்க, ''காக்காய்!'' என்று

1. முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்தில் காட்டெருமைக் கூட்டம்.

2. மிருகங்களைக் காண யானைச் சவாரி.

3. இவையே சாம்பார் !

4. குட்டியானையின் சர்க்கஸ். 5. பதுங்கும் புலி.

படங்கள் - நன்றி : தமிழ்நாடு வனவிலங்குத் துறை அதிகாரி.

நான் கூற, "போப்பா !" என்று குழந்தைகள் முனகியபடியே கோபிக்க ஒரே களேபரம் !

"உங்களுக்கு மிருகங்களைப் பார்க்கணுமா? வேணுமா ?" என்றார் மேஸ்திரி கண்டிப்பு நிறைந்த குரலில்.

"பார்க்கணும்! பார்க்கணும்!" என்றோம், எல்லோரும் ஏககாலத்தில்.

"அப்போ பேசாமல் வாங்க; பேசினால் பார்க்க முடியாது !"

"இப்பவே இரண்டு மைலுக்கு மேலே வந்திருப்போம் போலிருக்கே; ஒண்ணையும் காணுமே ?"

"ஒண்ணு என்ன? நூற்றுக்கணக்கில் காமிச்சுத் தரேன்! ஆனால் பேசப்படாது. சத்தம் போட்டால் மிருகங்கள் கண்ணுக்குத் தெரியாம ஓடி மறைஞ்சிடும்!"

"கார் சத்தம் கேட்குமே ?"

"அது பரவாயில்லை. மனுசன் குரலைக் கேட்கத்தான் அதுங்களுக்குப் பிடிக்காது!"

ஆகா! இந்த மிருகங்கள்தான் எத்தனை அறிவுடையவை என்று நினைத்துக் கொண்டேன்.

கையில் காமிராவுடன் இது போன்ற வன விலங்குகள் சரணாலயத்துக்கு வருவோரைப் பார்த்துக் கரடியோ, மானோ, "கொஞ்சம் இருங்க, என் பெண்டாட்டியையும் அழைச்சுக்கிட்டு வந்துடறேன், ஃபோட்டோவுக்கு 'போஸ்' கொடுக்க" என்று கூறுவது போல் பத்திரிகை ஒன்றில் ஒரு நகைச்சுவைத் துணுக்கு பார்த்த ஞாபகம் எனக்கு வந்தது. ஆனால் அப்படி ஒன்றும் மிருகங்கள் புத்தி கெட்டுப் போய்விடவில்லை என்பதும் வஞ்சனை மிக்க மனிதனைக் கண்டால் ஒளிந்து பதுங்கவே விரும்புகின்றன என்பதும் சந்தேகத்துக்கிடமின்றி இங்கு ஊர்ஜிதமாயிற்று.

இதற்குள் கார் தார்ச் சாலையை விட்டுத் திரும்பி அடர்ந்த வனத்தினூடே அமைக்கப்பட்டிருந்த கல்லும் முள்ளும் நிறைந்த, குண்டும் குழியுமான குறுகிய பாதையில் மெல்ல முன்னேறிக் கொண்டிருந்தது.

"உம்! அதோ பாருங்க!" என்று ரகசியக் குரலில் மேஸ்திரி கூறிச் சுட்டிக் காட்டினார்.

கார் நின்றது. "நரிக் கூட்டம்!" என்று ஆச்சரியம் மிகுந்த மெல்லிய குரல்கள் பல கிளம்பின.

குள்ள நரிகள் நாலைந்து நின்று நோக்கின. மெல்லப் பதுங்கின. சந்தேகக் கண்களோடு பார்த்தன. அப்புறம், "எதற்கு வம்பு?" என்று நினைத்தது போல் மெல்லத் திரும்பி மரங்களினூடே மறைந்தன.

கார் கிளம்பியது. அப்போதுதான் எங்களுக்கு எதிரே ராஜ மரியாதையும் வரவேற்பும் அமர்க்களப்படுவதை உணர்ந்தோம். ஐந்தாறு மயில்கள் கார் முன்னால் அணிவகுத்து ராணுவ நடை பயின்றன. அவற்றின் பின்னாலேயே கார் மெதுவாக ஊர்ந்தது. நிசப்தமாக அமர்ந்திருந்து ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தோம். காரின் உறுமலை அவை கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை. தம்பாட்டுக்குச் சென்றன. சற்றுத் தூரத்துக்குப் பிறகு பாதையை விட்டு விலகி அவசரமின்றிக் கானகத்தில் எங்கள் பார்வைக்குக் காணாமல் போயின.

மேலே சென்றோம். "குரங்குகள் பாருங்கள்" என்றார் காட்டிலாகா மேஸ்திரி. அவர் காட்டிய திக்கில் நோக்கினோம். தொலைவில் ஒரு மரம். "மரம்தானே? குரங்குகள் எங்கே?"

"நீங்க மரத்தை எங்கே பார்க்க முடியும்? குரங்குகளைத்தான் பார்க்கிறீங்க" என்றார் அவர்.

சற்றுக் கூர்ந்து நோக்கியபோதுதான் அவர் சொன்னதில் உள்ள உண்மை புரிந்தது.

அதாவது, மரம் முழுதும் ஓர் அங்குலம் இடைவெளி விடாமல் அத்தனை குரங்குகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் அடிமரத்தைத் தவிர கிளைகளையே பார்க்க முடியவில்லை! இதைச் சற்றும் எதிர்பாராத நாங்கள் மாலை நேர மங்கிய ஒளியில் எட்ட இருந்து நோக்குகையில் அந்தக் குரங்குகளையே கிளைகள் அடர்ந்த மரமாக நினைத்துக்கொண்டோம்! அத்தனை குரங்குகள் அம்மரத்தில் அப்பிக் கொண்டிருந்தன!

பாதையில் ஒரு திருப்பு முனை. அந்த முனை திரும்பியதும் நாங்கள் திக்பிரமை பிடித்தது போல் ஒரு நிமிஷம் திகைத்து நின்றோம். எங்கள் முன்னால் ஒரு மிருகம் கம்பீரமாகக் கழுத்தை உயர்த்திச் செருக்குடன் சாலை மத்தியில் நின்று கொண்டிருந்தது. அது மான் போல இருந்தது; ஆனால் மான் போல இல்லை! அது குதிரை போல் தோன்றியது; ஆனால் நிச்சயம் குதிரை இல்லை!

எங்கள் திகைப்பை உணர்ந்து, "சாம்பார், சாம்பார்!" என்றார் மேஸ்திரி. ஒரு நிமிஷ நேரம் சாம்பார் எங்களுக்குத் தரிசனம் தந்துவிட்டு ஒரு துள்ளுத் துள்ளி வாயு வேக, மனோ வேகமாக ஓடியது. என்ன ஆச்சரியம்! அந்தத் திருப்பு முனையில் எங்கள் கண்களுக்குத் தெரியாமல் இருந்த வேறு பல சாம்பார்கள் திடும் திடுமென்றுதோன்றி, முன்னே சென்று மறைந்த அந்தச் சாம்பாரைப் பின்பற்றிப் பாய்ந்தோடின. வினாடி நேரம் ஒரு சாம்பார் தோன்றுவதும் மின்னல் வேகத்தில் அது மறு பக்கம் அடர்ந்த காட்டில் மறைவதும் ஏதோ இந்திர ஜாலக் காட்சியாகத் தோன்றியது!

"வற்றல் குழம்பு எப்போ வரும்?" என்று என் மகன் கிண்டலாகக் கேட்டான்.

"காமிச்சுத் தரேன்" என்றார் மேஸ்திரி விட்டுக் கொடுக்காமல்.

அடுத்து மான்கள் கூட்டம் கண்களுக்குத் தட்டுப்பட்டது. ஒன்று இரண்டா? ஐந்தா பத்தா? நூற்றுக் கணக்கான மான்கள். ஆகா! அவற்றில் சாலை ஓரமாயிருந்த மான்கள்தான் எவ்வளவு பாதுகாப்பு உணர்ச்சியுடன் மேய்வதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து நோக்கின! அந்தக் கண்களில் எச்சரிக்கை ஒளி எவ்வளவு துரிதமாகப் பரவியது! கழுத்தைச் சடக் சடக்கென்று அவை ஒரு தடவைக்குக் கால் அங்குல அளவே திருப்பி மூன்று திசைகளில் பார்த்த அழகை என்னென்பது! அப்புறம் அபாயம் ஏதுமில்லை என்று தெரிந்தும் கூட முன்ஜாக்கிரதையாக இருப்பது நலம் என்று கருதியது போல் மறைவிடத்தை நாடி மெல்ல, ஓய்

யாரமாக, ஒற்றுமையாக நகர்ந்து சென்ற காட்சியை அற்புதம் என்றுதான் வர்ணிக்க வேண்டும்!

கார் மேலே சென்றது. இன்னும் சில மான் கூட்டங்கள்; மேலும் பல மயில்கள்; குரங்குக் கூட்டம் எல்லாம் பார்த்தோம். ஓரிடத்தில் ''எச்சரிக்கை. யானைகள் சாலையைக் கடக்கும் இடம்'' என்று அறிவிப்புப் பலகை காணப்பட்டது.

''என்ன இது?'' என்று கேட்டேன் மேஸ்திரியை.

''காட்டு யானைகள் மந்தையாகத் தண்ணீர் குடிக்க இந்த வழியாகப் போகும். சாலைக்குக் குறுக்காலே இந்த இடத்திலே கடக்கும். அதனாலே போர்டு போட்டிருக்காங்க'' என்றார் மேஸ்திரி.

அடர்ந்த காட்டிலும் யானைகளுக்கும், ஏன் மற்ற மிருகங்களுக்கும் கூட வழி உண்டு என்று புரிந்தது எனக்கு. பாதை என்று அமைக்க அவற்றுக்குத் தெரியாது போகலாம். ஆனால் வழி தெரியாது போகாது! குறிப்பிட்ட வழியில்தான் அவை போகும், வரும்!

இருள் கவியும் நேரத்தில் காட்டிலாகாவினரின் காரியாலயத்துக்குத் திரும்பி வந்தோம்.

''என்ன மிருகங்களையெல்லாம் பார்த்தீங்களா?'' என்று கேட்டார் அங்கிருந்த ஊழியர்.

பார்த்த மிருகங்களின் பட்டியலை ஒப்பித்தேன்.

''இவ்வளவுதானா? முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தில் நீங்கள் பார்க்க வேண்டிய மிருகங்கள் ரொம்பப் பாக்கி யிருக்கு. யானைகள், புலிகள், காட்டுப் பன்றிகள், காட்டெருமைகள், சிறுத்தைகள், கரடிகள், முயல்கள், முள்ளம்பன்றிகள், பலவிதப் பட்சிகள் இவற்றையெல்லாம் பார்க்க வேண்டாமா?''

''பார்க்க ஆசைதான். ஆனால் எல்லாவற்றையும் பார்ப்பதென்பது ரொம்பச் சிரமமான காரியமாக இருக்கும் என்று தோன்றுகிறதே?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. ரொம்பச் சுலபமாகப் பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே அவர் நாலைந்து புகைப்பட ஆல்பங்களைத் தூக்க முடியாமல் தூக்கி என் எதிரே மேஜை மேல் போட்டார்.

''இவற்றில் எல்லா மிருகங்களும் இருக்கின்றன, பாருங்கள்!'' என்றார்.

நான் அவர் ஆசையைக் கெடுக்க விரும்பாமல் பக்கங்களைப் புரட்டினேன். மேஜையின் மறுபக்கத்தில் ஒரு புலித் தலையின் எலும்புக் கூடு இருந்தது. புலியையே பார்த்தால் கூட அத்தனை பயமாக இராது. இந்த எலும்புக் கூடு கோரைப் பற்கள் முழுமையாகத் தெரியப் பயங்கரமாய் இருந்தது! போதாக் குறைக்கு எதிரே இருந்த காட்டிலாகா ஊழியர் அதை ஒரு முறை தடவிக் கொடுப்பதும் அதை அடுத்து அதன் பின்புறம் ஓர் அழுத்தம் கொடுப்பதுமாய் இருந்தார். ஒவ்வொரு முறை அவர் அழுத்தம் கொடுக்கும்போதும் புலி வாயைப் பிளந்தது. கையை அவர் எடுத்தபோது 'டொக்' என்ற ஓசையோடு அது மூடிக் கொண்டது. அப்படி அது வாயைப் பிளந்து மூடும் சத்தம் கேட்டபோதெல்லாம் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''இந்தச் சரணாலயத்துக்கு அயல்நாடுகளிலிருந்தும் புகைப்படக் கலை நிபுணர்கள் பலர் வருகிறார்கள். படம் எடுக்கிறார்கள். தாய்நாடு திரும்பிய பிறகு அன்புப் பரிசாகச் சில படங்கள் அனுப்பி வைக்கிறார்கள். அவற்றைத்தான் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று விளக்கினார் அவர்.

அன்று இரவு அபயாரண்யத்தில் எங்கள் அறையில் படுக்கை வசதிகள் நிரம்ப இருந்தும் யாருக்கும் தூக்கம் பிடிக்காமல் தவித்துக் கொண்டிருந்தோம். 'அடர்ந்த கானகத்தின் மத்தியில் இரவு நேரத்தில் தங்கி யிருக்கிறோம்' என்ற நினைவு எங்களை விட்டு விநாடிப் பொழுதும் நீங்கவில்லை.

இச்சமயத்தில் அபயாரண்யத்தின் காப்பாளர் திபுதிபுவென்று ஓடி வந்து, ''வாங்க, வாங்க! சீக்கிரம், சீக்கிரம்!'' என்று துரிதப் படுத்தினார்.

'என்னமோ, ஏதோ' என்று வாரிச் சுருட்டிக் கொண்டு அறையை விட்டு வெளியே ஓடினோம், அவரைப் பின் தொடர்ந்து.

கன்னங் கரிய மை இருட்டில் காப்பாளரின் வெள்ளைச் சட்டைதான் தெரிந்தது. 'திக் திக்'கென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. 'அவசரத்தில் செருப்புக் கூட அணியாமல் வந்து விட்டோமே' என்று நினைத்த மாத்திரத்தில் மாலையில் புகைப்பட ஆல்பத்தில் பார்த்த மலைப் பாம்பு என் மனக்கண் முன்னால் விசுவரூபமெடுத்தது!

அபயாரண்யம் பிரயாணிகள் விடுதியின் காப்பாளர் டார்ச் லைட்டைப் பொருத்தினார். நாலு திசைகளிலும் ஒளியைச் செலுத்தினார்.

''என்ன? என்ன?'' என்று கேட்டோம்.

''தெரியலே? மான் கூட்டம்! தெரியலே? கண்களைப் பாருங்கள் டார்ச் லைட் ஒளியில் மின்னுவதை! உடல்களைப் பாருங்கள் இருட்டோடு இருட்டாகக் கருகும்மென்று இருப்பதை!''

''ஆ! ஆமாம்! தெரிகிறதே! ஓ! அடடா!'' என்று பலவித வியப்பொலிகள் எங்கள் கண்டங்களிலிருந்து எழுந்த போதிலும் மான்களின் உடல்கள் என்று அவர் குறிப்பிட்டவை அடிமரங்களோ அல்லது பாறைகளோ என்றும், மின்னியவை மின்மினிப் பூச்சிகளோ என்றும் ஒரு சந்தேகம் என் இதயத்தின் ஒரு மூலையில் எழாமல் இல்லை. எப்படியானால் என்ன, முதுமலையில் வன விலங்குகளைக் காண வந்தவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கக்கூடாது என்பதில் காட்டிலாகா ஊழியர்கள் காட்டிய சிரத்தையைப் பாராட்டாமல் இருக்கவா முடியும்?

மறு நாள் காலையில் ஆறு மணிக்கு யானை மீது ஏறிக் காட்டுக்குள் செல்லலாம் என்று ஏற்பாடு. ''சீக்கிரம் வந்து விடுங்கள்; காட்டுக்குள் செல்லும் முதல் யானை மீது

நீங்கள் அமர்ந்திருக்க வேண்டும். இரண்டாவதாகவோ, மூன்றாவதாகவோ போனால் அதற்குள் மனித வாடை பிடிக்காத மிருகங்கள் பதுங்கிவிடும்'' என்று யானைக் கொட்டிலில் எங்களை எச்சரித்திருந்தார்கள்.

ஆகவே, ''நாலு மணிக்கு அலாரம் வைத்துக் கொள்ளலாமா?'' என்று கேட்டேன்.

''எதற்கு? ராத்திரி யாரால் தூங்க முடியும் இந்தக் காட்டுக்கு மத்தியில்?'' என்றாள் என் மனைவி.

''ஐந்து மணிக்கு இங்கிருந்து கிளம்பி விடவேண்டும். பலகாரம் பண்ணாவிட்டால் பரவாயில்லை!''

''திரும்பி வந்து குளித்தால் போயிற்று. பல் தேய்க்காவிட்டால் கூடப் பாதகமில்லை!''

''காப்பி சாப்பிடா விட்டாலும் குற்ற...''

''ஆ! ஐயோ! காப்பி இல்லாமல் கிளம்புவதா? சாத்தியமா?''

கானகத்தின் கவலையுடன் காப்பிக் கவலையும் சேர்ந்து தூக்கத்தை விரட்டியது.

ஆனால் எங்கள் பயம் கொஞ்சமும் ஆதாரமற்றதாகப் போயிற்று. இரவு முழுவதும் நரி ஊளையிடும் சத்தம் கூடக் கேட்கவில்லை. சொல்லி வைத்தாற்போல் காலை ஐந்து மணிக்கு அபயாரண்யத்தின் காப்பாளர் பிஸ்கட் பொட்டலத்துடனும் சூடான காப்பியுடனும் அறைக்குள் நுழைந்தார்.

உடனே சுருசுருப்பாக எல்லாக் காரியங்களும் துரிதமாய் நடந்தன. அபயாரண்யத்தில் ஆறு மணி அடித்து ஓயுமுன்பே நாங்கள் யானைக் கொட்டிலில் ஆஜராகி விட்டோம்.

காட்டிலாகா ஊழியர் ஒருவர் அரிவாளுடன் முன்னே செல்ல இன்னொருவர் அரிவாளுடன் பின்னே வர எங்கள் குடும்பம் யானை மீதேறிக் காட்டுக்குள் புகுந்தது.

''ஏனப்பா யானையை எப்படிச் செலுத்துகிறாய்?'' என்று யானைப் பாகனைக் கேட்டேன்.

''கார் ஓட்டுவது போலத்தானுங்க''என்று சுலபமாகச் சொல்லி முடித்து விட்டான் அவன்.

இதற்குள், முன்னே சென்ற மேஸ்திரி, ''காஷா தாஸ் பிக்ஷா ஜூம்'' என்று சொல்ல யானையின் பின்னால் வந்த ஊழியர், ''தகடும் பிஸ்க கம்கா'' என்றார்.

விசாரித்ததில் அது அப்பகுதியில் வாழும் ஆதிவாசிகள் பாஷை என்று புரிந்தது. எந்தப் பக்கம் போகலாம்; காட்டு யானைகள் எந்தத் திசையில் இருக்கும் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி நின்று தரையில் தென்பட்ட யானைக் காலடி அடையாளங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டு போனார்கள். அதற்கேற்பத் தொலைவில் யானை ஒன்று பிளிறும் ஓசை கேட்டது. ஆனால் யானைக் கூட்டம் கண்ணில் தென்படவில்லை.

நாங்கள் ஏறியிருந்த யானை, அமைதியாக உறுதியாக முன்னேறியது. எதிரே தடையாக இருந்த சில புதர்களைத் துதிக்கையால் விலக்கிக் கொண்டும், சில குச்சிகளைக் காலால் மிதித்து ஒடித்துக் கொண்டும் சென்றது.

அதோ மான் கூட்டம்! புள்ளி மான்கள் பல மேய்ந்து கொண்டிருந்தன. காட்டு அணில் ஒன்று — சாதாரணமாய் நாம் காணும் அணிலைப் போல் பத்து மடங்கு பெரிது — தன் பொன் மேனி காலை இளஞ் சூரியனின் ஒளி பட்டுத் தகதகக்க ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குத் தாவியது. ஆங்காங்கே காட்டுத் தீயில் கருகிய மரங்களைக் காண முடிந்தது. ராட்சசச் சிலந்திக் கூடு ஒன்று 'சிங்கப்பூர் டிவிங்கிளிங் நைலான்' தோற்றுப்போகும் வகையில் பளபளத்தது. 'மூங்கில் இலை மேல் தூங்கும் பனி நீர்' முத்துக்கள் ஒளி சிந்தின.

யானை ஆடி அசைந்து சென்றது. எனது ஒரு வயது மகனுக்கு அது தொட்டில் ஆடுவது போல் இருந்திருக்க வேண்டும். அன்னையின் மடியில் அவன் சுகமான நித்திரையில் ஆழ்ந்தான். யானை ஒரு மேட்டில் ஏறியது. பள்ளத்தில் இறங்கியது. 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்களே அந்தப் பழமொழி அந்தச் சமயம் பார்த்து எனக்கு நினைவுக்கு வருவானேன்? அது மட்டுமா? ஆழ்வார்க்கடி யானைத் துரத்தி வந்த யானை பள்ளத்தில் விழுந்த கதையும் அதே சமயத்தில் ஞாபகத்துக்கு வந்து விட்டது. ஆறுதலும் தைரியமும் பெற, ஒரு கவலையும் இன்றித் தூங்கும் மைந்தனை ஒரு தடவை திரும்பிப் பார்த்துக் கொண்டேன்!

எதிரே ஒரு கருங் குரங்குக் கூட்டம் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குக் குடி பெயர்ந்தது. நீலமும் சிவப்புமாய்ச் சில பட்சிகள் சிறகடித்துப் பறந்தன. தொலைவில் மீண்டும் யானை பிளிறும் ஓசை. நாங்கள் அவ்வப்போது ரகசியமாய்ப் பேசும் கிசுகிசு ஒலி. மற்றபடி அமைதிதான்; நிசப்தம்தான்.

'கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஆகிவிட்டதே; காட்டுக்குள் வெகு தூரம் வந்து விட்டோமே' என்ற கவலை ஆட்கொள்ளும் போதே திறந்த வெளி தெரிந்தது. புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வந்து விட்டோம் என்பதும் புரிந்தது!

யானைக் கொட்டிலில் யானைக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட அளவில் கம்பு, கேழ்வரகு, சோளம், அரிசி போன்ற தானியங்களை வேகவைத்துக் கலந்து உருட்டினார்கள். தும்பிக்கையை உயர்த்திய படி நிற்கும் யானையின் திறந்த வாய்க்குள் அந்த உருண்டையைப் போட்டார்கள்.

''யானை ஆரோக்கியமாக இருக்க இந்தச் சீரிய உணவு. ஆனால் இது அதற்குப் போதாது. இரவில் முன் கால்களை மட்டும் ஒன்றொடொன்று சங்கிலியால் பிணைத்து விட்டுக் காட்டுக்குள் அனுப்பி விடுவோம். வேண்டியமட்டும் உண்டு உறங்கித் திரும்பும்'' என்று விளக்கினார் அதிகாரி ஒருவர்.

குட்டி யானை ஒன்று பெரிய யானைகளுக் கிடையில் குறும்புத்தனம் செய்து விளையாடியது. தனது சிறிய தும்பிக்கையை அவற்றின் வாயிலும் காதிலும் வைத்து வருடியது. இப்பால் ஓடி வந்து ஒரு கம்பத்தைச் சுற்றியது. தும்பிக்கையால் அதை வளைத்துக் கொண்டு முன் கால்களை உயர்த்தியது. உடலை அதன் மீது தேய்த்துக் கொண்டது.

சங்கிலிகளும் தாம்புக் கயிறுகளும் பட்டுப் பட்டுப் புண்ணான இடங்களில் பெரிய யானைகளுக்கு மருந்து போட்டுக் கொண்டிருந்தான் ஒருவன். நுனியில் துணி சுற்றப்பட்

டிருந்த ஒரு குச்சியை, மூங்கில் குழலில் இருந்த மருந்தில் தோய்த்து எடுத்துப் புண்ணான பகுதிகளில் 'சதக் சதக்' கென்று தட்டினான்.

இன்னொரு பக்கம் சமீபத்தில் பிடிக்கப் பட்ட காட்டு யானை ஒன்று உடலின் புழுதி யும் அதன் விளைவான செந்நிறமும் மாறாமல் நின்றது. புதிதாகப் பிடிக்கப்பட்ட யானை யின் கொட்டம் அடங்கும்வரை அதை அடைத்து வைக்கும் சிறையும் சமீபத்தில் காணப்பட்டது.

சற்றுத் தூரத்தில் சலசலத்து ஓடிய ஆற் றில் பழக்கப்பட்ட யானைகள் சொகுசாகப் படுத்துக் கொண்டிருந்தன. "ஒவ்வொரு யானைக்கும் டிரைவரும் உண்டு, கிளீனரும் உண்டு" என்றார் ஒரு காட்டிலாகா அதிகாரி. ஆற்றங்கரையில் கிளீனர்கள் யானைகளைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தார்கள். படுத்துக் கிடந்த அவற்றின் உடலைக் "கர் சர் கர் சர்" என்று ஒலி யெழும்ப மட்டை நாரால் தேய்த்துக் கொண்டிருந்தனர். யானைகள் இந்த உபசாரணையை நன்கு ரசித்து அனுப வித்துக் கொண்டிருந்தன.

மைசூர் ராஜ்யத்தில் முதுமலை சரணாலயத் தின் தொடர்ச்சியாகப் பாந்திப்பூர் வன விலங்குகள் சரணாலயம் உள்ளது. இங்கும் நெடுஞ்சாலை ஓரமாகவே நூற்றுக் கணக்கான மான்களைப் பார்த்தோம்.

"இவ்வளவெல்லாம் கஷ்டப்படுவானேன்? இரண்டு ரூபாய் கொடுத்து டார்ஜான் சினிமா பார்த்தால் போயிற்று!" என்றார் ஒரு நண்பர் நான் சென்னை திரும்பிய பிறகு.

ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட தியேட் டரில் குளுகுளு சூழ்நிலையில் சௌக்கியமாக உட்கார்ந்து கானகத்தையும் காட்டு மிருகங் களையும் பார்த்துவிடலாம்தான். ரொம்ப அதிருஷ்டம் இருந்தாலொழிய முதுமலை சரணாலயத்தில் எல்லா வித மிருகங்களையும் பார்த்துவிட முடியாதுதான். ஆனால் முது மலைக் காட்டில் கிடைத்த அநுபவங்களும் ஏற்பட்ட உணர்ச்சிகளும் நூறு டார்ஜான் படங்கள் பார்த்தாலும் கிட்டாதவை!

# வெள்ளிக் கோளில் ஒரு வெற்றி!

சோவியத் கோளிடை நிலையமான 'வீனஸ்-5' நூற்றி முப்பது தினங்கள் பயணம் செய்தது! முப்பத்தைந்து கோடி கிலோமீட்டர்களைக் கடந் தது! பிறகு சுக்கிர வாயு மண்டலத்தின் வழியே 'பாரசூட்' குடையின் மூலம் மெல்ல இறங் கிற்று. அது கீழிறங்கும் போது, வாயு மண்டல வெப்ப நிலையையும், அழுத்தத்தையும், அம்மண்ட லத்தின் இரசாயன இயல்பையும் அளந்தறிந்தது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட விவரங்கள் அனைத் தும் இடையறாது பூமிக்கு அனுப்பப்பட்டுக் கொண்டு இருந்தன. சோவியத் அரசின் சின்னமும், லெனினது திருவுருவமும் பொறிக்கப்பட்ட பதக்கம் ஒன்றை "வீனஸ் - 5" சுக்கிரக் கோளில் இறக்கியுள்ளது.

இது எப்படிப்பட்ட விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, அண்மைக் காலம் வரை சுக்கிரனைப் பற்றி விஞ்ஞானிகள் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.


"வீனஸ் - 4", "வீனஸ் - 5" சுக்கிரனுக்குச் செல்லு முன்னர், அக்கோளைப் பற்றிய விவரங்கள், டெலஸ்கோப்புகள், கோளிடை ராடார் அமைப்புகள் ஆகியவற்றின் மூலமே பெறப்பட்டன. ஆனால் இயற்கை அளப்பரிய விந்தைகளை மறைத்து வைத்துள்ள பெட்டகம் ஆயிற்றே! இதுகாறும் பெறப்பட்ட விவரங்கள் அனைத்தும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை தாம். எனினும், சந்தேகத்துக்கிடமின்றி அவற்றை நம்ப முடியவில்லை. ஏனெனில், சுக்கிரனின் தன்மை பற்றிய அனு மானங்கள் மிக விரிவாக இருந்தன. சுக்கிரனின் மேற்பரப்பு கடினமான பாறையாகவோ அல்லது மணற்பாங்கானதாகவோ அல்லது தூசு படிந்த தாகவோ இருக்க வேண்டும் என்று கருதப் பட்டதே தவிர நிர்மாணமாக ஏதும் தெரியவில்லை. சில விஞ்ஞானிகள் அந்தக் கோள் ஒரு 'எண்ணெய்க் கடல்" என்று கூறினர்; வேறு சிலர் அதன் மேற் பரப்பு அங்கு 'பாலிமர்'களால் ஆனது என்றனர். 1-லிருந்து 300 வாயுமண்டல அழுத்தம் அங்கு இருக் கக்கூடும் என்று கூறப்பட்டது; வாயுமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்ஸைடின் 'அளவு 1லிருந்து நூறு சதவிகிதம் என்று கணிக்கப்பட்டிருந்தது.

சுக்கிரன் குறித்து இப்படிப்பட்ட அனுமானங்கள் நிலவி வந்ததால், "வீனஸ் - 4"ல் பொருத்தப் பட்டிருந்த அளக்கும் கருவிகள் அனைத்தும், இது காறும் எவரும் அறிந்திராச் சூழ்நிலையில் இயங்க வேண்டியிருந்தது. தவிர, எவரும் அனுமானிக்கவே கடினமான ஓர் இரசாயன இயைபை அளப்பதற்குத் தகுதியான அளவுக் கருவிகள் அதில் வைக்கப்பட வேண்டியிருந்தது.

"வீனஸ் - 4" தனது வேலையை வெற்றிகர மாக முடித்தது. "அனுமானங்களின் வீச்சு" அதன் பயனாக வெகுவாகக் குறைந்தது. அக் கோளைப் பற்றிய மனிதனின் ஞானம் பல மடங்கு உயர்ந்தது.

"வீனஸ் - 4" தொடங்கி வைத்த ஆராய்ச்சி களை "வீனஸ் - 5"ம், "வீனஸ் -6ம்" தொடர்ந்து நடத்துகின்றன. இதனால் அனுமானங்கள் அந் நிலையினின்றும் பெயர்ந்து யதார்த்த நிலையை அடையும்.

நன்றி: ருஷ்ய தகவல் நிலையம், சென்னை



ஆந்திர சகோதரர்கள் புயல், மழை, வெள்ளத்தால் பெருந் துன்பம் அடைந்திருக்கும் வேளையில் நமது முதலமைச்சர் தமிழக மக்களின் அனுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் தெரிவிக்கும் பொருட்டு ஒரு தொகையை வெள்ள நிவாரண நிதிக்கு அனுப்பியுள்ளார். ஆந்திர மக்களின் கஷ்டங்கள் தீர்ந்து விரைவில் சகஜ நிலை ஏற்படப் பிரார்த்திக்கிறோம். இந்தப் பெரு மழை – வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு எப்படியோ தப்பிச் சென்னை வந்து சேர்ந்த திரு என். பஞ்சாபகேசனைப் பேட்டி கண்டு எழுதப் பட்ட இந்தக் கட்டுரை வெள்ளத்தால் மக்கள் பட்ட அவதியை நன்கு உணர்த்துகிறது.

— ஆசிரியர்

# மழை வேண்டாம்!

சென்னையில் ஒரு கல்யாண மண்டபத்தின் வாசலில் மாப்பிள்ளை அழைப்புக்காகக் கார் அலங்கரிக்கப்பட்டு வந்து நின்றது. அதேசமயம் மழை 'கொட்டு கொட்'டென்று கொட்டத் தொடங்கி விட்டது. பெண்ணைப் பெற்றவர் ''அட, மாப்பிள்ளை அழைப்பு சமயத்திலா இப்படி மழை வந்து தொலைக்கணும்'' என்று அலுத்துக் கொண்டார். சம்பந்தி என்ன சொல்வார்களோ என்ற பயம் வேறு அவருக்கு. ஆனால் சம்பந்தியோ, ''ஸார்! சென்னையில் பல மாதங்களா மழையே இல்லை. இப்போ அபூர்வமாப் பெய்யறது. உங்க மாப்பிள்ளை ரிஷ்யசிருங்கர் மாதிரி வந்திருக்காரேன்னே!'' என்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

''மாப்பிள்ளை அழைப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. மழை நன்னாப் பெய்யட்டும்! எத்தனை நாட்களா இந்த ஊர்க்காரா மழை இல்லாமல் கஷ்டப்பட்டுட்டா!'' என்று மாப்பிள்ளையே திருவாய் மலர்ந்தருளினார். எல்லோரும் மழை வேண்டியது தான் என்று பின்பாட்டுப் பாடினர். 'மழை வேண்டும், மழை வேண்டும்' என்பது சென்னை மக்களுடைய இடை விடாத பிரார்த்தனை! அதிகாரிகளோ 'இந்த ஒரு நாள் மழை போதவே போதாது. இன்னும் வேண்டும்' என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர். மழைக்காக எங்கும் வருண ஜபம் நடந்து கொண்டிருக்கிறது.

இதே நேரத்தில் அருகிலுள்ள ஆந்திரப் பிரதேசத்திலோ ''எங்களுக்கு மழை வேண்டாம்! இனிப் பெய்தால் தாங்கமாட்டோம்!'' என்று ஓலக் குரல் எழுப்பினர் மக்கள்.

சென்னையில் ஒரே ஒரு நாள் சக்கைப் போடாக மழையைப் பெய்யச் செய்து விட்டு அப்பால் நகர்ந்துவிட்ட புயல் ஆந்திராவை என்ன பாடுபடுத்திவிட்டது!

பேய் மழையோடு புயல் காற்றும் சேர்ந்து ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கடலோர மாவட்டங்களான குண்டூர், கிருஷ்ணா, நெல்லூர் ஜில்லாக்களைப் பாடாய்ப்படுத்திய தோடு, கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்கள், விசாகப்பட்டினம் ஆகியவற்றையும் ஒரு கை பார்த்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஜலப் பிரளயம்! பேய்க் காற்றிலே மரங்கள், செடி கொடிகள், பயிர் பச்சைகள் அழிந்தன. வெள்ளத்திலே ஆடு மாடுகளும் குடிசைகளும் மிதந்தன. யனடிசாங்கம் என்ற கிராமமே பூண்டோடு மறைந்து விட்டது! எங்கு பார்த்தாலும் பிணக் குவியல்கள். நீரிலே பாம்பும் நாய்களும் புகுந்து விளைவித்த சேதம் வேறு. எழுபது கிராமங்களுக்கு மேல் பத்தடி தண்ணீரில் மூழ்கின. இந்தக் கிராமங்களில் ஆள் சேதத்தைக் கணக்கிட்டு முடியாது. ஊழிக் கூத்து போல் பேய் மழையும் புயல் காற்றும் நர்த்தனமாடிவிட்டன. மூன்று நாட்களுக்கு மேல் பல நகரங்கள், கிராமங்கள் இருளில் அமிழ்ந்திருந்தன. ஆந்திர ராஜ்யத்துக்கு ஏற்பட்ட இந்தக் கொடிய சோதனையிலிருந்து மக்கள் மீளுவதற்கு வெகு காலம் பிடிக்கும். நூறு கோடிக்கு மேல் பொருள் நஷ்டம். ஆள் சேதம்...? அதை எண்ணுக்குள் அடக்கி




விமானத்திலிருந்து உணவு தள்ளப்படுகிறது.

விடலாம். ஆனால் எண்ணத்திலிருந்து அகற்ற முடியுமா? மற்ற மாநிலங்களுக்குத் தயங்காது உணவு வழங்கி வந்த ஆந்திரத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்பயிர் அழிந்து போய் விட்டிருக்கிறது. இதைவிடப் பெருங் கொடுமை வேறு உண்டா?

புயலின் கோரப் பிடியில் சிக்கி, ஹைதராபாத்திலிருந்து விஜயவாடா வழியாகச் சென்னைக்குப் புறப்பட்ட ரயிலில் பிரயாணம் செய்த மக்கள் பட்ட கஷ்டங்கள் மனத்தைப் பிழிய வைக்கும். விஜயவாடாவிலே பலத்த மழையினாலும் புயலினாலும் ஒரே இருள். ரயில் வாடி - ரெய்ச்சூர் சுற்று வழியாகச் செல்லும் என்றார்கள். பதினாறாந் தேதி மாலை

விஜயவாடாவை விட்டுச் சுற்று வழியில் புறப்பட்ட ரயில் பன்னிரண்டு மணிக்கு நடுக் காட்டில் போய்க் கொண்டிருந்தபோது புயல் பலமாகத் தாக்கியது. புயலும் மழையும் ரயிலை நகர விடாததோடு ஒரு பக்கமாகச் சாய வைத்தது. ரயிலில் உள்ளவர்கள் பலர் உருண்டு விழுந்தார்கள். பலருக்கு அதனால் பலத்த காயமேற்பட்டது. விளக்கு வெளிச்சமில்லை. ஒரே இருள். முதியோரின் முனகல் சத்தம்; குழந்தைகளின் கூக்குரல்! ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் அரை அடித் தண்ணீர் தேங்கி நிற்க அனைவருமே நீரில் குந்தியபடி தவம் கிடந்தார்கள். ஒருவர் அதிர்ச்சி தாங்காது உயிரையே விட்டு விட்டார். தண்டவாளங்களின் மேல் தண்ணீர் ஓடியது. பல மணி நேரம் இந்த அவஸ்தைக்குட்பட்ட பிறகு ரயில் ஊர்ந்து தொண்டலகோப்பாவரம் ஸ்டேஷனை அடைந்தது. மேலும் மூன்று மைல் வண்டி நகர்ந்தபோது மறுபடியும் புயல் காற்றும் மழையும் தொடர்ந்தன. அங்கே ஒரு பெரிய ஆறு. அது ரயில் பாலத்தின் மேலும் பெருக்கெடுத்து ஓடியது. ரயில்வே பி. டபிள்யூ. டி. இன்ஸ்பெக்டர் இறங்கிப் போய் அந்தப் பாலத்தின் நிலைமையைப் பார்த்துவிட்டு வந்தார். என்ஜின் டிரைவர், ''இந்த ஆபத்தான வேளையில் முன்னேற வேண்டாம்! கொஞ்சம் பின்தங்கியே இருப்போம்!'' என்று சொல்லி வண்டியைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார்.




வெள்ளப் பிரதேசம்: விமானத்திலிருந்து தோற்றம்.

அடுத்த கணம் காதைப் பிளக்கும் பேரோசை எழுந்தது. அந்தப் பிரம்மாண்டமான பாலம் உடைந்து விழுந்து நீரில் மிதக்கத் தொடங்கியது! வண்டியிலுள்ள அத்தனை பேரும் ஒருமுகமாக ''ஆ! தப்பினோம்!'' என்று பெருமூச்சு விட்டனர். திரும்பி ரயில் தொண்டலகோப்பாவரம் ஸ்டேஷனுக்கே பின்வாங்கியது. அங்கே ரயிலிலுள்ள பிரயாணிகளுக்குக் குடிக்கக் கூட நல்ல தண்ணீர் கிடையாது. ஸ்டேஷனில் தேங்கியிருந்த மழைத் தண்ணீரை வடிகட்டிச் சாப்பிட்டார்கள். இந்த ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரே ஒரு குடிசை. அதிலிருந்தவர் கோதுமையை வேகவைத்து உணவு தயாரித்துக் கொடுத்தார். ஆனால் அது எத்தனை பேருக்குக் காணும்? அவர் செய்த 'பக்கவடா' மற்றும் சிலருக்குப் பன்னிரண்டு அணுவுக்குக் கிடைத்தது. ஆலை இல்லா ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை என்ற கதைதான்!

பத்தொன்பதாம் தேதி காலையில் ''ஸார்! ரேடியோச் செய்தி. உணவுப் பொருள்களை ஆகாய விமானம் வாயிலாகப் போடப் போகிறார்களாம்!'' என்று டிரான்ஸிஸ்டர் ரேடியோ வைத்திருந்த ஒருவர் அறிவித்தார். அவர்கள் துரதிர்ஷ்டம் அவர்கள் தவித்துக் கொண்டிருந்த இடத்தில் உணவுப் பொட்டலங்கள் வந்துவிழவில்லை.

''ஸார்! மூன்று மைலில் ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே போய் அரிசி பருப்பு வாங்கி வரலாம்!'' என்றார் ஸ்டேஷன்மாஸ்டர்.

சிலநேரமான பேர் வழிகள் புறப்பட்டுப் போய் '40 கிலோ அரிசியும், 2 கிலோ பருப்பும் 2 கிலோ மாவும் 'வாங்கி வந்தார்கள். ரயிலிலுள்ள பெண்மணிகள் இவற்றைக் கொண்டு சமைத்தார்கள். இந்த உணவு வண்டியில் உள்ள குழந்தைகளின்



திரு பஞ்சாபகேசன்

வயிற்றை நிரப்பவே போதுமானதாக இருந்தது. அவர்கள் வயிறு நிறைந்ததில் பெற்றோர்களின் மனம் நிறைந்தது.

இருபதாந் தேதி காலையில் தங்கள் தங்கள் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு தண்டவாளங்களின் மீது நடந்து சென்று ரயில் பிரயாணிகள் தண்டுகூர் கிராமத்தை அடைந்தனர்.

''வாங்க! வாங்க! நீங்க வருவீங்கன்னு தெரிஞ்சு வீட்டுக்கு வீடு மூணு பேருக்குச் சாப்பாடு தயாரிச்சு வைச்சிருக்கோம்!'' என்று ஊரின் பெரிய மனிதர்கள் கூறி, மூன்று மூன்று பேராகப் பிரித்து ஒவ்வொரு வீட்டுக்கும் அனுப்பி விருந்து உபசாரம் செய்தனர். தங்கள் பயிர் பச்சை யெல்லாம் அழிந்து விட்ட

நேரத்திலும் அவதியுற்ற ரயில் பிரயாணிகளுக்கு அந்தக் கிராமவாசிகள் செய்த உபசாரத்தை என்னவென்று சொல்வது! அந்தப் பெருந்தன்மையை எப்படிப் போற்றுவது?

தண்டுகூர் கிராமத்திலிருந்து ரயில் பிரயாணிகள் அனைவரும் தங்கள் மூட்டை முடிச்சுக்களோடும், குழந்தைகளோடும் தாலுகாவின் தலைநகரான மதிராவுக்கு ஏழு மைல் நடந்தே சென்றார்கள். ஐந்து வயதுக் குழந்தைகள்கூடக் கால் வலியைப் பாராது சிரமப்பட்டு நொண்டி நொண்டி நடந்தன.

வழியில் சர்க்கார் அதிகாரிகளும், போலிஸ் அதிகாரிகளும் லாரிகளை வைத்துக் கொண்டு உதவி செய்யக் காத்திருந்தனர். மதிராவில் உள்ள எண்ணெய் ஆலையில் அனைவரையும் இறக்கி, உணவு படைத்தார்கள். இந்த மதிரா தாலுகாவில் மட்டும் இருநூறு கிராமங்கள் நீரில் அடித்துச்செல்லப்பட்டுவிட்டன. போலிஸ் ஸ்டேஷனில், செங்கற்களை அடுக்கி வைக்கிற மாதிரி பிணக் குவியலை அடுக்கி வைத்திருந்தார்கள். அழிந்த கால்நடைச் செல்வங்களுக்கோ கணக்கில்லை. இருந்தாலும் துன்பப் பட்ட ரயில் பிரயாணிகளுக்கு உதவி புரிவதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை. மூன்று நாட்கள் மதிரா தாசில்தார் அத்தனை ரயில் பிரயாணிகளையும் தம் குடும்பத்தினரைப் போல் உபசரித்தார். ஒரு குழந்தை போய், தாசில்தாரிடம், ''ஸார்! நாங்க எப்போ ஊருக்குப் போக முடியும்?'' என்று வினவியது. ''அம்மா! உங்களையெல்லாம் பத்திரமாக ஊருக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துக்கிட்டு இருக்கிறேனம்மா!'' என்று கனிவோடு பகர்ந்தார். இருபத்து மூன்றும் தேதி காலையில் ''நீங்கள் விஜயவாடாவுக்குப் போகலாம். அங்கிருந்து அவரவர் ஊருக்குத் திரும்பலாம்!'' என்று அதிகாரிகளிடமிருந்து தகவல் கிடைத்தது.

ரயில் பிரயாணிகள் நடந்தும், பிறகு காத்திருந்த ரயிலில் ஏறியும் விஜயவாடாவுக்கு வந்து சேர்ந்தனர். விஜயவாடாவிலிருந்து நான்கு பஸ்களில் இலவசமாகச் சிக்கந்திராபாத்துக்குப் பிரயாணமாயினர். சிக்கந்திராபாத்திலிருந்து அவரவர்களும் எப்படியோ உயிர் தப்பிய ஆனந்தத்துடன் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டனர். ரயிலில் வந்து புயலில் சிக்கிய ஒருவர் கல்யாண மாப்பிள்ளை. முகூர்த்தம் தவறக்கூடாது என்பதற்காக ராணுவ விமானம் ஒன்றில் அவரை ஏற்றிக் குறித்த நேரத்துக்குச் சென்னையில் மணமகள் வீட்டில் கொண்டு சேர்த்தார்கள்! இவ்விதம் அந்த ரயில் பிரயாணிகளின் துன்பம் தீர்க்க எவ்வளவோ நன் முயற்சிகள்எடுக்கப்பட்டபோதிலும்கூட அந்த ரயில் பிரயாணிகள் மனம்விட்டுச்சொன்னது: ''விரோதிகளுக்குக் கூட இம்மாதிரி துயரச் சம்பவங்கள் நேரக்கூடாது, பகவானே!'' என்பது தான்.

சென்னை அம்பத்தூரில் உள்ள ''இந்திய பிரைட் ஸ்டீல்'' கம்பெனியில் பணியாற்றும் திரு என். பஞ்சாபகேசன் தம் காரியாலய அலுவல் காரணமாக ஹிந்துப்பூர் சென்றுவிட்டுத் திரும்பியபோது புயலில் சிக்கிய ரயில் பிரயாணிகளில் ஒருவராக மாட்டிக் கொண்டார். அந்தப் பயங்கரச் சம்பவங்களைக் குறிப்பிடும்போது அவர் உள்ளம் நெக்குருகியது. ''மரணத்தின் தலைவாசலுக்கே சென்றுவிட்டுத் திரும்பி விட்டோம். ஆனால் இப்போது எங்கள் துயரம் நீங்கிவிட்டது. எங்களைக் காத்து உதவிய ஆந்திரப் பெருங்குடி மக்களோ இன்னமும் துயரத்தில் மூழ்கித் தவிக்கிறார்கள்'' என்று சொன்னபோது அவரது கண்கள் குளமாயின. பேட்டி:- **பி. எஸ். மணி**

## எஸ். என். ஆர். மறைவு

நண்பர் ஸ்ரீ எஸ். என். ராமஸ்வாமி அவர்கள் தமது ஐம்பத்தெட்டாம் வயதில் காலமான செய்தி கேட்டுச் சென்னை மோட்டார் வர்த்தகத் துறையிலும், விளம்பரத் துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களும், அவருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிமுகமான நூற்றுக்கணக்கான நண்பர்களும் உறவினர்களும் தாங்கொணாத் துயர் உறுவார்கள். அப்படியொரு ஸ்நேக தர்மத்தைக் கடைப்பிடித்து வந்தவர் ஸ்ரீ எஸ். என். ஆர். ஒருமுறை ஒருவர் நண்பரானார் என்றால் அவர் என்றென்றும் நண்பர்தான்.



திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த எஸ். என். ஆர். கல்லூரி நாட்களிலேயே தீவிரமாகத் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கல்லூரி பகிஷ்காரம் செய்தார். முப்பதாண்டுகளுக்கு மேலாக மோட்டார் டிரான்ஸ்போர்ட் துறையில் ஈடுபட்டு அதன் பொருளாதாரம், அந்நிய உதவி, உள்நாட்டு அபிவிருத்தி, போக்குவரத்து சம்பந்தமான வரிமுறைகள் யாவும் வெகு நுணுக்கமாக அறிந்து வைத்திருந்தார். இருந்த இடத்திலிருந்தே மோட்டார் போக்குவரத்து சம்பந்தமான எந்தக் கேள்வியையும் எந்தப் புத்தகத்தையும் நாடாமல் கூறி விடுவார். டி. வி. எஸ். ஸ்தாபனத்துடன் பத்து ஆண்டுகள் இணைந்து பணியாற்றினார்.

தெளிவான சிந்தனையும், அழுத்தமான பேச்சு நடையும், இனிமையான பண்பும் கொண்ட நண்பரின் மறைவு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அவருடைய குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள். ●

லட்சக்கணக்கான
மக்கள் மேலும் மேலும்
விரும்பி
உபயோகிக்கும்
பிரசித்தி பெற்ற
கூந்தல் தைலம்...

# கேசவர்த்தினி

30 வருடங்களுக்கு மேலாக குடும்பந்தோறும் பிரபலமாக உபயோகித்திலுள்ளது




கூந்தலை பட்டுபோல், மிருதுவாகவும். செழுமையாகவும் விளங்கச் செய்வது கேசவர்த்தினி ஹேர் ஆயில்.

உடனடி உபயோகத்திற்கு கேசவர்த்தினி ரெடி மிக்ஸ்

பிசுக்கை அகற்றி கூந்தலை மிருதுவாகவும், மணமுள்ளதாகவும் செய்வது கேசவர்த்தினி ஷாம்பு.

**கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்**
சென்னை - 14





# பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

## யானைப் பாகன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் — இந்தக் கதை நடந்த காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், — வலஹம்பாஹு என்னும் சிங்கள அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய காலத்திலும் தமிழர் படை இலங்கையின்மீது படையெடுத்துச் சென்றது. அப்போது வலஹம்பாஹு என்பான் தலைநகரிலிருந்து தப்பி ஓடித் தம்பள்ளை என்னும் இடத்திலிருந்த மலைக் குகையில் ஒளிந்து கொண்டிருந்தான். பிறகு அவன் மீண்டும் படை திரட்டிக் கொண்டு சென்று அநுராதபுரத்தைக் கைப்பற்றினான். அவனுக்கு

அபயமளித்திருந்த மலைக்குகையை மீண்டும் குடைந்தெடுத்துக் கோயிலாக்கினான். புத்தர் பெருமானிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காக அந்தக் குகைக்குள்ளே பெரிதும் சிறிதுமாய்ப் பல புத்தர் சிலைகளை நிர்மாணிக்கச் செய்தான். நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளை நிர்மாணித்த சிற்பிகளுக்குத் தங்கள் சிற்பத் திறன் முழுவதையும் காட்டிவிட்டோம் என்ற திருப்தி ஏற்படவில்லை. எனவே ஹிந்து தெய்வங்களின் படிமங்கள் சிலவற்றையும் புத்தர் சிலைகளுக்கு இடையில் நிர்மாணித்து வைத்தார்கள். அந்த அற்புதமான சிற்பக் கலை அதிசயங்களை இன்றைக்கும் தம்பளை என்னும் ஊரில் உள்ள குகைக் கோயிலில் காணலாம்.

வந்தியத்தேவன் அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்குள் பிரவேசித்த போது ஒரு புது உலகத்துக்குள் வந்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. புது மலர்களின் நறுமணம் அவனுக்கு மயக்கத்தை அளித்தது. வீதி முனைகளில் தாமரை மொட்டுக்களும், செண்பக மலர்களும் குப்பல் குப்பலாகக் குவிக்கப்பட்டிருந்தன. பக்தர்கள் அம்மலர்களை வாங்கி அழகிய ஓலைக் கூடைகளில் எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கிச் சென்றார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய அந்தப் பக்தர் கூட்டங்கள் தெருக்களை அடைத்துக் கொண்டு சென்றன. காவித் துணி அணிந்த புத்த சந்நியாசிகளும் ஆங்காங்கே காணப்பட்டார்கள். ''சாது சாது'' என்ற பெருங் கோஷம் பக்தர் கூட்டத்திலிருந்து எழுந்தது.



இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு மிக்க வியப்பை அளித்தன. ஆழ்வார்க்கடியானைப் பார்த்து ''நாம் யுத்த க்ஷேத்திரத்துக்கு வருவதாக எண்ணினோம். இது புத்த க்ஷேத்திரமாகவல்லவா இருக்கிறது?'' என்றான்.

''ஆம், அப்பா! ஆயிரம் வருஷமாக இது பிரசித்தி பெற்ற புத்த க்ஷேத்திரமாயிற்றே!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆனால் இது சோழ சைன்யத்தின் வசத்திலுள்ளது என்று சொன்னீரே ?''

''ஆமாம்; இப்போதும் அப்படித்தான் சொல்கிறேன்.''

''சோழ வீரர்கள் யாரையும் இங்கே காணோமே?''

''ஊருக்கு வெளியில் படைவீடுகளில் இருக்கிறார்கள். அப்படி இளவரசருடைய கட்டளை.''

''எந்த இளவரசர்?''

''ஏன், நாம் யாரைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறோமோ, அந்த இளவரசர்தான்!''

''அதைப் பற்றி உம்மைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன். இளவரசரை இங்கே தேடிவிட்டு 'இல்லை' என்று கண்டு பார்த்திபேந்திரன் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறானே? அவரை நாம் இங்கே மறுபடியும் தேடுவதில் என்ன பயன்?''

''அந்தப் பல்லவன் 'இல்லை' என்று சொன்னதனால் நான் நம்பி விடுவேனா? நானே தேடிப், பார்த்துத்தான் தெரிந்து கொள்வேன். இரணியன் 'ஹரி' என்கிற தெய்வம் இல்லை என்று சொன்னான். அதைப் பிரஹலாதன் நம்பி விட்டானா?''

''ஓ, வீர வைஷ்ணவரே! நம்முடைய நாட்டில் சைவர்களுடன் ஓயாமல் சண்டை பிடித்துக் கொண்டு வந்தீரே? இங்கே இத்தனை புத்த சந்நியாசிகள் போகிறார்கள். நீர் பாட்டுக்குச் சும்மா வருகிறீரே? என்ன காரணம்? எதிரிகளின் கூட்டம் அதிகமா யிருப்பதைக் கண்டு பயந்து போய்விட்டீரா?''

''தம்பி! பயம் என்பது என்ன? அது எப்படி இருக்கும்?''

''கறுப்பாய், பூதாகாரமாய், யானை யவ்வளவு பெரிதாக இருக்கும். நீர் பார்த்ததே யில்லையா?''

''இல்லை'' என்று ஆழ்வார்க்கடியான் சொல்லி விட்டு, வீதி ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களை அணுகினான். அவர்கள் தமிழர்கள் போல் தோன்றினார்கள். அவர்களிடம் சிறிது நேரம் ஏதோ பேசிவிட்டு ஆழ்வார்க்கடியான் திரும்பி வந்தான்.

''வைஷ்ணவரே! அவர்களிடம் என்ன கேட்டீர்? விஷ்ணு பெரியவரா, புத்தர் பெரியவரா என்று கேட்டீரா? இந்த ஊரில் யாரைக் கேட்டாலும் 'புத்தர் பெரியவர்' என்றுதான் சொல்லுவார்கள். ஒவ்வொரு புத்தர் சிலையும் எவ்வளவு பிரம்மாண்டமாய் இருக்கிறது, பார்க்கவில்லையா?''

''தம்பி! என்னுடைய வீர வைஷ்ணவத்தையெல்லாம் இராமேசுவரத்தில் மூட்டை கட்டி வைத்து விட்டு, இங்கே ராஜ காரியமாக வந்திருக்கிறேன், தெரிகிறதா?''

''பின்னே அந்த மனிதர்களிடம் என்ன கேட்டீர்? இளவரசரைப் பற்றி விசாரித்தீரா?''

''இல்லை; இந்த ஊரில் இன்றைக்கு என்ன விசேஷம்? என்று கேட்டேன்.''

''அவர்கள் என்ன சொன்னார்கள்?''

''இன்றைக்கு இங்கே சீன யாத்திரிகர்கள் இரண்டு பேர் வரப் போகிறார்களாம்; அதை முன்னிட்டு புத்த விஹாரத்தில் உற்சவம் நடக்கிறதாம்; அதனாலேதான் ஊரில் இந்தக் கோலாகலம் என்று தெரிவித்தார்கள்.''

''சீன யாத்திரீகர்கள் எங்கிருந்து வருகிறார்களாம்?''

''நேற்று இங்கு வந்துவிட்டுச் சிம்மகிரிக்குப் போனார்களாம். சிம்மகிரியிலிருந்து இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் இன்னும் சற்று நேரத்தில் இங்கே வந்துவிடுவார்கள் என்றும் தெரிவித்தார்கள்.''

''சிம்மகிரி எங்கே இருக்கிறது?''

''இங்கிருந்து காத தூரத்தில் இருக்கிறது. இன்னும் சிங்களவர் வசத்தில் இருக்கிறது. பகல் வேளையா யிருந்தால் இங்கிருந்தே பார்க்கலாம். சிம்மகிரி குன்றின் உச்சியில் ஒரு பலமான கோட்டை இருக்கிறது. அங்கேயுள்ள ஒரு குகையில் அற்புதமான அழியா வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அந்தச் சித்திரங்களைப் பார்க்கத்தான் சீன யாத்திரீகர்கள் அங்கே போயிருக்க வேண்டும். குன்றில் ஏறி இறங்குவதற்குப் பெரிதும் கஷ்டப்பட்டிருப்பார்கள்....அதோ பார்!''

ஆழ்வார்க்கடியான் சுட்டிக் காட்டிய இடத்தில் அலங்கரித்த பெரிய யானை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் அம்பாரியில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய தோற்றமும் உடையும் அவர்கள்தான் சீன யாத்திரீகர்கள் என்று புலப்படுத்தின. யானைப் பாகன் ஒருவன் கையில் அங்குசத்துடன் யானையின் கழுத்தின் மீது வீற்றிருந்தான். யானையைச் சுற்றிச் சூழ்ந்து வந்த ஜனங்கள் பலவித ஆரவார கோஷங்களைக் கிளப்பினார்கள்.

''பார்த்தாயா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''பார்த்தேன்; பார்த்தேன்! அம்மா! எவ்வளவு பெரிய யானை? பக்கத்திலே எங்கேயாவது பள்ளம் இருக்கிறதா என்று பார்க்கலாமா?''

''வேண்டாம், வேண்டாம். வீதியில் சற்று ஒதுங்கி நின்றால் போதும்.''

அவ்விதமே அவர்கள் யானை நெருங்கி வந்ததும் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றார்கள்.

யானை அவர்களைக் கடந்து சென்றது; ஜனக் கூட்டமும் யானையைத் தொடர்ந்து சென்றது.

வந்தியத்தேவன் அம்பாரியில் வீற்றிருந்த யாத்திரீகர்கள் மீதே கண்ணாயிருந்தான். புத்தர்களின் புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்காக எவ்வளவோ தூரம் பிரயாணம் செய்து எத்தனையோ கடல்களைக் கடந்து வந்த அந்தச் சீனர்களின் பக்தியை நினைத்து வியந்தான். அவர்களுக்கு இங்கே இவ்வளவு உபசாரங்கள் நடப்பது நியாயமான காரியம்தான். ஆனால் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்திலும் இவர்கள் யாத்திரைக்குப் பங்கமில்லாமல் நடப்பது எவ்வளவு அதிசயமானது! இளவரசர் அருள்மொழி வர்மரின் ஏற்பாடாகத்தான் இருக்க வேண்டும். இவ்வளவு பெருந்தன்மையான காரியங்களைச் செய்யக் கூடியவர் அவர்தான். ஆனால் இப்போது அவர் எங்கே இருப்பார்? அவரைத் தேடிப் பிடிப்பது சாத்தியமா? இந்த வைஷ்ணவனோடு இவ்வளவு கஷ்டத்துடன்

பிரயாணம் செய்து வந்தது வீணாகி விடுமோ?....

''தம்பி! பார்த்தாயா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''பார்த்தேன்.''

''என்ன தெரிந்தது?''

''சீன யாத்திரீகர்களின் முகம் சப்பையாகத் தெரிந்தது. அவர்களுடைய உடை விசித்திரமா யிருந்தது....''

''யாத்திரீகர்களைப் பற்றி நான் கேட்கவில்லை.''

'' பின்னே ?''

'' யானைப் பாகனைக் கவனித்துப் பார்த்தாயா என்று கேட்டேன்.''

'' யானைப் பாகனையா ? நான் கவனிக்கவே யில்லையே ?''

'' அழகாயிருக்கிறது. அந்த யானைப் பாகனுடைய பார்வை தற்செயலாக நம் பேரில் விழுந்ததும் அவனுடைய கண்களில் ஜொலித்த ஒளியைக் கவனிக்கவில்லையா ?''

'' அது என்ன? யானைப் பாகனுடைய கண்களில் தீவர்த்தி போட்டிருக்கிறதா ஜொலிப்பதற்கு ?''

''நல்ல ஆள் நீ ! உன் அஜாக்கிரதையை நினைத்து ஆச்சரியப்படுவதா அல்லது இவ்வளவு முக்கியமான காரியத்தை உன்னை நம்பி ஒப்புவித்து அனுப்பினாளே, அந்த இளையபிராட்டியின் காரியத்தைக் குறித்து ஆச்சரியப்படுவதா என்று தெரியவில்லை. போனால் போகட்டும். என்னோடு வா !''

யானைக்கும் யானையைச் சூழ்ந்து நின்ற கூட்டத்துக்கும் பின்னால் சற்றுத் தூரத்தில் இவர்களும்தொடர்ந்துபோனார்கள்.

புத்த விஹாரத்தின் வாசலில் வந்ததும் யானை நின்றது. பிறகு யானைப் பாகன் ஏதோ சொல்லவும் யானை மண்டியிட்டுப் படுத்தது. யாத்திரீகர்கள் இறங்கினார்கள். புத்தவிஹாரத்தின் வாசலில் கும்பலாக நின்ற புத்த பிக்ஷுக்கள் சீன யாத்திரீகர்களை வரவேற்றார்கள். சங்கங்கள் முழங்கின. ஆலாட்ச மணிகள் ஒலித்தன. விஹாரத்தின் மேல் மாடத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது. ''புத்தம் சரணம் கச்சாமி'' என்ற கோஷம் வானளாவியது. சீன யாத்திரீகர்கள் இருவரும் விஹாரத்துக்குள் சென்றார்கள். கூட வந்தவர்களிலும் பெரும்பாலோர் அவர்களைத் தொடர்ந்து விஹாரத்துக்குள்ளே சென்றார்கள்.

யாத்திரீகர்கள் இறங்குவதற்கு முன்பே யானையின் கழுத்திலிருந்து இறங்கிவிட்ட யானைப் பாகன் யானையை எழுப்பி நடத்திக் கொண்டு சென்றான். சற்றுத் தூரத்தில் நின்றிருந்த



நாலு பேரைப் பார்த்தான். அவர்களில் ஒருவனிடம் யானையை ஒப்புவித்தான். இன்னும் ஒருவனிடம் ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். மற்ற இருவரையும் அழைத்துக் கொண்டு சென்று சிறிது நேரத்தில் வீதியின் ஒரு திருப்பத்தில் திரும்பி மறைந்தான்.

யானைப் பாகன் எந்த ஆளுக்கு ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக்காட்டினானோ அவன் இவர்கள் நின்ற இடத்தை நோக்கி வந்தான். ஆழ்வார்க்கடியானிடம் மெல்லிய குரலில், ''ஐயா ! என்னுடன் வருவதற்குச் சம்மதமா ?'' என்று கேட்டான்.

''அதற்காகவே காத்திருக்கிறோம்'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''அடையாளம் ஏதாவது உண்டா?''

சேநாதிபதி கொடுத்திருந்த கொடும்பாளூர் முத்திரை மோதிரத்தை ஆழ்வார்க்கடியான் காட்டினான்.

''சரி, என் பின்னால் வாருங்கள்'' என்று சொல்லி விட்டு அவன் முன்னால் செல்ல, இவர்கள் பின்தொடர்ந்து சென்றார்கள். ஊரைத் தாண்டி அப்பால் சென்றதும் குறுகிய காட்டுப் பாதை ஒன்று தென்பட்டது. அதன் வழியே சிறிது தூரம் சென்றதும் பாதையிலிருந்து சற்று விலகியிருந்த ஒரு பாழும் மண்டபத்தை அடைந்தார்கள். அதில் சிறிது நேரம் காத்திருக்க வேண்டும் என்று அவர்களை அழைத்து வந்தவன் தெரிவித்தான். பிறகு அவன் ஒரு மரத்தின் மேலேறி அவர்கள் வந்த வழியைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

'' இதெல்லாம் என்ன மர்மம் ? எனக்கு ஒன்றும் புரியவில்லையே ?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''எல்லாம் சீக்கிரத்தில் புரிந்துவிடும். கொஞ்சம் பொறுத்திரு !'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

அந்தப் பாழும் மண்டபத்தில் பின்னால் இரண்டு குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. குதிரைகள் இரண்டுதான் என்பது வந்தியத்தேவனுக்குக் கொஞ்சம் கவலையை உண்டாக்கியது.

யானைப் பாகனைப் பற்றிய மர்மம் என்னவாயிருக்கும்? அவனுடைய முகத்தை ஒரே ஒரு கணம் வந்தியத்தேவன் கண்கள் ஏறிட்டுப் பார்த்திருந்தன. அப்புறம் சீன யாத்திரீகர்களிடம் அவன் கவனம் சென்றுவிட்டது. யானைப் பாகனுடைய முகத்தை நினைத்துப் பார்க்க ஆனமட்டும் முயன்றான். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை.

''வைஷ்ணவரே! அந்த யானைப் பாகன் யார்? எனக்குச் சொல்லக் கூடாதா?''

''யாராயிருக்கும்? நீயே ஊகித்துப் பார், தம்பி!''

''யானைப் பாகன்தான் பொன்னியின் செல்வரா?''

''அவருடைய கண்களில் ஒருகணம் ஜொலித்த பிரகாசத்திலிருந்து அப்படித்தான் தோன்றியது.''

''உம்மைப் போல் மற்றவர்களும் அவரைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்களா?''

''மாட்டார்கள். சீனத்திலிருந்து வந்த யாத்திரீகர்களுக்கு இளவரசர் யானைப் பாகராயிருப்பார் என்று யார் எதிர்பார்ப்பார்கள்? மேலும் இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இளவரசரைப் பார்த்ததும் இல்லை.''

''சீன யாத்திரீகர்கள் சிம்மகிரியிலிருந்து வந்தார்கள் என்று சொன்னீர் அல்லவா?''

''ஆமாம்.''

''சிம்மகிரி இன்னும் சிங்களவர் வசத்தில் இருக்கிறது என்று நீர் சொல்லவில்லையா?''

''சொன்னேன்.''

''பின்னே எதிரிகளுக்கு மத்தியில் போய் விட்டா இளவரசர் திரும்பி வருகிறார்?''

''சிம்மகிரி மட்டும் என்ன? பகைவருக்குட்பட்ட பிரதேசத்தின் மத்தியில் உள்ள மாஹியங்கான, சமந்த கூடம் முதலிய க்ஷேத்திரங்களுக்கும் இளவரசர் சீன யாத்திரீகர்களுடன் போய்த் திரும்பியிருக்கிறார்.''

''எதற்காக அவ்வளவு பெரிய அபாயத்துக்கு உட்பட்டார்?''

''அந்த க்ஷேத்திரங்களையும் அங்கேயுள்ள சிற்ப சித்திர அதிசயங்களையும் பார்ப்பதில் உள்ள அளவுகடந்த ஆசையினால்தான்!''

''நல்ல ஆசை! நல்ல இளவரசர்! இத்தகைய விளையாட்டுப் புத்தியுள்ளவரையா முடிமன்னர் வணங்கும் ஏக சக்ராதிபதியாவார் என்று அந்தக் குடந்தை ஜோஸியர் சொன்னார்?''

''அவ்வாறு குடந்தை ஜோஸியர் சொன்னாரா, தம்பி?''

''நீரும் அதை நம்புகிறீரா?''

''நான் ஜோசியத்தை நம்பவில்லை. ஜோசியம் பார்க்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை.''

''பின்னே என்ன?''

''ஜோசியம் பார்க்காமலேயே எனக்கு நிச்சயமாய்த் தெரியும்....''

திடீரென்று குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது. அவர்கள் இருந்த இடத்தை நோக்கிச் சத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. மரத்தின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் அவசரமாகக் கீழே இறங்கினான். இரண்டு குதிரைகளையும் பிடித்துக் கொண்டு வந்தான். ஒன்றில் தான் ஏறிக் கொண்டான். ஆழ்வார்க்கடியானை இன்னொன்றின் மேல் ஏறிக் கொள்ளச் சொன்னான். ''சற்று நேரத்தில் இந்தப் பாதையுடன் சில குதிரைகள் போகும். அவற்றின் பின்னோடு நாமும் தொடர்ந்து போக வேண்டும்'' என்றான்.

வந்தியத் தேவன், ''எனக்குக் குதிரை?'' என்று கேட்டான்.

''இவரை மட்டுந்தான் அழைத்து வரும்படி எனக்குக் கட்டளை.''

''யாருடைய கட்டளை?''

''அதைச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை.''

''இளவரசரை நான் உடனே பார்த்தாக வேண்டும். மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.''

''அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஐயா!''

ஆழ்வார்க்கடியான், ''தம்பி! கொஞ்சம் பொறுமையாயிரு! நான் போய் இளவரசரிடம் சொல்லி உன்னையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றான்.

''வைஷ்ணவரே! நான் கொண்டு வந்திருக்கும் செய்தி மிக முக்கியமானது, மிக அவசரமானது என்று உமக்குத் தெரியாதா?''

''அந்த ஓலையை என்னிடம் கொடு; நான் கொடுத்து விடுகிறேன்.''

''அது முடியாது.''

''அப்படியானால் கொஞ்சம் பொறுத்திரு; வேறு வழி இல்லை!''

''வேறு வழி இல்லையா?''

''இல்லவே இல்லை!''

வந்தியத்தேவனுடைய உள்ளம் குமுறியது. ஆழ்வார்க்கடியானை இளவரசரிடந்தான் அழைத்துப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆழ்வார்க்கடியான் அவரிடம் என்ன சொல்கிறான் என்பதைச் சேநாதிபதி கவனிக்கச் சொல்லியிருக்கிறார். அது முடியாமற் போய் விடுமே ?

குதிரைகள் நெருங்கி வந்தன ; அவர்கள் இருக்கும் இடத்தைக் கடந்து சென்றன; மின்னல் மின்னும் வேகத்தில் பறந்து சென்றன.

மண்டபத்தில் குதிரைகள் மீது ஆயத்தமாயிருந்த இருவரும் குதிரையின் முகக் கயிற்றை இழுத்துக் குலுக்கிப் புறப்படத் தூண்டினார்கள். அச்சமயத்தில் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. குதிரை மேலிருந்த மனிதனுடைய ஒரு காலை வந்தியத்தேவன் பிடித்து ஒரு எத்து எத்தித் தள்ளினான். அந்த மனிதன் தடால் என்று கீழே விழுந்தான். வந்தியத்தேவன் குதிரை மீது தாவி ஏறினான். குதிரை பறந்தது. தொடர்ந்து ஆழ்வார்க்கடியானுடைய குதிரையும் பறந்தது. கீழே விழுந்த வீரன் கூச்சலிட்டு விட்டு உறையிலிருந்த கத்தியை எடுத்து எறிந்தான். வந்தியத்தேவன் தலை குனிந்து குதிரையின் முதுகோடு ஒட்டிப் படுத்துக் கொண்டான். வீரன் எறிந்த கத்தி வேகமாகச் சென்று ஒரு மரத்தில் ஆழமாகப் பாய்ந்தது. குதிரைகள் இரண்டும் காற்றாய்ப் பறந்து சென்றன.

முன்னால் சென்ற மூன்று குதிரைகளையும் பின்தொடர்ந்து ரொம்பவும் நெருங்காமலும் ரொம்பவும் பின் தங்காமலும் இந்த இரண்டு குதிரைகளும் சென்றன. '' நல்ல வேலை செய்தாய், தம்பி !'' என்று ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை உற்சாகப்படுத்தினான். ஆனால் வந்தியத்தேவன் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. இதன் முடிவு என்ன ஆகப் போகிறதோ என்று அவன் உள்ளம் கவலையில் ஆழ்ந்திருந்தது. ஒரு பெண்ணின் வார்த்தையின் பொருட்டு எதற்காகக் கடல் கடந்து இந்தத் தூர தேசத்தில் வந்து, இத்தகைய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோம் என்ற சிந்தனையும் உதித்தது.

குதிரைகள் வாயுவேக மனோ வேகமாய்க் குறுகிய காட்டுப் பாதையில் போய்க் கொண்டிருந்தன. (தொடரும்)



## ஆனந்த நடனம்

ரசிகர்கள் மெச்ச, சபையினர் வியக்க, குழுவினர் மகிழ அடையாறு சகோதரிகள், குமாரி பத்மினியும் ராதாவும் மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கில் நடனம் ஆடினார்கள். ஆனந்தமாக ஆடினர்; கண்ணியமாக ஆடினர்.

நட்டுவனார் தண்டாயுதபாணி பிள்ளை வகுத்த ஜதிக்கும் நடைக்கும் தவறாமல் ஆடினார்கள். விறுவிறுப்புடனும், கருகருப்புடனும், இணைந்தும், பிரிந்தும் மாறியும் இரண்டு சகோதரிகளும், கண்ணுக்குக் குளுமையாக ஆடினார்கள்.

நிருத்தியத்திலும் அடைவு வகைகளிலும் நல்ல தேர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்பதை வர்ணத்துக்கு ஆடப்படும் ஆட்டத்தைக் கொண்டு மதிப்பிடுவது வழக்கம். தியாகராஜ ஸ்வாமிகளது பஞ்ச ரத்னங்களில் ஒன்றான ''ஜகதானந்தகாரகா'' கிருதியை வர்ணத்துக்குப் பதிலாக வைத்து, எந்த அம்சத்திலும் சம்பிரதாய வர்ணத்துக்கு இது குறைந்ததல்ல என்பதை அடையாறு சகோதரிகள் நிரூபித்துக் காட்டினர். நடன நுட்பங்களுக்கு இந்தக் கீர்த்தனையில்தான் எவ்வளவு விரிவான இடங்கள் இருக்கின்றன! இந்தக் கீர்த்தனையைப் பரதநாட்டிய நிகழ்ச்சியில் புகுத்தியிருப்பது இது முதல் தடவை அல்ல என்றாலும், அடையாறு சகோதரிகளின் நடன வின்யாசம் முதல்தரமாகவே இருந்தது.

பாலகோபால என்ற நீலாம்பரியின் பைரவி கீர்த்தனைக்கும் சிவனுடைய ''காவா வா''விற்கும் குமாரிகள் கையாண்ட அபிநயங்கள் ரசிக்கும்படியாக இருந்தன. உயர் பாவங்களுடைய கீர்த்தனைகளாதலால், மனமுதிர்ச்சி தேவை. பெரிய கீர்த்தனங்களைச் சிறியவர்களுக்குத் தேர்ந்தெடுப்பதிலுள்ள சிரமம் இதுதான்.

''ஏன் பள்ளி கொண்டீரய்யா !'' அடிக்கடி கையாளப்பட்ட உருப்படியானாலும் புதுமை குலையாது வழங்கப்பட்டதைப் பாராட்ட வேண்டும். ஸிந்தோணத் தில்லானா முதல் தரம்.

குமாரிகளின் குறுகுறுவென்ற பார்வையும், வசீகரமான தோற்றமும், துள்ளித் துள்ளி ஆடும் எழிலும், களிப்பை ஊட்டின.


அடையாறு சகோதரிகளின் பரத நாட்டியம் மேன்மையடையும் என்பதற்கான அறிகுறிகள் நிறைய இருக்கின்றன. —ஸ்வாமி

# துணி கிழிந்து போகிறது...



# பிரைட்* பிளாஸ்டிக் சாமான்கள் நீடித்து உழைக்கின்றன





துணியின் இலேசு, உலோகத்தின் உறுதி, கண்ணாடியின் எழில், ஆனால் இவற்றின் குறைபாடுகளற்றது-அதுதான் உங்களுக்கான பிளாஸ்டிக். இலேசு, நீடித்த உழைப்பு, வண்ணங்கள், சுத்தம், வசதி, இவையனைத்தையும் உங்களுக்கென அற்புதமாக இணைத்து வழங்குகிறது பிரைட் பிளாஸ்டிக்.

பிரைட் பிளாஸ்டிக்கில் விதவிதமான வகைகள், வகை வகையான பொருட்கள், அளவிலாப் பயனளிக்கும் ஏராளமான சாமான்கள், சீப்புகள், தட்டுகள், சோப்புப் பெட்டிகள், குவளைகள், ஜாடிகள், சாமான் கூடைகள், வாளிகள், பேஸின்கள், டிரேக்கள் இன்னும் பலப்பல.

**பிரைட்*** தான் உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு!

பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
156—ஏ, தார்தேவ் ரோடு,
பம்பாய்-34.

BB.G.117 TM

# எதிர்பாராத மகிழ்ச்சி

**கா**ஞ்சி ஆசார்யாள் சென்னையில் தங்கி இருந்த சமயம். அவர்களைத் தரிசித்து ஆண்டுகள் பதினைந்துக்கு மேல் ஆகிவிட்டபடியால், தரிசிக்க வேண்டுமென்ற துடிப்பு இருந்தும் வாய்ப்பு இல்லாமல் மனம் அதே பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தது.

திடீரென்று ஒரு நாள் என் முதலாளி என்னை அழைத்துக் கோர்ட்டுக் காரியமாய்ச் சென்னைக்கு வரும்படி கட்டளையிட்டார்.

நான் சந்தோஷத்துடன் கூட ஒரு நாள் தங்கியிருந்து தரிசனத்தை முடித்து வரலாமென்று முடிவு செய்தேன்.

ஆனால் நான் புறப்படும் சமயம் என் முதலாளி என்னிடம் எப்படியும் மறுநாளே சென்னையில் வேலையை முடித்துக் கொண்டு அன்றுமாலையே புறப்பட்டுத் திரும்பி வந்து விட வேண்டும் என்று தெரிவித்தார். நான் திகைப்புற்றேன். தரிசனத்துக்கென்றே ஒரு நாளாவது சென்னையில் தங்கினால்தானே சுவாமிகளை நிம்மதியாகத் தரிசிக்க முடியும்? மனம் குழப்பத்தி லாழ்ந்து இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தேன். சென்னையில் ரயிலை விட்டு இறங்கியதும் நேரே சுவாமிகள் இருப்பிடம் சென்று தரிசனத்தை முடித்துக் கொண்டு பிறகு மற்ற வேலைகளைக் கவனிப்பது என்ற இறுதி முடிவுடன் மதுரையை விட்டுப் புறப்பட்டேன்.



ஃஃஃ

எண்ணியது எண்ணியபடி நடப்பதில்லை அல்லவா? ரயில் தாம்பரத்தை அடைந்ததும் நண்பர் ஒருவர் என்னை ரயிலை விட்டு இறக்கி அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவர் பேச்சைத் தட்ட முடியவில்லை. ஸ்நானம் சாப்பாடு என்று காலை ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. என் முடிவுகள் தவிடு பொடியாயின. கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று மனம் நொந்து தரிசனம் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டு முதலாளியின் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினேன்.

ஒரு டாக்ஸியைப் 'பிடித்து மயிலாப்பூர் நடுத் தெருவிலுள்ள முதலாளியின் வக்கீல் வீட்டை நோக்கி விரைந்தேன்.

என்ன ஆச்சரியம்! நடுத் தெருவுக்குள் ஏகக் கூட்டமாயிருந்தது. யானைகள், குதிரைகள் முதலிய பரிவாரங்கள் நின்று கொண்டிருந்தன. விசாரித்ததில், ஸ்வாமிகள் சில தினங்களாகப் பாத யாத்திரையாய்ப் பல தெருக்களுக்கும் விஜயம் செய்து வருவதாகவும் அப்பொழுது நடுத் தெருவுக்குள் சென்றிருப்பதாகவும் சொன்னார்கள். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து நின்றதைக் கண்டு அதிசயித்து நான் கூட்டத்தை விலக்கிக் கொண்டு விரைந்தேன்.

ஜீவன் முக்தர், நடமாடும் தெய்வம் எங்கள் வக்கீல் வீட்டின் முன்னால் நின்றுகொண்டிருந்தார்! வக்கீல் பூரண கும்ப மரியாதை செய்து கொண்டிருந்தார். வக்கீலின் உறவினர் ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் வக்கீலைச் சுவாமிகளுக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தார். நான் என்னை மறந்து சுவாமிகள் முன்பாக சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுந்தேன். அவர்கள் கடைக்கண்ணால் என்னை நோக்கி அநுக்கிரகித்தார்கள். எனக்கு ரோமாஞ்சனம் ஏற்பட்டது. கண்களில்' ஆனந்தபாஷ்பம் பொங்கியது.

பகவான் பக்தர்கள் இருக்குமிடம் தேடிப் போய்க் காட்சி யளித்ததாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது ஞாபகத்துக்கு வந்தது.

திருவையாறு
ராஜகோபாலன்

(எதிர்பாராத மகிழ்ச்சி அளித்த சம்பவங்கள் இது போல் ஏதேனும் உங்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கின்றனவா? இருந்தால் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் சம்பவங்களுக்குப் பரிசு உண்டு. பிரசுரத்துக்கு ஏற்கப்படாதனவற்றைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. உறையின் மேல் 'எதிர்பாராத மகிழ்ச்சி' என்று குறிப்பிடவும்.)

(முடிவுத் தேதி: ஜூலை 15)

# ராமாயணம்

## ராஜாஜி

## 13. அகலிகை

எல்லாரும் விசாலா நகரத்தில் ஒரு நாள் தங்கி அடுத்த நாள் விடியற் காலை மிதிலை நோக்கிச் சென்றார்கள்.

ஜனகராஜனுடைய நகரத்துக்கு இன்னும் கொஞ்ச தூரம் இருக்க, மிக ரம்மியமான ஓர் ஆசிரமத்தைக் கண்டார்கள். ராமன், ''முனிவர் யாரும் இல்லாததாகக் காணப்படும் இந்தப் புராதன ஆசிரமம் யாருடையது? ஏன் இந்த அழகான ஆசிரமம் வாசம் இல்லாமல் கிடக்கிறது?'' என்று வினவினான்.

முனிவர் சொன்னார்: ''இதை நீ தெரிந்து கொள்வது அவசியம். இந்த ஆசிரமம் ஒரு சாபத்துக்கு உட்பட்டிருக்கிறது. இது கௌதம மஹா முனிவருடைய ஆசிரமம். முன்னாள் அவர் இங்கே இருந்து வந்தார்.

நீண்ட காலம் அவரும் அவர் மனைவி அகலிகையும் இங்கே இருந்து வந்தார்கள். இடையூறின்றி அவர்களது தவமும் கழிந்தது. ஒரு நாள் இந்திரன், சமயம் பார்த்து, ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கௌதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலகப் பிரசித்தமான அழகை நினைத்து அவளை அடையவும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத்தனமாக வந்த தேவராஜன் அகல்யா தேவியைப் பார்த்து, ''அழகியே! எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம்'' என்று முனிவர் சொல்வது போல் சொன்னான்.

ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் இல்லை, இந்திரன் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும் தேவராஜனே தன்னைத் தேடி வந்தான் என்று தன் அழகைப் பற்றிக் கர்வப்பட்டு மன நிலை இழந்து விட்டாள். தேவராஜனுடைய விருப்பத்துக்கு உடன்பட்டு விட்டாள்.

''பிறகு, தேவராஜனே! சீக்கிரம் அப்புறப்பட்டுப் போ. பெரும் அபாயத்தினின்று எப்படியாவது காப்பாற்றிக் கொள்'' என்று எச்சரித்தாள். இந்திரனும், ''உனக்கு நன்றி!'' என்று சொல்லி விட்டு வேகமாகத் திரும்பிப் போனான்.

வெளியில் சென்றிருந்த கௌதமர் ஸ்நான ஜபங்கள் முடித்துக் கொண்டு ஆசிரமத்துக்கு வந்து கொண்டிருந்தார். தேவதானவர்களும் பயப்படும்படியான தபோபலம் அடைந்த முனிவர் ஸ்நானம் செய்த ஈரத் துணியோடு முகத்தில் அக்னி பகவானைப் போல் காந்தி ஜொலிக்க, அன்று ஓமத்துக்கு வேண்டிய தர்ப்பையும் ஸமித்துக்களும் கையில் எடுத்துக் கொண்டு வந்தார். அவரைக் கண்டதும், அதுவரை மிகத் தைரியமாக இருந்த இந்திரன் மிக நடுங்கினான். முகம் வாடி அவர் எதிரில் வணங்கி நின்றான். ''மூடனே! என் வேஷத்தைத் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்து தகாததைச் செய்தாய்! நீ நபும்சகனாய்ப் போவாய்'' என்று கோபம் மேலிட்டுச் சொன்னார்.

சினங் கொண்ட முனிவர் இவ்வாறு சொன்ன அந்தக் கணமே இந்திரன் தன் ஆண்மையை இழந்தான். தேவர்கள் பரிதபித்தார்கள்.

முனிவர் தம் மனைவிக்கும் பிராயச்சித்தம் விதித்தார்: ''அகலிகையே! நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக ஏதொரு ஆகாரமுமின்றிச் சாம்பல் போல் படுத்து யார் கண்ணுக்கும் தென்படாமல் மறைந்து வசிப்பாயாக. பல காலம் கழித்து இவ்விடம் தசரதன் மகன் ஒருநாள் வருவான். அந்த வீரன் இந்த ஆசிரமத்தில் கால் வைக்கும்போது உன் பாபம் நீங்கும். நீ அவனை அதிதியாக வரவேற்று உபசரிப்பாய். அப்போது உன்னுடைய இயற்கைக் குணத்தையும் காந்தியையும் மறுபடியும் அடைந்து என்னுடன் வாழ்வாய்.''

இவ்வாறு சொல்லி விட்டுக் கௌதமர் நெறி தவறிய மனைவியை விட்டு

விலகி, இமயமலை சென்று விட்டார். அங்கே தவமிருக்கிறார்.

ஆசிரமத்துக்குள் நாம் செல்வோம். திக்கற்ற இந்த அகலிகைக்கு முனிவர் சொல்லியபடி நீ விமோசனம் தருவாய்'' என்றார் விசுவாமித்திர முனிவர்.

அவ்வாறே ஆசிரமத்துக்குள் சென்றனர். ராமர் உள்ளே கால் வைத்ததும் அகலிகையின் பாபம் தீர்ந்தது. பாபம் தீர்ந்து காந்தியுடன் விளங்கிய அகலிகையைக் கண்டான் ராமன். அகலிகை உலகத்தில் உள்ள எல்லா ஸ்திரீகளுடைய அழகையும் ஒன்று சேர்த்து பிரம்மாவால் ஆக்கப்பட்ட தனி அழகை அடைந்தவள். இலைகளிலும் கொடிகளிலும் மறைந்து, யாருக்கும் தென்படாமல் பல்லாண்டுகள் விரதம் காத்து வந்த அவள் அன்று பனியால் மூடப்பட்ட சந்திரனைப் போலும், புகையால் மறைக்கப்பட்ட அக்னி ஜ்வாலையைப் போலும், அசையும் ஜலத்தில் காணப்படும் சூரிய பிம்பம் போலும் ராமன் ஆசிரமத்துக்குள் சென்றபொழுது காணப்பட்டாள்.

ராமனும் லக்ஷ்மணனும் முனி பத்தினியின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தார்கள். நெடுங்காலம் காத்திருந்த அகலிகை தன்னுடைய விமோசனகாலம் வந்து விட்டதென்று மகிழ்ந்து சக்கரவர்த்தித் திருமகனுக்கு அர்க்கியம் பாத்தியம் முதலியன தந்து உபசாரம் செய்தாள். ராமனும் அங்கீகரித்தான். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்ய, அவளுடைய கொடிய பாபம் தீர்ந்து, தேவ கன்னி போல் பிரகாசித்தாள். கௌதமரும் அச்சமயம் அங்கே வந்து சேர்ந்தார்.

இது வால்மீகி ராமாயணத்திலுள்ள அகலிகை கதை. மற்ற புராணங்களிலும் கதைகளிலும் சில விஷயங்கள் பேதப்பட்டு



வழங்கி வருகின்றன. அதனால் குழப்பம் வேண்டியதில்லை.

இவ்விடத்தில் கொஞ்சம் நின்று ராமாயணம், பாரதம் முதலிய புராணங்களைப் படிக்கும் இக்காலத்தவர்களுக்குப் பொதுவாகச் சில வார்த்தைகள்.

புராணங்களில் தேவர்களும் ராக்ஷசர்களும் அடிக்கடி வருவார்கள். ராக்ஷசர்கள் என்பவர் அதர்மத்துக்குக் கொஞ்சமும் பயப்படாத துஷ்டர் குலம். சர்வ சாதாரணமாகத் தீய காரியங்களைச் செய்வார்கள்.

**இரக்கமென்(று) ஒரு பொருள்**
**இலாத நெஞ்சினர்**
**அரக்கரென்று உளர்பலர்**
**அறத்தின் நீங்கினர்**

என்று கம்பர் விளக்கியிருக்கும் கூட்டம். அசுரர்களும் ராக்ஷசர்களைப் போன்றவர்களே.

ராக்ஷசர்களிலும் கூட ஒருசிலர் அறிவாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள். எந்த நல்ல குலத்திலும் சில தீயவர்கள் உண்டாவார்கள். அப்படியே எந்தக் கெட்ட குலத்திலும் சில சமயம் நல்லவர்கள் இருப்பதுண்டு. ஆனால், மொத்தத்தில் ராக்ஷசர்களும் அசுரர்களும் கம்பர் சொல்லியிருக்கிறபடி தீய கருமங்களிலேயே ஈடுபட்டுச் சந்தோஷப்பட்ட கூட்டம். அவர்களைத் தமிழர்கள் என்றும், தம் முன்னோர்கள் என்றும் சிலர் இக்காலத்தில் அறிவினமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம். எந்தப் பழைய தமிழ் நூலிலாவது சரித்திரத்திலாவது தனிப் பாட்டிலாவது கிராமப் பாடலிலாவது இப்படிச் சொன்னதில்லை. தமிழர்களுக்கு "நீங்கள்தான் புராணத்தில் அரக்கர் என்று சொல்லப்பட்டவர்கள்" என்கிற புதுப் பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் ஆதாரமும் எங்கும் கிடையாது.

தேவர்கள் என்கிற கூட்டம் சாதாரணமாக அதருமத்துக்கு அஞ்சும் சுபாவம் கொண்ட கூட்டம். ராக்ஷசர்களை ஒழிப்பதே தேவர்களுடைய வேலையாக இருந்தது. இந்தக் காரியத்தில் புராணங்களின்படி சில சமயம் தருமத்துக்கு விரோதமான முறைகளிலும் தேவர்கள் இறங்குவதுண்டு. இதற்குக் காரணம் ராக்ஷசர்கள் தவம் செய்து பெற்ற வரங்களேயாகும். தவம் செய்து பெற்றுவிட்ட வரங்களின் பலத்தினால் உலகத்தைத் துன்புறுத்தும் அசுரர்களைத் தேவர்களால் எதிர்க்க முடியாமல் போகும். அச்சமயங்களில் தேவர்களும் ஏதோ வழி தேடி முறை தவறியும் நடக்க வேண்டியதாகும். ஆனால் மொத்தத்தில் தேவர்கள் நல்ல சுபாவம் கொண்டவர்கள். அவர்களிலும் பலர் தீய காரியங்களைச் செய்து அதனால் கஷ்டமும் படுவார்கள். அப்படிச் செய்த அதர்மங்களின் பயனைத் தேவர்களும் அனுபவிப்பார்கள். தேவர்களாயிற்றே என்று அவர்களுக்கு வேறு நியதி யில்லை. கரும விதிகளுக்கு இவர்களும் உட்பட்டவர்களேயாவர்.

தேவர்கள் மொத்தத்தில் நல்வழியில் நிற்பவர்களானபடியால் அவர்களில் யாரேனும் பிழை செய்தால், அந்தப் பிழை இப்போது படிக்கும்போது நம் கருத்தில் பெரும் பிழையாகத் தோன்றும். இது இயற்கை. வெள்ளைத் துணியில் பட்ட கறையானது கண்ணைக் குத்துவது போல்.

எப்போதுமே தீய காரியங்களில் ஈடுபட்டிருக்கும் ராக்ஷசர்களுடைய பிழை படிக்கும்போது நமக்கு அவ்வளவு பெரிதாகக் காணப்படாது.— கறுப்புத் துணியில் பட்ட அழுக்கைப் போல் மறைந்து நிற்கும்.

யோக்கியர்கள் நல்ல வழியிலிருந்து வழுவினால் அது நம்மை மிகவும் புண்படுத்துகிறது. எப்போதுமே தீய எண்ணமும் துஷ்ட காரியமுமாக இருப்பவர்களை ஐயோ பாவம் என்று விட்டு விட்டு, தரும சங்கடத்தில் சிக்கிக் கொண்டு ஏதேனும் பிழை செய்கிறவர்களை அதிகக் கடுமையாகக் கண்டித்து விமரிசனம் செய்வதும் பேசுவதும் இயற்கை. ஆனால் இது நியாயமாகாது.

புராண கர்த்தாக்களே தேவர்களை அவ்வப்போது அநீதியிலும் பாபத்திலும் சிக்கிக் கொள்ளச் செய்திருப்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதனுள் அடங்கி நிற்கும் பாடத்தைக் கற்க வேண்டும். புராண கர்த்தர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு இந்திரன் முதலிய தேவர்களும் சில சமயம் மகா பயங்கர பாபங்களைச் செய்ததாகச் சொல்லி யிருக்கிறார்கள்? தரும சங்கடங்களையும் சிக்கல்களையும் தாமே ஏன் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்? இதையெல்லாம் நாம் ஆராய

வேண்டும். இவற்றின் நோக்கம் மக்களுக்கு விவேகமும் அடக்கமும் பயபக்தியும் உண்டாக்கித் தரவே என்பது வெளிப்படை. இல்லாவிடில் முனிவர்கள் தாமாகவே தங்கள் கருத்துக்கும் நோக்கத்துக்கும் முற்றிலும் விரோதமாக நல்லவர்களுக்குச் சங்கடங்களை உண்டாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

இத்தகைய தரும சங்கட நிகழ்ச்சிகளை வைத்துச் சிலர் மூர்க்கமாகத் தவறான முடிவுகளைக் கட்டிக்கொண்டு சந்தோஷப் படுகிறார்கள். 'ராவணன் மிக நல்லவன்; அவனுடைய காரியங்களைப் பற்றி வால்மீகி இல்லாததைச் சொல்லி அவதூறு செய்திருக்கிறார். ராமன் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் அநீதி செய்தான் அல்லவா? சீதை ஒரு சமயம் பொய்யே சொல்லிவிட்டாள் அல்லவா?' என்று இவ்வாறு வாதம் செய்து பேசுவதைக் கேட்டிருக்கிறோம்.

## கல்கி நேயர்களுக்கு



ஒவ்வொரு கல்கி இதழும் ஒரு குடும்பத்தில் உள்ளவர்களை மட்டுமின்றி அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்களையும் மகிழ்விக்கிறது.

பல பேர்கள் கல்கியைக் கையிலெடுத்துப் படிக்கும்பொழுது அது நைந்து போகாமல் பத்திரமாகப் பாதுகாக்க உதவும் வகையில் உயர் ரக பிளாஸ்டிக் மேலட்டை ஒன்று தயாரித்திருக்கிறோம். இந்தப் பிளாஸ்டிக் அட்டையை ஓரிதழிலிருந்து அடுத்த கல்கி இதழுக்கு மாற்றிக் கொள்ளலாம். கல்கியின் ஆதர்ச தெய்வமான விநாயகப் பெருமானின் திருவுருவத்தைத் தாங்கி அழகுறப் பொலியும் இம் மேலட்டையைக் கல்கி காரியாலயத்துக்கு ஓராண்டு சந்தா ரூ. 20/- அனுப்பி வைப்பவர்கள் இலவசமாகப் பெறலாம். இம் மேலுறையைத் தனியே விற்பதற்கு இல்லை. தயவுசெய்து மன்னிக்கவேணும்.

இச் சலுகையை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கி மே இறுதிக்குள் சந்தாத் தொகை அனுப்பும் அன்பர்களுக்கு மட்டும் அளிப்பதென முடிவு செய்திருந்தோம். பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இச் சலுகையை மேலும் ஒரு மாதத்துக்கு, அதாவது ஜூன் மாத இறுதிவரை நீடித்திருக்கிறோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தாத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

மானேஜர், கல்கி காரியாலயம், சேத்துப்பட்டு, சென்னை - 31

எதை எப்படியேனும் எழுதும் அவகாசம் பெற்றிருந்த வால்மீகி முனிவர் ஏன் இவ்வாறு தம் கருத்துக்கே விரோதமாகவும் தம் கதாநாயகனுக்கே இழுக்குத் தரும்படியானதுமான நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கொண்டு அலைய வேண்டும்? முற்றிலும் வால்மீகியே கொடுத்த பாத்திரம் அல்லவா ராமனும் ராவணனும்? ராவணனைப் பற்றி வேறு கதையோ, சரித்திரமோ இருந்ததா? இல்லை. வால்மீகிக்கும் முன்னதாக யாரேனும் ஒரு புராணமோ, பாட்டோ, சரித்திரமோ, கல் சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறு விதமாக எழுதி வைத்திருப்பதைக் காண்கிறோமா? இல்லை. அப்படி ஏதேனும் இருக்கும் பட்சத்தில் வால்மீகி முனிவரானவர் ராமனுக்கும் சீதைக்கும் தேவர்களுக்கும் பட்சபாதமாக மாற்றியும், விஷயங்களை மூடியும் மறைத்தும் சொல்லி, சமாதானங்களைக் காட்டி நம்மை ஏமாற்றுகிறார் என்று ஒருவேளை வாதாடலாம்.

ராம கதையைப் பற்றிய விசேஷங்களைப் பெற்றது வால்மீகி நூல் வழியே தான்; வேறு எங்கிருந்தும் அல்ல. தரும சங்கடங்களைக் காட்டுவதும் அந்நூலே. பிழைகளாகத் தோன்றும் நிகழ்ச்சிகளும் அந்நூலிலேதான் கண்டோம். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று, மூளையில்குழப்பமாவது அருவையாவது இன்றி, ஆழ்ந்து ஆராய்ந்தால் அவற்றிலெல்லாம் சாதாரண மக்களுடைய வாழ்க்கைச் சிக்கல்களின் சித்திரத்தைக் காண்போம். நம்மால் பின்பற்றக்கூடிய நல்ல உபதேசத்தை அவற்றினின்று பெறலாம். நாம் உணர்ந்து நடக்கக் கூடிய நெறியைக் கண்டு பயன் அடையலாம்.

எவ்வளவு பெரிய பாபத்தைச் செய்து விட்டாலும், பச்சாதாபப்பட்டு, தண்டனையைப் பொறுத்துத் தவமிருந்தால் விடுதலை யடையலாம் என்பது அகலிகை நிகழ்ச்சியின் பாடம். பாபம் செய்த மற்றவர்களை இகழாமல் அவரவர்கள் தத்தம் உள்ளங்களில் உண்டாகும் தோஷங்களை அகற்றுவதில் முயற்சி செலுத்த வேண்டும். எவ்வளவு சுத்தமான நிலையிலிருந்தாலும் சதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது பாடம். (தொடரும்)



சென்னை சித்திர வித்தியாசாலையில் ஐந்து ஆண்டுகள் சித்திரக்கலை பயின்று தேர்வு பெற்று, இத் துறையில் மேலும் உயர்தரப் பட்டம் பெறப் பயின்று வரும் திரு முருகேசன் வரைந்த சித்திரத்தைப் பக்கத்தில் காண்கிறீர்கள். கறுப்பும் வெளுப்புமாக இப்படம் இங்கு அச்சாகி இருக்கிறதென்றாலும் திரு முருகேசன் வரைந்தது வண்ணச் சித்திரமே. 'மாடர்ன் ஆர்ட்' வண்ணப்படம் எழுத்தாளரிடம் என்ன கற்பனைகளை எழச் செய்கிறது பார்ப்போமே என்ற கருத்தில் சிலரிடம் காட்டினோம். அவர்கள் பார்த்துவிட்டுப் பேசினார்கள் : ★

# மாடர்ன் ஆர்ட் மர்மம்!

**திரு ஜெகசிற்பியன் :**

பொதுவாகக் கனவில் மக்கள் காணும் உருவங்கள் கறுப்பும் வெளுப்புமாகத்தான் தெரியும் என்பது கனவுகளைப் பற்றி ஆராய்ந்தவர்களின் முடிவு. ஆனால், வண்ணக் காட்சிகளையும் உருவங்களையும் நான் கனவுகளில் கண்டிருக்கிறேன். கவிஞன் மனம் போனபடி கற்பனை செய்கிறான். அவைகளை யெல்லாம் பிறருக்குச் சொல்லி விளக்குவதற்காக அன்று. தான் பார்த்து மகிழ்வதற்காக அவன் காணும் கனவுகளில் வண்ண உருவங்களைக் காண்கிறான். அப்படித்தான் ஒரு கவிஞன் தான் விரும்பிய மூன்று உருவங்களைக் கனவில் கண்டிருக்கிறான். அவைகளுக்கு அவன் வண்ண உருவங்களைக் கொடுத்திருக்கிறான். இன்னும் சில உருவங்களுக்கு அவனால் முழு வடிவம் கொடுக்க முடியவில்லை.

கவிஞனின் கனவில் உள்ள ஒரு பாகத்தைப் இப்படத்தில் ஒளிர்கின்றது.

**ஸ்ரீமதி கே. ஜயலட்சுமி :**

சித்திரத்தைப் பல கோணங்களில் நீண்ட நேரம் உற்றுப் பார்த்துத் திகைத்தவாறு கூறியது:

மேலை நாட்டுப் பெண்மணிகளைப் போல் தோற்றமளிக்கிறார்கள், இப்படத்தில் காணப்படும் பெண்கள். ஒரு குழந்தையை அதன் தாய் முதுகில் 'உப்பு மூட்டை' சுமப்பது போல் தெரிகிறது. எதுவும் திட்டவட்டமாக விளங்கவில்லை. சரித்திரக் கதைகளுக்கு நல்ல சித்திரங்கள் வரைந்து பத்திரிகைகளில் வெளியாகின்றனவே — அவைகளைப் பார்த்து ரசிக்க முடிகிறது. ஆனால் இந்த உருவங்களை அவ்விதம் ரசிக்க முடியவில்லையே?

இது என்ன, நமது நாட்டுச் சித்திரக்காரர் வரைந்த படமா?

**வித்துவான் வே. லட்சுமணன் :**

வலப்புறம் மேலே உள்ள ஒரு பெண்மணி கண்ணாடியின் எதிரில் நின்று அலங்காரம் செய்து கொள்ளுகிறாள். கீழே வலது பக்கத்தில் உள்ள பெண் குளிக்கப்போகிறாள். கீழே இடது பக்கம் இருவர் வாழ்க்கைப் பிரச்சினைகளை விவாதிக்கின்றனர். அதோ, இன்னும் இருவர் ஒயிலாக நடனமாடுகின்றனர். சித்திரத்தில் நான் காண்பது, ஒரு கலைக் குடும்பம். ஆமாம்; கலைக் குடும்பந்தான்!

**கவிஞர் குயிலன் :**

சித்திரத்தைப் பார்த்துவிட்டுத் தம் எண்ணத்தினை ஒரு கவிதையாகப் பொழிந்தார் கவிஞர். கவிதை இதோ:

> தலையாழித் தறைத்து
> குயிலாகாப் புடற்றி
> முயலமான் ஊட்டும்
> மாற்றுரைக்கு ஆர்வமழை
> கபமால் ஏறி
> என்னத்தை கருதி
> யேக பத்துன்!

"இதென்ன, ஒன்றுமே விளங்கவில்லையே?" எனக் கேட்டதற்கு திரு குயிலன் கூறினார்: "இதைப் படித்துப் புரிந்து கொள்ளாதவர்கள் 'மாடர்ன் ஆர்ட்'டை ரசிக்கத் தெரியாத என்போன்றவர்களே! நீங்கள் என்னிடம் காட்டிய படம் மாடர்ன் ஆர்ட் என்றால் இதை 'மாடர்ன் கவிதை' என்று புரிந்து கொள்ளுங்கள்!

கடைசியில் திரு முருகேசன் எந்தக் கருத்தில் இந்தப் படத்தை வரைந்தார் என்பதையும் தெரிந்து கொண்டு விடுவோமா? "தோளிப் பண்டிகையைச் சித்திரித்திருக்கிறேன்" என்கிறார் அவர். பேட்டி : **பாணன்**

---

திருநீர்மலைப் படிகளில் பெருமாள் தரிசனம் முடிந்தபின் சற்று ஓய்வாக உட்கார்ந்திருந்தவர்களிடம் அந்த வயோதிகர் உதவி கேட்டார்.



"ஏதோ உங்களால் முடிந்ததைக் கொடுங்கள். இதோ, இந்தக் கை நிறைந்தால் பை நிறையும்!" என்றார் உருக்கமான குரலில்.

அவர் கையில் அத்தனைத்துப் பலருடைய பர்ஸிலிருந்து பலவித நாணயங்கள் விழுந்தன. "கை நிறைந்தால் பை நிறையும்-பெருமாள் அனுக்கிரகத்தால் நிறையும்."

பையிலிருந்து சில்லறை எடுத்துப் போட்ட பலருக்கும் பெரியவருக்குச் செய்த தருமம் காரணமாகப் பை நிறையும் என்ற நம்பிக்கை.

இளைஞர் ஒருவர் கேட்டார்: "ஸ்வாமி! உங்கள் கை நிறைந்து விட்டது! பை நிறையும் என்றீர்களே, எப்போது?"

"இதோ, இப்போதே! மத்தியானச் சாப்பாட்டுக்கு எனக்கு இது போதாதா? கை நிறைந்ததற்கு அடுத்தபடியாக இந்தப் பையை"—தம் வயிற்றைச் சுட்டிக் காட்டி — "நிரப்ப ஏற்பாடு செய்தாக வேண்டுமே! இல்லையா?" என்றார். அவர் குறிப்பிட்ட பை ஒரு சாண் வயிறு!

— லயோர்


ஜி-11 கொண்ட சிந்தால்
இப்பொழுது
அதிக நறுமணமும்
நுரைவளமும் கொண்டுள்ளது
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
MEDIUM
உங்கள் நன்மைக்காக
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது
புதிய மீடியம் (மத்திய) சைஸ் சிந்தால் உங்கள் பட்ஜெட்டுக்குப் பொருத்தமானது. இந்த சோப், எல்லா விதங்களிலும் சொகுசுமிக்கது—எனினும் மலிவானதுதான்.
அதிக நறுமணம்—ஆழ்ந்த மணம், நீடித்திருப்பது.
அதிக நுரை—மென்மையும், வளமையும் கூடியது.
சிந்தாலுக்கே உரிய, ஒப்பற்ற ஜி-11 உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.
CINTHOL



# ஞான ஒளி

ஜெ.சுந்தரம்

(மேரி மாதாவின் ஒரு மெழுகுவர்த்தி காலம் என்ற காற்றில் அணைந்து விடுகிறது. பூஜ்ய அடைக்கலம் பாதிரியார் மறைந்து விட்டார். அவர் வளர்த்த பிள்ளைகளுள் இருவர் சந்தர்ப்பவசத்தால் ஒருவன் குற்றவாளியாகவும் இன்னொருவன் போலீஸ் இன்ஸ்பெக்டராகவும் அவர் உடலருகே நிற்கிறார்கள்.

அதே இடத்தில் - அவர் காலடியில் இறுதி மரியாதையை, பிரார்த்தனை ஜபத்தை மத சம்பிரதாயப்படி இருவரும் செய்கின்றனர். லாரன்ஸ் தமது தொப்பியையும், துப்பாக்கியையும் கழற்றி இறந்த பாதிரியாரின் காலடியில் வைத்துவிட்டுப் பிரார்த்தனை செய்கிறார். அச்சமயம் பிரார்த்தனை முடிந்து நிமிர்ந்த அந்தோணி தரையில் இருக்கும் துப்பாக்கியைப் பார்த்து விடுகிறான். ஓசைப்படுத்தாமல் அதிலிருந்து தோட்டாக்களை எடுத்துக் கால் சராய்ப் பைக்குள் போட்டுக் கொண்டு விடுகிறான். லாரன்ஸின் பிரார்த்தனை முடிந்ததும் அந்தோணி அமைதியாக லாரன்ஸின் துப்பாக்கியை அவரிடம் தந்துவிட நீட்டுகிறான்.)

**அந்தோணி :** இந்தா உன் துப்பாக்கி.... நான் சாவு மணி அடிச்சுட்டு வந்துடறேன்...

**லாரன்ஸ் :** (துப்பாக்கியைப் பெற்றுக்கொண்டபடியே அவனை நோக்கிப் போகக் கூடாதென்று தலையசைத்து) : அந்தோணி!

**அந்தோணி :** ஸ்... என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடாதே... உன்னை 'சார்'ன்னு கூப்பிடணும்னு எனக்குக் கற்றுத் தந்தாயில்லே! இப்ப நீயும் என்னை '199' ன்னு கூப்பிடு !

**லாரன்ஸ் :** எங்கே போறே?

**அந்தோணி :** அதான் சொன்னேனே! மாதா கோயிலுக்குப் போய்ச் சாவு மணி அடிச்சுத் தெரிவிச்சுட்டு வந்துடறேம்பா!

**லாரன்ஸ்:** நீயா! ஊஹூம்... நீ ஒரு குற்றவாளி!

**அந்தோணி :** குற்றவாளியாகவே பிறக்கலையே! அப்படி உருவாயிட்டேன். அவ்வளவுதானே?

**லாரன்ஸ்** (உறுதியாக): நீ போகக் கூடாது!

**அந்தோணி :** விடமாட்டியா! ம்... சரி, என் பணத்தை எங்கிட்டே கொடுத்துடு.

**லாரன்ஸ் :** இப்ப தரச் சொல்லலே. நீ சிறையிலிருந்து திரும்பி வரும்போதுதான் தரச் சொன்னாரு!

**அந்தோணி :** நான் திருந்திவிட்டேன். அதனாலே கேக்கிறேன். கொடு!

(லாரன்ஸ் தலையசைத்து மறுக்கிறார்.)

**அந்தோணி :** ஒருவேளை நான் ஜெயில்லேயே செத்துட்டால்? அடைக்கலம் சாமியுடைய ஆசையை யாரு பூர்த்தி செய்வாங்க? நான்தான் நல்லவனாயிட்டேனே! என்னை விட்டுடு! நான் எங்கேயாவது கண் காணாமல் போயிடறேன்.

**லாரன்ஸ் :** ஷட்அப்... அசையக் கூடாது!

**அந்தோணி :** அறைக்குள்ளே சாத்தி வைக்கப்பட்ட பிறகு, சாகப் போறோம்னு தெரிஞ்சா, கடைசி நேரப் போராட்டத்திலே பூனைகூடப் புலியா மாறிடும். ஆமா..

**லாரன்ஸ் :** ஹூ... பூச்சாண்டி காட்டுறியா?

(கால்சராய்ப் பையிலிருந்து விலங்கை எடுக்கிறார்)

**அந்தோணி :** உன் விலங்காலே இந்த விலங்கைக் கட்ட முடியாது லாரன்ஸ்! உனக்கு என் வலிமை தெரியும்... வலுக்கட்டாயப்படுத்தாதே!

**லாரன்ஸ் :** டேய், நில்லுடா!

**அந்தோணி :** ஒருவேளை நான் உன்னை மீறித் தப்பிச்சுட்டா உன்னாலே என்ன செய்ய முடியும்?

**லாரன்ஸ்:** உன் முரட்டுக் குணம் தெரிஞ்சுதான் முன் எச்சரிக்கையா துப்பாக்கியைப் பிரயோகிக்க அநுமதிபெற்று வந்திருக்கிறேன்.



**அந்தோணி :** அப்படின்னு... உன்கிட்டேயிருந்து நான் தப்பிக்கறது கஷ்டம்கிறே...


**லாரன்ஸ் :** நீ தப்பிக்க முயன்றால் சுடத் தயங்கமாட்டேன். ஜாக்கிரதை!

**அந்தோணி :** (அலட்சிய தோரணையில்) சபாஷ் இன்ஸ்பெக்டர்! உங்க கடமை உணர்ச்சியை நான் ரொம்பப் பாராட்டறேன்! என் திறமையை நீங்களும் தெரிஞ்சுக்கிறீங்களா? ... அனுப்பி வைச்சியே... மாமியார் வீட்டுக்கு! அங்கே எல்லாத்தையும் கத்துக்கிட்டேன்...

**லாரன்ஸ் :** டேய்! அசையாதே!

(லாரன்ஸ் துப்பாக்கியை நீட்டக் கடகடவென்று அலட்சியமாக அந்தோணி சிரிக்கிறான்.)

**அந்தோணி :** வெத்துத் துப்பாக்கியை வைச்சுக்கிட்டு விளையாட்டுக் காட்டாதே!



உன் குணம் தெரிஞ்சுதான் நானும் முன் ஜாக்கிரதையா துப்பாக்கி ரவையை எடுத்துக்கிட்டுத் துப்பாக்கியைமட்டும் நீட்டினேன்.

(கால் சராயிலிருந்து துப்பாக்கி ரவைகளை உள்ளங் கையில் எடுத்துக் காட்டிச் சிரிக்கிறான் அந்தோணி. கோபமும் ஏமாற்றமும் மிக லாரன்ஸ் துடிக்கிறார்.)

**லாரன்ஸ் :** அந்தோணி....!

**அந்தோணி :** ஏன் கத்தறே? அவருடைய முடிவுக்குப் பிறகு இங்கே அமைதி தேவை...

**லாரன்ஸ் :** அப்படியானால் பேசாமல் என்கூட வா!

**அந்தோணி :** ரத்த ஆற்றில் பாதி நீந்திட்டு ஏன் நடுவிலே கரையேறணும்? அதை விட முழுக்கவே நீந்திவிடுகிறேன்!

(லாரன்ஸ் இடுப்பிலிருந்து பெல்ட்டைக் கழற்றி எடுத்துக் கொண்டு அந்தோணியை மெல்ல நெருங்கி வருகிறார்.)

**அந்தோணி :** தேவனுடைய சந்நிதானத்திலே நின்னு கடைசியா உன்னைக் கேட்டுக்கிறேன். என் வெறியைத் தூண்டிவிடாதே! நீயும் என்னை மறுபடியும் மிருகமாக்கி விடாதே... என்னை விட்டுடு... நான் உன்கூட வரமாட்டேன்... எதுக்கும் துணிஞ்சு...பந்த பாசத்தை விட்டு நின்னு எச்சரிக்கிறேன்...!

(லாரன்ஸ் கடமையைக் கருதி அந்தோணியைப் பிடிக்கப் போக மிருகமாக மாறிய அந்தோணி தன் கையிலிருந்த மெழுகுவர்த்தி பொருத்தப்பட்டுள்ள உலோக ஸ்டாண்டினால் லாரன்ஸைத் தலையில் வெறியுடன் தாக்கி வீழ்த்திவிட்டுப் பணப் பையுடன் தப்பி ஓடிவிடுகிறான்.

சில விநாடிகள் கழித்து ரத்தம் வழிய லாரன்ஸ் எழுந்திருக்கும் போது அவர் காதுகளில் தொலைவில் ஒலிக்கும் மாதா கோவில் மணி ஓசை கேட்கிறது. அந்த இக்கட்டான நிலையிலும் கடமை உணர்வு தனக்கும் உண்டு என்று நிரூபிக்கும் விதமாக அந்தோணி மணி அடித்துப் பாதிரியாருக்கு இறுதி மரியாதை செலுத்திச் செல்கிறான். சிறிது நேரத்தில் மணியோசை ஓய்கிறது.

இன்ஸ்பெக்டர் லாரன்ஸ் தள்ளாடியபடியே போகிறார்.)

## இருபது ஆண்டுகளுக்குப் பிறகு

### காட்சி 10

(இன்ஸ்பெக்டர் லாரன்ஸ் வீடு. அவர் மகன் ஜார்ஜ் என்ற அடைக்கலம் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறான். நரை விழுந்த வயதான மனிதராக லாரன்ஸ் உள்ளே நுழைகிறார்.)

**ஜார்ஜ் :** என்னப்பா? உங்க பழைய சிநேகிதர்களை யெல்லாம் தெரிஞ்சுதா? கண்டு பிடிக்க முடிஞ்சுதா?

(லாரன்ஸ் பெருமூச்சு விட்டபடியே உட்காருகிறார்.)

**ஜார்ஜ் :** என்னப்பா களைப்பா இருக்கா?

**லாரன்ஸ் :** ஜார்ஜ்! இருபது வருஷங்களுக்கு முந்தி இருந்த இன்ஸ்பெக்டர் லாரன்ஸுக்கும் இப்போ இருக்கிற எனக்கும் எவ்வளவு வித்தியாசம்? இந்த ஊரோடே ஒப்பிட்டுப் பார்த்த பிறகுதான் தெரியுது. எனக்கும் வயசாயிடுச்சுன்னு.

**ஜார்ஜ் :** இப்பவாவது புரியுதா? வீம்புக்கு உத்தியோகம் பண்ணுமல் ரிடையராயிடுங்கன்னு கேட்டாத்தானே? இந்த இருபது வருஷங்களிலே இந்தியா முழுவதும் சுற்றியாகிவிட்டது. இப்போ என்னடான்னு கடைசியில் இந்தக் குப்பைக்காட்டுக்கே வலுக்கட்டாயமா மாற்றல் உத்தரவு வாங்கிக்கிட்டு வந்திருக்கீங்க.

**லாரன்ஸ்:** ஏதோ ஓர் உள்ளுணர்வு என்னை இங்கே வரச்சொல்லி வற்புறுத்தியது ஜார்ஜ். இந்த ஊருக்கும் எனக்கும் உறவு ஜாஸ்தி! இங்கேதான் நான் பிறந்தேன். இங்கேதான் நான் அடைக்கலம் பாதிரிகிட்டே அனாதையா அடைக்கலம் புகுந்தேன். படிப்பு, பதவி, குடும்பம் எல்லாமே எனக்கு இந்த ஊரிலேதான் கிடைச்சுது. என் கூட வாழ்ந்தானே... அந்தோணி! அவனும் இங்கேதான் எங்கிட்டேயிருந்து தப்பிச்சுக்கிட்டு ஓடினான். (மெல்லச் சிரித்தபடி) அவனும் இப்போ என்மாதிரி வயசானவனுத்தான் இருப்பான். மனச்சாட்சி உறுத்தினல் என்னைப் போலவே, கடைசிக்காலத்திலே அவன்கூட இங்கேதான் வந்து ஒதுங்குவான்.

**ஜார்ஜ்** (கேலியாக) **:** இருபது வருஷங்களுக்கு முந்தி ஓடினவன் இப்போ அந்த ஆளு உயிரோடு இருப்பானுங்கறதே சந்தேகந்தான். போன இடத்திலே புல்லுகூட மரமா வளர்ந்திருக்கும்.

(நகைக்கிறான்)

**லாரன்ஸ்:** அவன் என் சிநேகிதன்டா! ஆருயிர் நண்பன். அவன் உயிரோடு இருக்கும்போது எங்கே இருக்கான்னு தெரியாமல்போயிடலாம். ஆனல் இறந்தால் எனக்குத் தெரியாமல் போகாது! தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்களே, அதுபோல அவன் இறந்துவிட்டானென்றல் என் நெஞ்சம் அதை எப்படியாவது உணர்ந்துவிடும்!

"என் வெறியைத் தூண்டி விடாதே! நீயும் என்னை மறுபடியும் மிருகமாக்கி விடாதே..."



ஜார்ஜ்! இன்னமும் இந்த லாரன்ஸ் ஒரு சாதாரண இன்ஸ்பெக்டராத்தான் இருக்கேன். ஏன்னா 'பரோல்'லே நான் அழைச்சுக் கிட்டு வந்த ஒரு குற்றவாளியைத் தப்பிக்க விட்டுட்டேன் என்கிற காரணம்தான். என் சர்வீஸ் ரிக்கார்டிலே அது ஒரு பிளாக் மார்க்! என் இதயத்திலே அது ஆறாத ஒரு புண்! டேய்.. என் பெயரிலேயே என் தலையெழுத்து பொதிஞ்சு இருக்கே, தெரியாது? லாரன்ஸ். பிரிச்சுச் சொன்னால், லா...ரன்ஸ்! (Law runs) சட்டம் குற்றவாளியைப் பின் துரத்தியபடி ஓடிக்கிட்டேதான் இருக்கு. அந்தோணிக்காகவே நான் உயிரோடே உலாவிக்கிட்டிருக்கேன். ஏன்னா அடைக்கலம் பாதிரிக்குக் கொடுத்த வாக்கை இன்னமும் நான் நிறைவேற்றலையே. அப்படி ஒருவேளை நான் அவனைக் கண்டுபிடிக்காமல் செத்துட்டால்.... ஜார்ஜ்.... என் வளர்ப்புத் தந்தையின் கடைசி விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் எப்படித் துடிக்கிறேனோ, அதேபோல் உன் தந்தையின் விருப்பத்தை நீ நிறைவேற்றணும். தப்பின அவனை நீ கண்டுபிடிச்சே தீரணும்கறதுதான் உன் தந்தை லாரன்ஸின் கடைசி விருப்பமாக இருக்கும். என்னை ஏமாற்றினதாக, எங்கிட்டே யிருந்து தப்பி விட்டதாக அவன் நினைக்கலாம். ஆனால் போலீஸ் இலாகாவை அவனால் ஏமாற்ற முடியாது! கண்டிப்பா ஒரு நாள் அவன் பிடிபடுவான்!

(அப்போது வாசல்புறம் 'சார்' என்ற குரல் கேட்கிறது. நல்லசிவமும் வெங்கிட்டும் நுழைகின்றனர்.)

(தொடரும்)

# படித்துப் பாருங்கள்

## திவ்வியப் பிரபந்த பண் இசை]

தமிழ் நாட்டில் சங்க காலத்திலேயே இசை மிகவும் மேன்மையுற்றிருந்தமையும், பண்முறை நன்கு வளர்ச்சியுற்றிருந்தமையும் யாவரும் அறிந்த ஒன்றாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தென்னாட்டு இசை புதிய மறுமலர்ச்சி பெற்றது எனலாம். நாயன்மார்களுடைய தேவாரமும், ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தமும் பண் இசையோடு பாடத்தக்க வடிவங்களாகத் தோன்றின. தேவார இசை ஓதுவார்களால் இன்றளவும் பாதுகாக்கப் பெற்று வந்துளது. பிரபந்த இசை அருகிப் பெரும்பாலும் மறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேராசிரியர் எஸ். இராமநாதன் இந்தத் துறையில் மிக்க ஆராய்ச்சிகள் செய்து திருவாய்மொழி, பெரிய திருமொழி இவற்றின் 25 பாசுரங்களுக்கு அவையவை பாடப்பட வேண்டிய பண்களிலேயே இசை அமைத்து ஸ்வர தாளக் குறிப்புடன் வெளியிட்டுள்ளார். இந்த உதவிக்கு இசை உலகம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

காந்தாரப் பண்ணில் அமைந்துள்ள ''ஆராவமுதே'' என்ற பாசுரமும், பஞ்சமப் பண்ணில் அமைந்துள்ள ''ஊதும் அத்திங் குழற்கே'' என்ற பாசுரமும் உள்ளத்தை உருக்குவனவாக உள்ளன.

இசைவாணர்களும் மாணவர்களும் இந்நூலை விரும்பிப் போற்றுவர் என்று நம்புகிறேன். —முசிரி சுப்பிரமணிய அய்யர்

இசை அமைத்தவர்: எஸ். இராமநாதன்; வெளியிட்டோர்: கலைமகள் இசைக் கல்லூரி, 59—ஏ., துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி சென்னை — 5; விலை: ரூ. 2-50.

## இடிந்த கோபுரம்

இந்த நூலின் இறுதியில் இதன் ஆசிரியரைப் பற்றி உள்ள ஒரு குறிப்பு, அவர் தெய்வ பக்தி மிகுந்தவர், உண்மை ஒளியின் உயர்வை உணர்ந்தவர், ஒழுக்கத்தில் சிறந்தவர் என்றெல்லாம் வர்ணிக்கிறது. இந்த இயல்புகளைச் சிறப்பித்துக் கூறும் நாவலாகவே இடிந்த கோபுரம் அமைந்திருக்கக் காண்கிறோம்.

நாவல் இரண்டு பிரச்னைகளுடன் ஆரம்பமாகிறது. மழைக்கு ஒதுங்கும் பெண் மறு நாள் தற்கொலை முயற்சியில் இறங்குகிறாள்—அவளை என்ன செய்வது? துறவறக் கோலத்தில் வீடு திரும்பும் தம்பியை அண்ணனும் மன்னியும் காலில் விழுந்து வணங்குவதா? வேண்டாமா?

இந்தப் பிரச்னைகளுக்கு நல்ல தீர்ப்பு காணும் கதாசிரியர் இதைத் தொடர்ந்து கதையை வளர்த்துக் கொண்டே போகிறார்; லட்சியக் கருத்துக்களையும் பக்கத்துக்குப் பக்கம் உதிர்த்துக் கொண்டே போகிறார். நாவலை அச்சிட்டவர்கள் தங்கள் பங்குக்கு எழுத்துப் பிழைகளைத் தாராளமாகவே உதிர்த்திருக்கிறார்கள்.


தொடக்கத்தில் சரியான குருவைப் பெறாததால் மடத்திலிருந்து திரும்பி வரும் சேவற்கொடியோனும் தன் வாழ்வில் நேர்ந்த ஒரு சம்பவத்தால் மன அமைதி இழந்து தவிக்கும் பொற்கொடியும் இறுதியில் ஒரு மாமுனிவரை அடைந்து துறவும் அமைதியும் பெறுகின்றனர்.

துறவு பூணுவது என்பது உலகத்தின் மீதுள்ள வெறுப்பால் அன்று. துறவியாவதற்கு முன் நெருங்கிய சுற்றம், நண்பர்களிடம் அன்பு பூணுபவர் துறவியான பின் உலக முழுவதையும் அன்பால் அணைக்கிறார் என்ற கருத்து நன்கு பெறப்படுகிறது.

விறுவிறுப்பான கதை யோட்டத்தைத் தவிர்த்து உயர்ந்த கருத்துக்களுக்கே முதலிடம் தரப்பட்டுள்ள இந்த நாவலில் கதாசிரியர், மாமுனிவர் புரியும் சில அற்புதங்களை வர்ணிக்கிறார். இந்த அற்புதங்களைத் தாமே நேரில் பார்த்திருப்பதாகவும் முகவுரையில் உறுதி கூறுகிறார்.


ஆசிரியர் : கு. ராஜவேலு. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை: ரூ. 5-50.

# 'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக




கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோ ஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்:
நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளூ • ஜுர வேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.




**புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' அதிவேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது.**

நிகோலஸ் (N) தயாரிப்பு

AG.37.TAM


ராதிகாவிடம் கோபி சொல்லிக் கொண்டிருந்ததைத் தான் ஒட்டுக் கேட்ட விவரத்தை அண்ணன் பிரபாகரிடம் கூறினாள் இந்து.
அம்புலிக்கு அப்பால்... 9
கதை: புஷ்பா
படம்: விஜயா
அண்ணா! பச்சைக் கிரகத்துக்குப் போவதற்கான ராக்கெட் ரகசியமாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது!
பிரபாகர்! குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாயா? தொலைத்து விடுவேன், ஜாக்கிரதை!
கொஞ்சம் பொறுங்கள், இப்போது ஒன்றும் குடி முழுகிப் போய்விட வில்லை... அவர்கள் முயற்சியை நாம் முறியடிக்கலாம்.
எப்படி?
இந்து, நீதான் இதற்கு உதவி பண்ண வேண்டும். ராதிகா உன் தோழிதானே! அவளுடன் ஆராய்ச்சிக் கூடத்தைப் பார்க்கப் போவது போல் போ... நான் சில முக்கியமான கருவிகளைக் குறிப்பிடுகிறேன்... அவற்றை மட்டும் சேதப்படுத்தி விட்டு வந்து விடு, போதும்!
ஆபத்தான வேலையில் தானே மீண்டும் இறங்கத் தயங்கிய பிரபாகர் தங்கையின் உதவியை நாடுகிறான். இந்து இதற்கு ஒப்புக் கொண்டாள். காரணம் கோபி தன்னைக் காதலிக்கவில்லை என்ற ஆத்திரம்! அண்ணனுக்கு ஏதாவது துன்பம் நேரக் கூடாதே என்ற பயம்!
ராதிகாவைத் தேடிக் கொண்டு போனாள் இந்து.
ஹலோ ராதிகா!
உனக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறதாமே!
உனக்கு யார் சொன்னது அதற்குள்?


பல நாள் காதல் ஒரு நாள் அம்பலத்துக்கு வந்து தானே ஆக வேண்டும்! அது சரி, ஹனிமூனுக்கு மிஸ்டர் கோபியுடன் எங்கே போவதாகத் திட்டம்!
போதும், குறும்புத் தனம்!
அதிருக்கட்டும். உன் கல்யாண விஷயத்தைத் தான் மறைத்து விட்டாய். உன் அப்பாவின் ஆராய்ச்சிக் கூடத்தைப் பார்க்க வேண்டுமென்று எத்தனை நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!
அங்கு என்ன இருக்கிறது! வெறும் இயந்திரங்கள். அப்புறம் சில மனித இயந்திரங்கள்.
அதைத்தான் பார்ப்போமே.
அப்பாவிடம் சொல்லி அனுமதிச் சீட்டு பெற்று இந்துவை ராக்கெட் தளத்துக்கு அழைத்துச் சென்று காண்பித்தாள் ராதிகா.
ராக்கெட்டைப் பார்த்தாச்சா இனி கண்ட்ரோல் அறைக்கு அழைத்துப் போகிறேன் வா!
காரில் வீடு திரும்பும் போது பேசியபடியே ராதிகாவின் கைப் பையிலிருந்து அனுமதிச் சீட்டை அபகரித்துக் கொண்டாள் இந்து.
ரொம்ப நன்றி ராதிகா! நேரம் போனதே தெரியவில்லை!
வரட்டுமா? டாட்டா!
அன்றிரவு அனுமதிச் சீட்டைக் காட்டி ஆராய்ச்சி நிலையத்துக்குள் நுழைந்தாள் இந்து.
STOP
உள்ளே இருட்டான போதிலும் டார்ச்சின் உதவியால் 'கண்ட்ரோல்' அறையின் பிரபாகர் குறிப்பிட்ட நுண்ணிய இயந்திரங்களை அடையாளம் கண்டு கொண்டாள் இந்து. அதன் விசைகளைச் சேதப்படுத்த அவள் முயன்ற போது....
தொடரும்....


லிப்டன் 'ரூபி டஸ்ட் டீ'
இன்பம் தந்திடும் இனியதொரு பானம்!
சுவை செறிந்தது! மணம் மிகுந்தது!
போட்டகணமே கிட்டிடும் தேநீர்!
சிறந்த தேயிலையைப் பருகி ரசிப்பவர் புகழ்வது "லிப்டன்ஸ் ரூபி டஸ்ட் டீ'யையே!
ஒவ்வொரு ரூபி டஸ்ட் தேயிலைப் பாக்கெட்டும் தருவது அதிகக் கோப்பைத் தேநீர்!
செறிந்த மணம்! கெட்டியான பானம்! நேர்த்தியான சுவை!
பருகுவதிலோர் இன்பம்! விலையிலோ சிக்கனம்!
RUBY DUST
லிப்டன் என்றாலே நல்ல டீ
LIPTON
LRDC-1 TAM



அண்ணலின் வாழ்விலே!


# திருமணத்தின் புனிதம் குறையலாமா?

நாசிக் சிறையிலிருந்த மதுராதாஸ் விவாகரத்தை ஆதரித்து ஒரு நாடகம் எழுதினார். குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்பதை வற்புறுத்துவதற்காக-எல்லோராலும் பிரம்மச்சரிய விரதம் காக்க முடியாது என்றும், விரதம் காக்க இயலாதவர்கள் குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களைப் பயன்படுத்தலாம் என்றும் அந்த நாடகத்தில் எழுதியிருந்தார். இந்த நாடகத்தைத் தம்முடன் சிறைவாசம் செய்யும் கிஷோரிலால் பாராட்டியிருப்பதாகக் குறிப்பிட்டு, காந்திஜியின் ஆசியைக் கோரிக் கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்துக்குக் காந்திஜி எழுதின பதிலில் ஒரு பகுதி : உங்களுக்கு நாடகம் எழுத வரும் என்பது இது நாள் வரையில் எனக்குத் தெரியாதே. நவநாகரிகத்தின் பக்கத்தில் உங்களுடைய சிந்தனை செல்கிறது. சில வரம்புகளுக்குட்பட்டு விவாகரத்து வழங்குவதைப் பற்றி நான் சிந்தித்திருக்கிறேன். ஆனால் விவாகரத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்வதைப் பற்றிச் சிந்தித்ததில்லை. மனம் போன போக்கில் செயலாற்றுவது மனித இயல்பு. இன்றுள்ள மனநிலை நாளைக்கு நீடிக்கும் என்று உறுதி கூற முடியாத நிலையிலுள்ள மனித குலத்துக்கு வாழ்க்கையில் சில கட்டுத் திட்டங்கள் தேவை. திருமணம் புனிதமானது. கணவனும் மனைவியும் பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டால், விவாகரத்து அவசியமாகலாம். தகுந்த காரணங்களில்லாமல் விவாகரத்து ஏற்படுவது நல்லதல்ல. நான் பிடிவாதக்காரன் என்பது உங்களுக்குத் தெரியும். தீண்டாமை பற்றி என்னுடைய கருத்துக்களை உடனே பா ஏற்றுக் கொள்ள வில்லை என்பதற்காக அவளை விலக்கி வைக்கத் துணிந்தால் எங்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். கருத்து வேற்றுமைக்காக நாங்கள் பிரிவது என்றால் மகிழ்ச்சி இருக்குமா? பாவின் நிலைமை எப்படி இருக்கும்? நான் மீண்டும் திருமணம் செய்து கொண்டால் அந்தப் பெண் எம்மாதிரி இயல்புடையவளாக இருப்பாள்? நம்முடைய நாட்டில் திருமணத்தைப் புனிதமாகப் போற்றுகிறோம். எப்பேர்ப்பட்ட இன்னல்கள் ஏற்பட்டாலும் கணவனும் மனைவியும் இணைந்து வாழும் மரபு சிறப்பானது. ஆகவே எளிதில் விவாகரத்து செய்து கொள்ளும் பிரசாரத்துக்கு இடமில்லாமல் உங்களுடைய நாடகம் அமைய வேண்டும் என்று கருதுகிறேன். மனைவியைப் போகப் பொருள் என்றும் காம இச்சை எழும்போது அதைத் தீர்த்துக் கொள்வது கடமை என்றும் கருதும் மனிதர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு சாதனங்கள் அவசியம். மகப்பேறு இல்லாமல், காம இச்சையைத் தணித்துக் கொள்ள முயலுவது பாவம் என்பது என்னுடைய கருத்து. குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களை உபயோகிப்பது பாவத்தை ஏற்காமல் தப்பித்துக் கொள்ளச் செய்யும் முயற்சிதான். தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையை அறுவடை செய்யத் தான் வேண்டும். காம இச்சையைத் தீர்த்துக் கொள்ளத் துணிந்தவன் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பாவத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேற்கு நாடுகளில் குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களை உபயோகிப்பதால் திருமணத்தின் புனிதம் மாற்றுக் குறைந்து விட்டது. காம இச்சையைத் தணித்துக் கொள்ளும் ஆவல் வரம்பு மீறிவிட்டது. விஞ்ஞான மோகத்தாலும் நவநாகரிக மயக்கத்தாலும் நம்முடைய சம்பிரதாயங்களை மூடத்தனம் என்று ஒதுக்கிவிடக் கூடாது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் இங்கு குடும்பக் கட்டுப்பாடு காணும் முயற்சிக்கு இடமேயில்லை. இந்த நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மக்கள் — வறுமை காரணமாக— உடல் பலமிழந்து உள்ளம் சோர்ந்து வாழ்க்கை நடத்துகிறார்கள். வரம்பின்றி மோகம் அனுபவிக்கும் வாய்ப்பும் கிடைத்து விட்டால் இவர்களுடைய முன்னேற்றம் தடைப் படாதா? எதிர்கால மக்களின் வாழ்க்கை பாழ்த்து விடாதா?

## நம்பிக்கை (1925)

காந்திஜி கிழக்கு வங்காளத்தில் சுற்றுப் பயணம் செய்து விட்டு டாக்காவுக்கு வந்த போது, ''நாமசூத்ரா'' என்று தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒரு கிழவன் அவரைத் தரிசிக்க வந்தான். சுமார் எழுபது வயதான அந்த மனிதன், காந்திஜியின் திருஉருவப் படத்தைத் தாயத்துப் போலக்





ஓர் அமெரிக்க மாது தனக்கு நாலாவது குழந்தை வேண்டாம் என்று கூறி விட்டாள்.

உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு நாலாவது குழந்தையும் சைனாக்காரன் என்று அவள் எங்கோ படித்ததுதான் அவள் பயத்துக்குக் காரணம்!

(எஸ். ஒய். கிருஷ்ணசாமி பேசிய பேச்சில் ஒரு துணுக்கு) தகவல்: ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி

---

கழுத்தில் கட்டியிருந்தான். பல ஆண்டுகளுக்கு முன்பு பாரிச வாயுவினால் கஷ்டப்பட்டதாகவும் பலரிடம் சிகிச்சை பெற்றும் நோய் குணமாகாத சமயத்தில் காந்திஜியின் பெயரைக் கேட்டதாகவும், காந்திஜியின் திருநாமத்தைச் சொல்லித் தாயத்தை அணிந்து கொண்டதும் பூரணமாகக் குணமடைந்து விட்டதாகவும் கூறி, "நீங்கள் தான் எனக்குக் கண் கண்ட தெய்வம்" என்று சொல்லிக்கொண்டு, நீர் மல்க, காந்திஜியை விழுந்து வணங்கினான்.

"அப்பனே! நீ குணமடைந்ததற்கு நான் காரணம் அல்ல. இறைவன் திருவருளால் நீ பிழைத்தாய்" என்றார் காந்திஜி.

ஆனால் அவன் ஏற்கவில்லை. அவனுடன் வாதாடுவதில் பயனில்லை என்று தெரிந்ததும், காந்திஜி, "அப்பனே! என்னிடம் நம்பிக்கை இருக்கிறதல்லவா? நான் சொல்வதைக் கேள். முதலில் அந்தத் தாயத்தைக் கழற்றி (காணிக்கையாக) என்னிடம் கொடுத்துவிடு. கடவுளுடைய திருநாமத்தை ஜபித்துக் கொண்டிரு" என்றார்.

அவன் உடனே தாயத்தைக் கழற்றிக் காந்திஜியின் பாதத்தில் வைத்து அவரை வணங்கிவிட்டு, இறைவன் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே விடைபெற்றான்.

## நிபந்தனை (1943)

**பா**வுக்குச் சுவையாகப் பலப்பல பணியாரங்களைச் செய்யத் தெரியும். காந்திஜியின் உணவு முறையில் மாறுதல் ஏற்பட்ட பிறகு அவற்றைத் தயாரிப்பதில் பா அக்கறை காட்டுவதில்லை. ஆயினும் விருந்தினர்களை உபசரிப்பதற்காகச் சில சமயங்களில் சமையல் செய்வதுண்டு. ஆகாகான் மாளிகையில் டாக்டர் கில்டருக்கும் மற்றவர்களுக்கும் வழங்குவதற்காக, தம்முடைய மேற்பார்வையில் சிற்றுண்டிகளைத் தயாரிக்கும்படி மனுபஹனிடம் அவர் கூறுவதுண்டு. நோய்வாய்ப்பட்ட பிறகு, ஒரு நாள் பூரணபோளி தயாரிக்கும்படி பா கூறினார். "இன்று நானும் சாப்பிடப் போகிறேன். பாபுவும் சாப்பிடுகிறாரா கேள்" என்று அவர் மனுபஹனிடம் சொன்னார். மனுபஹன் காந்திஜியைக் கேட்டபோது "பா சாப்பிடவில்லை என்றால் நான் சாப்பிடுகிறேன்" என்று காந்திஜி விடையளித்தார். கலபமாக ஜீரணிக்க முடியாத பண்டங்களைச் சாப்பிட்டால் பாவுக்கு நெஞ்சுவலி தோன்றுவதால், பா சாப்பிட வேண்டாம் என்று கூறுவதற்குப் பதிலாக இம்மாதிரி விடையளித்தார் காந்திஜி. அவர் கூறியதை மனுபஹன் மூலம் கேட்டதும் பா, தம்முடைய உத்தேசத்தை மாற்றிக் கொண்டார். அன்று தயாரித்தவற்றைக் காந்திஜிக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்து உபசரிப்பதில் மகிழ்ச்சி யடைந்தார். ருசி பார்ப்பதற்குக் கூட ஒரு துண்டு பூரணபோளியைத் தம்முடைய வாயில் பா போட்டுக்கொள்ளவில்லை. காந்திஜியின் கட்டளையை நிறைவேற்றுவதில்தான் திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டு என்பதைக் கண்டவர் அல்லவா?

## பாபுவின் பதில் (1933)

**கா**ந்திஜியைச் சந்திப்பதற்காக 6–5–33 அன்று ஒரு ஹரிஜன மாணவன் வந்தான். பல மணி நேரம் காத்திருந்தும் அவனுக்குக் காந்திஜியின் தரிசனம் கிடைக்கவில்லை. அவன் காத்திருப்பதை அறிந்த மகாதேவ தேசாய், மாலை ஆறு மணிக்கு அவனைக் காந்திஜியிடம் அழைத்துச் சென்றார். அந்த மாணவன் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு உபகாரச் சம்பளம் கோரிக் காந்திஜியின் உதவியை நாடினான். கல்லூரி முதல்வரிடம் இருந்து சான்றிதழ் கொண்டு வந்தால் உதவ முயல்வதாகக் காந்திஜி கூறியிருந்தார். அந்த மாணவன் பல இடையூறுகளைச் சமாளித்து, பரீட்சையில் தேறியதுடன், கல்லூரி முதல்வரிடம் சான்றிதழையும் பெற்று வந்திருந்தான். அந்தப் பையனுடைய கதை மகாதேவ தேசாய்க்குத் தெரியும்.

"நிமிஷ நேரம் கூட ஒதுக்க முடியாமல் வேலை இருக்கும் இந்நேரத்தில் இந்த மாணவனை எதற்கு அழைத்து வந்தீர்கள்?" என்று பாபு கேட்டார். அந்த மாணவனைப் பற்றிய செய்தியை மகாதேவ தேசாய் கூறியதும், பாபுவுக்குத் தாம் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது.

"அவனுக்குத் தேவையான உதவியளிப்பது பற்றி தாக்கர் பாபா (ஹரிஜன சங்கச் செயலாளர்) கவனிப்பார் என்று உங்களிடமிருந்து உறுதி பெறுவதில் அவன் ஆவலாக இருக்கிறான்" என்றார் தேசாய்.

"நல்லது. நான் உறுதி அளிக்கிறேன். உனக்குத் திருப்திதானா? ஆனால் என்னை ஏன் கேட்கிறாய்?" என்று அந்த மாணவனைப் பாபு கேட்டார்.

அந்த மாணவன், தன்னிடமிருந்த மலர்களை காந்திஜியின் பாதத்தில் வைத்து அவரை வணங்கினான். "உங்களிடம்தான் எனக்கு நம்பிக்கை. மற்றவர்கள் மனப்பூர்வமாகச் செயலாற்றவில்லை. அதனால் அவர்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை."

"என்னுடைய சகாக்கள் அனைவரும் மனப்பூர்வமாகச் செயலாற்றவில்லை என்றால் நான் அவர்களை விட மோசமானவன். என்னிடமும் நம்பிக்கை வைக்காதே" என்றார் பாபு.

—கே. எஸ். ஜே.

# காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்




அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்... உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.

காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல. குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!






## காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் தரமான தயாரிப்பு


CB 6-21 TAM.



லின்டாஸ்.L. 52-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

## குறட்டை விடுவோர் சங்கம்!

அமெரிக்காவில் நடக்கும் பல விவாகரத்துக்களின் காரணம் குறட்டைதான்! 'கணவன் குறட்டை விடுவதால் தூக்கம் பாதிக்கப்படுகிறது' என்று காரணம் காட்டி அங்கு பல மனைவிகள் தங்கள் கணவன்மார்களை விவாகரத்து செய்து விடுகிறார்கள். அப்படி விவாகரத்து செய்யப்பட்ட கணவன்மார்களெல்லோரும் சேர்ந்து 'குறட்டை விடுவோர் சங்கம்' என்று ஒரு சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் இஷ்டப்படி தூங்குவதற்காகவே ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்திருக்கிறார்கள். இரவில் எல்லோரும் அங்கு வந்து ஆனந்தமாகக் குறட்டை விட்டுத் தூங்குகிறார்கள். இதில் குறட்டை நிபுணராக விளங்கும் ஒருவரின் பெரிய குறட்டை சில சமயம் மற்றவர்களுக்குத் தூக்கம் வராமல் செய்து விடுகிறது. அதனால் எல்லோரும் தூங்கிய பிறகு அந்தக் கட்டடத்துக்கு வந்து தூக்கத்தை ஆரம்பிக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்!



ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்

தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

இறந்து போன முதல் மனைவி இப்பொழுது இருந்தால் எவ்வளவு வயது இருக்குமோ அதை விடக் குறைந்த வயதுள்ள



பெண்ணை மணக்கக் கூடாது என்று ஒரு சட்டம் வந்தால் இரண்டாவது திருமணங்கள் அபூர்வமாகி விடும். --"பாபு"

## உணவு உற்பத்தியைக் குறைக்க முயற்சிகள்!

இப்படியும்கூட முயற்சி நடக்குமா என்று அதிசயிக்கிறீர்களா?


ஜூலை 1980க்குள் ஐந்நூறு லட்ச ஐரோப்பிய விவசாயிகள் தங்கள் விவசாயத்தை விடவேண்டியிருக்கும். வேலை செய்வோர் தொகையில் விவசாயிகள் எண்ணிக்கை இப்போதே சீராகக் குறைந்திருப்பினும் விவசாய உற்பத்தி உபயோகிக்கும் அளவை விட மிக வேகமாக அதிகரிக்கிறது. ஆகவே 1980க்குள் உபயோகப்படுத்தப்படும் நிலம் 700 லட்ச ஹெக்டர்களிலிருந்து 650 லட்ச ஹெக்டர்களுக்குக் குறைக்கப்படும்.

-- ஃபிராக் நியூஸ்

## யானையைக் காணோம்!

கராச்சி மிருகக் காட்சிச் சாலைக் கணக்குப்படி அங்கு மூன்று யானைகள் இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் இரண்டு யானைகள் தான் இருக்கின்றன. மூன்றாவது யானை என்ன ஆயிற்று என்று ஆராய்ந்து வருகிறார்கள். — லிங்க்

—'பாலி'




## குதிரை கொடுத்தால் கார் கிடைக்கும்!

நாற்பது வருடங்களுக்குமுன் புதுடில்லி செய்தித் தாள்களில் பின்வரும் விளம்பரங்களைப் பார்க்க முடிந்தது: "செவர்லெட் கார் விலை: ரூ. 2675-00; போர்ட் கார் விலை: ரூ. 2415-00. ஓட்டிப் பார்த்துவிட்டுப் பணம் கொடுக்கலாம். சுலபமான தவணைகளில் பணம் கொடுத்தால் போதும்."



இப்படி விளம்பரப்படுத்தினால் கூட அந்தக் காலத்தில் இரட்டைக் குதிரை சாரட்டுக்குத்தான் மதிப்பு அதிகம்! அதனால் செய்தித் தாள்களில் பின்வரும் விளம்பரத்தையும் பார்க்க முடிந்தது. "6000 மைல்கள் மட்டுமே ஓடிய புதுக் கார். இதை எடுத்துக்கொண்டு பதிலுக்கு இரட்டைக் குதிரை சாரட் கொடுக்கத் தயாராக இருப்பவர்கள் விண்ணப்பிக்கவும்."



ஆறு எழுத்துள்ள ஊர் நான். முதல் எழுத்து காதில் உள்ளது, மூக்கில் இல்லை; இரண்டாம் எழுத்து இஞ்சியில் உள்ளது, கக்கில் இல்லை; மூன்றும் எழுத்து சிப்பில் உள்ளது, கண்ணாடியில் இல்லை; நான்காம் எழுத்து கோபுரத்தில் உள்ளது, குடிசையில் இல்லை; ஐந்தாம் எழுத்து மரத்தில் உள்ளது, செடியில் இல்லை; ஆறும் எழுத்து மாம்பழத்தில் உள்ளது, மாங்காயில் இல்லை.

அது என்ன ஊர்?

விடை: காஞ்சிபுரம்

தகவல்: ரமணன்

# தீராத விளையாட்டு

**அத்தியாயம் 13**

அழகர் ஆற்றில் இறங்குவதைப் பார்ப்பதற்கு வீட்டோடு எல்லோரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள். ஆனால் ரங்கராஜன் மட்டும் போகவில்லை; வீட்டிலேயே இருந்தான். கூட்டத்தையும் நெரிசலையும் தன்னால் தாங்கமுடியாது என்று சொல்லி விட்டான். மற்றவர்களும் அவனை வற்புறுத்தவில்லை. சென்ற வருஷமும் இதே காரணத்தைச் சொல்லி அவன் ஆற்றுக்கு வரமறுத்து விட்டதால், இப்பொழுதும் எவ்வளவு வற்புறுத்தினாலும் அவன் வரமாட்டான் என்று எல்லோரும் கருதினார்கள்.

திருப்புவனத்திலிருந்து வந்திருந்த தம்பதிகள் சூரியோதயத்துக்கு முன்பே எழுந்து போய்விட்டார்கள். முதல் நாள் இரவு அங்கே சாப்பிடச் சொல்லியும் அவர்கள் சாப்பிடவில்லை. கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வந்திருப்பதாகவும், அதை எடுத்துச் சாப்பிட்டுக் கொள்வதாகவும் தண்ணீர் மட்டும் கொடுத்தால் போதும் என்றும் சொல்லி விட்டார்கள். அப்படியே கட்டுச் சோற்றை




# கு. அழகிரிசாமி

அவிழ்த்துச் சாப்பிட்டார்கள். பிறகு படுத்துத் தூங்குவதற்கு வராந்தாவுக்கே போய்விட்டார்கள். வெளியே காற்றுடப் படுத்துக் கொள்வதுதான் தங்களுக்குச் சௌகரியம் என்று அவர்கள் சொன்னதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், சொன்ன விஷயம் உண்மையாகவும் இருந்ததால் அவர்கள் விருப்பப்படியே விட்டுவிட வேண்டியதாயிற்று. அவர்கள் சாப்பிடுவதற்கு முன்பு ரங்கராஜனை அருணாசல 'முதலியார் தனியே மொட்டை மாடிக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பயமுறுத்தியதும், அவரே பயந்ததும் நூற்றுக்கு நூறு பொய்த்துப் போய் விட்டன. கிராமத்து ஜனங்கள் அப்பாவிகளைப் போல் இருந்தாலும், பனிச்சென்று எதையாவது பார்த்தால் திருடி விடுவார்கள் என்று அவர் அவனிடம் சொன்னார். இந்தக் காலத்தில் யாரையும் நம்புவதற்கில்லை என்'றும், ஏழைகள் என்று இரக்கப்பட்டு விட்டால் அப்புறம் தலைக்கே ஆபத்து வந்தாலும் வரக்கூடும் என்றும் எச்சரித்தார். மொத்தத்தில் அந்தக் கிராமத்



# Its the look of the Century...



in the dash of styling and the comfort of textiles made by Century Mills, pure, soft, feather-light cotton sarees that meet the challenge of every occasion, every mood

- Cotcell-o (wash-n-wear)
- Silken touch
- Lakes beauty

**CENTURY**
**SPG. & MFG. CO. LTD.**
Century Bhavan,
Dr. Annie Besant Road, Worli, BOMBAY-25 DD.

ADROIT/CENT

துக் குடும்பத்தை அதிவிரைவில் கிளப்பி விட வேண்டும் என்றும், அங்கே இரவு தங்கினாலும், வராந்தாவில் தங்கி விட்டுப் போகட்டும் என்றும் சொன்னார்.

"ராஜா! காலம் சரியில்லே. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குறவங்களா இருக்கிறாங்க. பட்டிக்காட்டு ஜனங்களோடே சங்கதி உனக்குத் தெரியாது."

ரங்கராஜன் மறுத்துப் பேசினான்: "என்ன சித்தப்பா, நீங்க சொல்றது! பிள்ளை குட்டியோட வந்த ஒருத்தன் திருடுவானா? அதிலும் கோயிலுக்கு நேர்த்திக் கடன் செலுத்த வந்தவன்?"

"ராஜா! நீ என்ன சொல்லறே? நேர்த்திக் கடனும் செலுத்துவான்! அக்கம்பக்கத்திலே ஆளில்லேன்னா, சாமி நகையையே திருடிக்கிட்டும் ஓடிருவான். படிக்கிறது ராமாயணம், இடிக்கிறது பெருமாள் கோயிலப்பா!"

திருப்பூவணம் குடும்பம் அவருடைய பயத்தைப் பற்றி அறியாத நிலையிலேயே, அதை அறவே போக்கிவிட்டது. வெளியே படுத்திருந்துவிட்டு விடியுமுன் தனது மூட்டை முடிச்சுக்களையும் எடுத்துக் கொண்டு போய்விட்டது.

வீட்டின் சமையற்காரக் கிழவியும் மற்றவர்களோடு சேர்ந்து அழகரைச் சேவிக்கப் போய் விட்டாள்.

மாடியறையில் தனியே உட்கார்ந்து ரங்கராஜன் சிறிது நேரம் ரேடியோ கேட்டான்; பிறகு ஒரு வாரச் சஞ்சிகையை எடுத்து வாசித்தான். அப்போது தனிமையின் சிரமத்தை மெல்ல மெல்ல உணரத் தொடங்கினான். மற்றவர்களோடு தானும் போயிருக்கலாம் என்றுகூட ஒருகணம் தோன்றியது. சஞ்சிகையைக் கீழே போட்டு விட்டுப் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

சித்தப்பாவின் மனப்பான்மையையும், ஏறக்குறைய அவருடைய குணத்தையும் அப்படியே வடித்து வைத்தது போல் தங்கத்துக்கு வாய்த்துள்ள சுபாவத்தையும் எண்ணிப் பார்க்கும் போது, அந்த இருவருக்கும் தனக்கும் இடையே அத்தியந்தமான அன்பு இருந்த போதிலும், அதே சமயத்தில் பெரிய இடைவெளியும் இருக்கிறது என்பதை உணர்ந்தான். அந்த இடைவெளியை இந்த ஜன்மம் முழுதும் முயற்சி செய்தாலும் கடந்துவிட முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஒரு காரணமும் இல்லாமலே மற்றவர்களைத் திருடர்கள் என்று அவர் நினைக்கிறார்; அவருடைய மகளோ அதே போல் காரணமின்றியே கோடி வீட்டுப் பெண்ணைப் பற்றி இழிவாகப் பேசுகிறாள்.....

ரங்கராஜனின் சிந்தனை ஓடிக்கொண்டிருக்கும் போது, கீழே, "அம்மா! அம்மா!" என்ற குரல் கேட்டது. அது யாருடைய குரல் என்று அவனுக்கு உடனடியாகவே தெரிந்து விட்டது. தெரிந்து என்ன பிரயோசனம்? இவன் எழுந்து போய்ப் பசிக்கு ஏதேனும் எடுத்துப் போட்டாலும் அந்தப் பைத்தியக்காரன் வாங்கிக் கொள்ள மாட்டான் என்பது நிச்சயம். அவன் சாப்பிடுவதென்றால் ஜானகியம்மாள் கரத்திலிருந்து சோறு பெற வேண்டும்.

பைத்தியக்காரன் திரும்பத் திரும்ப "அம்மா, அம்மா!" என்று கூவிக் கொண்டே இருந்தான். அப்படியே விட்டு விட்டால் இரவு வரையிலும் கூட அவன் கூவுவதை நிறுத்தமாட்டான் என்று தோன்றியது.

அவன் சாப்பிட ஒருவேளை இசைந்தால், அதற்கும், சாப்பிட மறுத்தால் அப்பால் போகச் செய்வதற்கும்—இரண்டுக்கும் ஒரே உபாயமாக ரங்கராஜன் கீழே இறங்கி உள்ளே போய் ஒரு வாழை இலைத் துண்டை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். இலையைப் பார்த்ததும் பிச்சைக்காரன் வந்த வழியிலேயே திரும்பிப்போய்விட்டான்.

அவனுடைய பரிதாப நிலையைப் பார்த்தவண்ணம் நின்ற ரங்கராஜன், திரும்பவும் மாடிக்குப் போக நினைக்காமல் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிவிட்டுத் தெருவில் இறங்கினான்.

'விஜயாவை ஒரு முறை பார்க்கலாமே.'

இந்த எண்ணத்துடன், இதே எண்ணத்துடன்தான் நடந்தான். ஆனால் இந்தச் சிறு ஆசைகூட - நீர்க்குமிழி போல் தோன்றிய ஆசைகூட — நிறைவேறவில்லை. நீர்க்குமிழியைப் போலவே ஒரு நொடியில் மறைந்து விட்டது.

விஜயாவின்வீடு சாத்தப்பட்டிருந்தது.

"அவர்களுக்கு மட்டும் திருவிழா இல்லாமல் போய் விடுமா? ஆற்றுக்குப் போயிருப்பார்கள்!"

தெற்கு ஆவணி மூல வீதி நெடுகிலும் வேனில் பந்தல் போடப்பட்டிருந்தது. கூட்டத்தினிடையே விலகி விலகிக் கொடுத்துக் கொண்டு ஒருவித குறிக்கோளுமின்றி நடந்து போனவன் கிராமத்து ஜனங்களைப் பார்த்து உள்ளத்தைக் களிவித்துக் கொண்டிருந்தான். இப்படியே ஒரு பர்லாங் தூரம் போனவன், பழையபடியும் திரும்பி வந்தான். ஓரிடத்தில் இளநீர் வாங்கிக் குடித்தான். உடனே வீட்டை நோக்கி நடந்து வந்து பழையபடியும் மாடியறையில் போய்ப் படுத்து விட்டான்.

விஜயாவைப் பார்த்தால் நன்முக இருக்கும் என்று அப்பொழுது தோன்றியதே ஒழிய, பார்க்க முடியாமல் போனதில் அவனுக்கு ஏமாற்றம் எதுவும் இப்பொழுது உண்டாகிவிடவில்லை. தன் தாயாரின் கால்களில் அவள் பூப்போட்டு வணங்குவதாகச் சொன்ன சொற்களில் அவனுக்கு எவ்வித விசேஷ உணர்ச்சியும் ஏற்படவில்லை. இப்படியும், இதை விடவும் எத்தனையோ பலர் தன் தாயாரைப் போற்றியதையும், புகழ்வதையும், வியந்ததையும், அவன் காதாரக் கேட்டிருக்கிறுன். பரவச மொழிகளைக் கேள்விப்படுவது அவனுக்குச் சகஜமாகி விட்டதால், விஜயாவின் சொற்களை ஓர் அலாதி அநுபவத்துடன் துய்ப்பதற்கு அவனுல் முடியவில்லை. ஆனுல், தங்கம் அவளை ஏழை என்றும், படிக்காதவள் என்றும், டாம்பீகக்காரி என்றும் தாழ்வாகப் பேசி விட்டதால், அதற்குத் தானே பிராயச்சித்தம் செய்வது போல் அவளைப் பார்த்து, முடிந்தால் ஏதாவது இரண்டு வார்த்தை பேசலாம் என்று நினைத்தான். அவனுக்கு ஒரே ஒரு விஷயம் மட்டும் மர்மமாக இருந்தது. சாத்தூரிலிருந்து திரும்பி வரும் போது, அவளை நோக்கிப் புன்னகை செய்ததையும், நமஸ்காரம் சொன்னதையும் அவள் புறக்கணித்து விட்டவள் போல் நின்றது எதற்கு? இதுதான் அவனுக்குப் புரியவில்லை.

ஒரு வேளை, தங்கம் மற்ருெரு முறையும் அவளை நேரில் சந்தித்து, தன்னிடம் பேசியது போல் அவளிடமும் பேசி விட்டாளோ ?

ரங்கராஜனுக்கு இப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டாலும் அதுவும் நீர்க்குமிழி போலவே மறைந்து விட்டது.

ஆற்றுக்குப் போய் அழகரைச் சேவித்தவர்கள் வெய்யிலில் வாடித் துவண்டு, கண்களும் உதடுகளும் உலர்ந்து போய் வீடு வந்து சேர்ந்தார்கள். ஜானகியம்மாளின் முகம் ரத்தமாகக் கன்றிப் போயிருந்தது. அதே போல் ரூபியின் முகமும் சிவந்து போயிருந்தது. அவளை ரங்கராஜன் வாங்கிக் கொண்டு, ''அம்மா! உன் விருந்தாளி வந்தான். வந்துட்டுப் பேசாமல் போயிட்டான்'' என்ருன்.

''அட பாவமே! நல்ல நாளும் பொழுதுமா அவன் சாப்பிட்டிருக்க மாட்டானே, ராஜா !'' என்ருள் அந்த அம்மாள்.

இந்தப் பேச்சைக் கேட்க அருணுசல முதலியாருக்கு அறவே பிடிக்கவில்லை. முதல் ஆளாக உள்ளே போய்க் குழாயடியில் முகத்தைக் கழுவிக் கொண்டார்.

''சாயங்காலம் வந்தாலும் வருவான்'' என்று சொல்லி விட்டு, ''ரூபியின் வயிறு ஒட்டிப் போய்க் கிடக்குதே ! சுந்தரி, முதலில் பாலை எடுத்துக் குடு. பாவம், அழக்கூட முடியாமே சோர்ந்துட்டா'' என்று சொல்லிச் சகோதரியின் கையிலேயே குழந்தையைக் கொடுத்தான். குழந்தையை வாங்கிக் கொண்ட அவள், ''ராஜா ! அந்தக் கோடி வீட்டுப் பெண்கள் இன்னிக்கு நம்ப வீட்டுக்கு வரப் போருங்க, தெரியுமா?'' என்ருள்.

இதைக் கேட்டதும் ரங்கராஜனுல் முதலில் நம்ப முடியவில்லை. தங்கத்தின் முகத்தில் வெறுப்பின் சாயலைப் பார்த்த பிறகுதான் சுந்தரி சொன்னது உண்மையே என்று அவனுக்கு நம்பத் தோன்றியது.

''நிஜமாத்தான் சொல்றியா, சுந்தரி ?''

''பொய்யா சொல்றேன்? வேணும்னு அம்மாவையே கேளேன் !''

''அவங்களை நீங்க எங்கே பார்த்தீங்க ?''

தங்கம் 'வெடுக்'கென்று உள்ளே போனுள்.

''இப்பத்தான். திரும்பி வர்றப்போ. வடக்குச் சித்திரை வீதி மூலையிலிருந்து நாங்க ஒண்ணுத்தான் வந்தோம். அம்மாவைப் பார்த்ததும் அந்தப் பெண்கள் இரண்டு பேரும் நமஸ்காரம் பண்ணினுங்க. 'அன்றைக்குத் திருப்பரங்குன்றத்திலே பார்த்தோம்' என்று ஆரம்பிச்சாள் மூத்தவள். அதுக்கப்புறம் எதுவும் பேசத் தோணுமே நின்ருள். 'வாம்மா'ன்னு சொன்னுள் அம்மா. பிறகு பேசிக்கிட்டே நடந்து வந்தோம். அவங்களோட அப்பாவும் அம்மாவும் கூடவே வந்தாங்க. அந்த ரெண்டு பேருமே எங்களையெல்லாம் பார்த்து ஒரு கும்பிடு போட்டாங்க.''

''ஓ !'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் சொன்னுன் ரங்கராஜன்.

''பேசிக்கிட்டே வர்றப்போ அவங்க பேரையும் நாங்க கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டோம் ! எங்க பேரையும் சொன்னேம் !''

''என்ன பேராம் ?''


''பெரியவள் பேர் விஜயா ; சின்னவள் பேர் கலா.''

''ரொம்ப அழகான பேர்கள்தான்!''

''குணமும் அப்படித்தான் தெரியுது. அவங்களே சொன்னுங்க, நம்ப வீட்டுக்கு வர்றதாக. அவங்க வீட்டுக்கும்

VOLTAS

# வோல்டாஸ் ரூம் ஏர்-கண்டிஷனர்கள் எண்ணற்ற கடைகளைக் குளிர்விக்-கின்றன, வியாபாரம் பெருகுகிறது.





## ஆம், அவர்களுடைய வியாபாரம் தழைக்கிறது.

வாடிக்கைக்காரர்களை அன்போடு அழைக்-கிறார்கள் கடைக்காரர்கள். ரெஸ்டரெண்ட் உரிமையாளர்களும் அப்படித்தான். எதை-யும் விற்கத்துடிக்கும் எவருமே வாடிக்கைக் காரர்களிடம் அன்பு காட்டுகின்றனர். வாடிக் கைக்காரர்கள் விரும்புவது வசதி.

ஏர்-கண்டிஷன் அற்ற கடைகளை விட, கிரிஸ்டல் ஏர்-கண்டிஷன் பெற்ற கடைகளில் வாடிக்கையாளர்கள் அதிகம் தங்குகிறார்கள்

வோல்டாஸ்-அளிக்கும் கிரிஸ்டல் எப்படி வருடக்கணக்கில் உங்கள் பணப்பெட்டி-யிலே ரொக்கம் கலகலத்த வண்ணமிருக்கச் செய்யும் என்பதை நீங்களே கண்டு கொள்-ளலாமே. வோல்டாஸை அழையுங்கள்.



**கிரிஸ்டல் ஏர் கண்டிஷனர் பாரதத்தின் நம் 1 ஏர் கண்டிஷனர். விற்பனையில் நம். 1 உழைப்பில் நம். 1 சேவையில் நம். 1**

**வோல்டாஸ்** அளிக்கும் ***கிரிஸ்டல்*** ஏர்-கண்டிஷனர்.

**வோல்டாஸ் லிமிடெட்**
பம்பாய் . கல்கத்தா . சென்னை . புதுடெல்லி . பெங்களூர் . லக்னௌ
கொச்சி . அகமதாபாத் . செகந்தராபாத் . கான்பூர் . ஜம்ஷெட்பூர்.

Benson-1528 Tam

விற்பனையும் சர்வீஸும் செய்யும் இதர நிறுவனங்கள்:
ராஜாராம் டிரேடர்ஸ், 38 ப்ரோமனேட் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி-1. எக்ஸெல்-ரேடியோ சர்வீஸ், எஸ்.எம். ஸ்ட்ரீட், கோழிக் கோடு. கேரளா ரெப்ரிஜிரேஷன் & என்ஜினியரிங் கோ., பிரை. லிட்., குருப்பம் ரோடு, திருச்சூர்-1 ஸ்ரீ ராமா கார்ப்பொரேஷன், எல்லூர் ரோடு, தபால். பெட்டி எண் 303, விஜயவாடா-2. ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ், மெட்ரோ ஹவுஸ், விசாகப்பட்டினம். ஏ.ஆர்.ஏ. செண்பக நாடார் & பி.வி.பி. பாலசுப்ரமண்ய நாடார் & கோ., மதுரை. ஏ.ஆர்.ஏ. செண்பக நாடார் & பி.வி.பி. பாலசுப்ரமண்ய நாடார் & கோ. திருநெல்வேலி.

Bensons/338A/9 TAM

# ப்ரூக் பாண்ட்

# ப்ரூ இன்ஸ்டன்ட்

# காபி சிக்கரி ப்ளெண்ட்


ப்ரூ—ப்ரூக் பாண்ட் வழங்கும் நொடிப் பொழுதிலாகின்ற காபி சிக்கரி கலவை.

ப்ரூ தயாரிப்பது மிகசுலபம்! வெந்நீரை ஊற்றி, விரும்பும் சுவை பெற பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும். அசல் காபி–சிக்கரி மணமும் சுவையும் கொண்டு உங்களுக்குப் புத்துணர்ச்சி அளிக்க நொடிப் பொழுதில் ப்ரூ தயாராகிவிடுகிறது!

நினைவிலிருக்கட்டும், ப்ரூ தயாரிப்பதிலே சிறிதுகூட சிரமமோ அல்லது வடிகட்டும் தொந்தரவோ கிடையாது.

இதற்கு மேலாக, நீங்கள் விரும்பும் சுவைக் கேற்றபடி ப்ருவை சிறிது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேர்த்து தயாரித்துக் கொள்ளலாம்.

வாங்குங்கள் ப்ரூ—காபியும்–சிக்கரியும் கலந்த சுவையை நன்கறிந்த ப்ரூக் பாண்டின் ருசி பார்த்துத் தரம் காணும் திறமையாளர்களால் கவனத்துடன் கலக்கப்பட்டது.



நாம்ப எல்லோரும் ஒரு நாள் வரணும்னு அழைச்சாங்க....''

''அப்படியா ? போனுப் போச்சு !''

''இன்னும் கேளு, ராஜா ! அவங்க வீட்டு வாசலுக்கு நாங்க வந்ததும் பெரியவள் என்ன செஞ்சா தெரியுமா? அம்மாவோட கையை எடுத்துத் தன் ரெண்டு உள்ளங் கையிலேயும் பொத்திக்கிட்டு, 'கட்டாயம் ஒரு நாளைக்கு வரணும்'னு ரெண்டாவது தடவையும் சொல்லி, அப்புறம்தான் அம்மா கையை விட்டாள். அம்மா அவங்களை இன்னிக்குச் சாயங்காலமே இங்கே வரச் சொல்லிட்டா! நான் ரெண்டு நாளிலே இருச்சிக்குப் போயிடப் போகிறேன் என்கிறதனுலே இன்னிக்கே வரச் சொல்லி அவசர அழைப்பு விட்டுட்டா. அவங்களும் எப்போன்னு காத்திருந்தது மாதிரி வர்றதாக ஒப்புத்துக்கிட்டாங்க.''

''பரவாயில்லே. இனிமேல் அம்மாவுக்கு நல்ல துணை கிடைச்சிட்டது ! அவளுக்குப் பேச்சுத் துணைக்கு வீட்டிலே ஒரு பெண் இல்லையே என்கிற குறை இனிமேல் இராது.''

''சுந்தரி! சுந்தரி!'' – ஜானகி அம்மாள் உள்ளே இருந்து அழைத்தாள்.

''குழந்தை பசியோடே இருக்கே, சுந்தரி !''

ருபியோடு அவள் உள்ளே போனுள்.

அப்போதே விஜயாவின் வருகையை எதிர்நோக்குபவன் போல் வாசலுக்கு வந்து தெருக் கோடி வரையிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டு அப்புறம் தான் ரங்கராஜன் உள்ளே போனுன்.

விஜயாவும் கலாவும் சரியாக ஐந்தரை மணிக்கு வந்துவிட்டார்கள். வீட்டில் நுழையும் போது இருவரும் சந்தடி செய்யாமல் அடக்கமாகவே அடியெடுத்து வைத்து நடந்தார்கள். கைவளை கிலுங்குவது, பட்டுடை சரசரப்பது போன்ற மெல்லிய ஒலிகள் கூட அவர்கள் வருகையால் அங்கு கேட்கவில்லை. கையெட்டும் தூரத்தில் நிற்பவர்களை நோக்கி, அவர்களுக்கு மட்டுமே கேட்கும்படியாக, 'அம்மா' என்று விஜயா குரல் கொடுத்தாள். அந்த மென்குரலும் அளவு கடந்த பவ்யத்தினுல் பொதியப்பட்டு, தாழ்ந்தும் குழைந்தும் உள்ளடங்கியும் ஒலித்தது. ஆனுல் மாடியில் அருணுசல முதலியாருடன் பேசிக் கொண்டிருந்த ரங்கராஜனுக்கு அந்த மென்குரலும் கூட எப்படியோ கேட்டு விட்டது ! சித்தப்பாவின் பேச்சு முழக்கத்தையும், தெருவில் சதா கேட்டுக் கொண்டிருந்த முரட்டு ஓசைகளையும், ஊரெல்லாம் அலறிய ஒலிபெருக்கிகளின் ராக்ஷஸ இரைச்சல்களையும் மீறிக் கொண்டு கேட்டது அந்த மென்குரல்.

'அவள் வந்து விட்டாளா ?'

ஒரு சிறு சந்தேகம் — காதில் கேட்டது உண்மையோ பிரமையோ என்று.

சித்தப்பாவையும் அவர் பேச்சையும் அந்தரத்தில் நிறுத்தி விட்டு, 'இதோ வந்துட்டேன்' என்று சொல்லிக் கீழே இறங்கி வந்தான் ரங்கராஜன்.

## தண்ணீர்.....தண்ணீர்.....தண்ணீர்!

● தண்ணீருக்காகப் பல போர்கள் நடந்திருக்கின்றன.

● துருக்கியில் தண்ணீர்ப் பஞ்சத்தின்போது தண்ணீர் [அளவு மணிக்கணக்கில் விடப்பட்டது. ஒரு குடும்பத்துக்குப் பன்னிரண்டு நாட்களுக்கு ஒரு முறை 15 நிமிட நேரம் தண்ணீர் விடப்படும். சிலர் அதில் மூன்று நிமிடத்தை விற்றுப் பணம் சம்பாதிப்பார்கள். மணமாகாதவர்களுக்கு நிலம் இருந்தால், அந்த நிலங்களுக்குப் பாசனத்துக்கும் தண்ணீர் கிடையாது !

● குளிர் காலத்தில் அலாஸ்காவில் தண்ணீர் காலன் இரண்டரை செண்ட் விதம் விற்கப்படுகிறது. அதையும் எப்பொழுதும் வெதுநீராக்கி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் உறைந்துவிடும்.

● கெய்ரோ தெருக்களில் தண்ணீர் விற்கப்படுவது சாதாரணக் காட்சி.

● ஈராக்கில் ஒரு கிராமத்தில் ஐ. நா. ஸ்தாபனம் வீடுகளுக்குக் குடிநீர் போட முன் வந்தபோது அவ்வூர் பெண்கள் 'வேண்டாம்' என்று சொல்லி விட்டார்கள். கிணற்றடியில் தினம் வம்பளக்க முடியாமல் போய்விடுமோ என்பதுதான் காரணம்.

● 1949ம் வருஷம் நியூயார்க் நகரில் ஏற்பட்ட கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தில்



வெள்ளிதோறும் தண்ணீர் உபயோகிக்கக்கூடாது என்று ஓர் ஏற்பாடு வந்தது. அன்று யாரும் குளிப்பதோ, துணி துவைப்பதோ, ஷேவிங் செய்து கொள்வதோ கிடையாது. குழாயில் அன்று தண்ணீர் வராது.

● வருண ஜபம் செய்வதுபோல மழையை வரவழைக்க மக்கள் கையாளும் உபாயங்கள்:

○ தண்ணீரில்லாத ஆற்றுப் படுகையில் மாடுகளைக் கறந்து பாலை மண்ணில் ஊற்றுதல்.

○ மண்ணுல் செய்த உருவத்தைக் கிணற்றில் போடுவது.

○ அமெரிக்க இந்தியர்கள், மழை பெய்ய வேண்டுமானுல் உயிருள்ள பாம்புகளை வாயில் கவ்விக் கொண்டு நாட்டியம் ஆடுவார்கள்.

● செயற்கை மழை வரவழைப்பது எப்படி? காய்ந்த ஐஸ்பொடியை ஆகாய விமானத்திலிருந்து மேகங்கள் மீது தூவ வேண்டும்.

— உலகுக்குத் தண்ணீர் என்ற நூலிலிருந்து
தொகுத்தவர் : 'பாலி'

பிரமை ஒன்றும் இல்லை. விஜயா உண்மையாகவே வந்து விட்டாள்.

அவளைப் பார்க்குமுன் வாசலருகே கிடந்த அவளுடைய அழகிய காலணி களைப் பார்த்தான். இரண்டு ஜோடிகள் கிடந்தன. தங்கையையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான். பெண்கள் கூட் டத்தை நோக்கி உடனே போகலாமா, சிறிது நேரம் கழித்துப் போகலாமா, எது உசிதம் என்று சற்று யோசித் தான். காலணிகளைத் திரும்பவும் பார்த் தான். 'உடனே போவதுதான் உசிதம்' என்று அவை தூண்டின.

உள்ளே ஆகாய நீல ஜமக்காளம் ஒன்றை விரித்துப் பெண்கள் வட்ட மாக உட்கார்ந்திருந்தார்கள். அருணா சல முதலியாரின் மனைவியையும், வந்த வர்களையும் சேர்த்து ஆறு பெண் மணிகள். விஜயாவின் மடியில் ரூபி உட்கார்ந்திருந்தாள். உள்ளே சென்ற ரங்கராஜனுக்கு, சரவணப் பொய்கை யில் கார்த்திகைப் பெண்கள் அறுவரை யும் பால முருகனையும் சேர்த்துப் பார்ப் பது போல் இருந்தது. அந்த இடத்தில் ஒரு தெய்விகக் களையையும், பொங்கிப் பூரிக்கும் ஒரு நிறைவையும், அந்தச் சூழ்நிலையில் எல்லையற்ற ஒரு மன வாஞ்சையையும் அவன் கண்டான்.

அவனைப் பார்த்த மாத்திரத்தில் விஜயாவும் கலாவும் எழுந்து நின் றார்கள். ரூபியைத் தன் கையில் தாங்கி மார்பில் சாய்த்துக் கொண்டு இரு கைகளையும் கூப்பினாள் விஜயா.

வணக்கம் செய்த இருவருக்கும் பதில் வணக்கம் செய்த ரங்கராஜன், அவர் களை அப்படியே உட்காரச் சொன்னான்.

'அன்று நான் செய்த நமஸ்காரத் துக்கு நீ இன்னும் பதில் நமஸ்காரம் செய்ய வில்லை. இன்னொரு முறையும் நீ கை கூப்பினால்தான் கடன் தீரும்' என்று தனக்குள்ளே மட்டும் சொல்லிக் கொண்டான் ரங்கராஜன். அதை வெளிப்படையாகச் சொல்ல அவன் விரும்பவில்லை. அப்படியானால் வேறு எதைச் சொல்வது ? தெய்வாதீனமாக ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. பல நாட்கள் பழகி, சேர்ந்து விளை யாடிய பெண்களைப் பார்த்துப் பேசு வது போல், ''உங்க கையிலே பூக் குடலையைக் காணுமே! வெறுங் கையோடுதானே வந்திருக்கிறீங்க?'' என்று கேட்டான்.

அவன் என்ன கேட்கிறான் என்று யாருக்கும் சட்டென்று புரியவில்லை. எல்லோரையும் அவன் ஒரு முறை பார்த்துவிட்டு இலேசாகச் சிரித்தான்.

''என்ன கேட்கிறே, ராஜா' என்று சுந்தரி அவனைக் கேட்டாள்.

''அம்மா காலிலே பூப்போட்டுக் கும்பிடப் போறதா இவங்க சொன் னாங்களாம். அதனாலே பூவோடே வந் திருப்பாங்கன்னு நினைச்சேன் !''

'கொல்' என்று சிரிப்பொலி எழுந் தது. விஜயா வெட்கத்தினால் தலையைக் குனிந்து, ரூபியின் உச்சியை நடு விரல் களால் கோதிக் கொண்டிருந்தாள்.

''சரி, நீங்க பேசிக்கிட்டிருங்க. நான் வர்றேன்'' என்று சொல்லி விட்டு மாடிக்குத் திரும்பிப் போய் விட்டான் ரங்கராஜன்.

அரை மணி நேரத்துக்கு மேலேயே பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். சாப்பாட்டு நேரம் வந்து விட்டது. உபசாரத்துக்கு அந்த இருவரையும் சாப்பிடச் சொன்னாள் சுந்தரி. இன் னொரு நாள் வந்து சாப்பிடுவதாகச் சொல்லி விட்டுச் சகோதரிகள் விடை பெற்றுப் போய் விட்டார்கள்.

சாப்பிடும் போது சுந்தரி சொன்ன ஒவ்வொரு செய்தியும், ரங்கராஜனுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாக இருந்தது.

இத்தனை தகவல்களையும் அரைமணி நேர உரையாடலில் எப்படித் தெரிந்து கொள்ள முடிந்தது என்றும் அவ னுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

— விஜயா ஒரு பி. ஏ. பட்டதாரி !

— கலா பி. ஏ. முதல் வகுப்பில் படிப்பவள் !

அவர்களுடைய தந்தைக்குச் சொக்கி குளத்தில் ஒரு பங்களா இருக்கிறது. அதை இப்போது வாடகைக்கு விட் டிருக்கிறார்கள். இந்தத் தெருவுக்கு வரும் வரையிலும் அந்தப் பங்களா வில்தான் அவர்கள் குடியிருந்தார்கள்.

இவ்வளவையும் சொன்ன சுந்தரி, கடைசியாக, ''ராஜா ! பங்களாவை விட்டுட்டு இப்போ இங்கே வந்து குடி யிருக்கிறாங்களே, இந்த வீடு வாடகை வீடுதானாம்!'' என்றாள்.

''எதுக்காக இப்படி வாடகைக்கு வந்து குடியிருக்கணுமாம் — சொந்த பங்களா இருக்கிறப்போ ?'' என்றாள் தங்கம்.


''நீ கேட்டிருக்கக் கூடாதோ ?'' என்று ரங்கராஜன் கேட்டான்.

''நான் ஏன் கேட்கிறேன் ?'' அவள் முகத்தைக் கோணிக் கொண்டு பதில் சொன்னாள்.

''அவங்க அப்பா எதுக்கோ இப் படித் தீர்மானம் பண்ணிட்டாருன்னு தான் விஜயா சொல்றா. காரணம் அவளுக்கும் தெரியல்லே'' என்று சுந்தரி சொல்லும் போதே, ''கார


அரவிந்த் அளிக்கும்
பருத்தித்துணிகளின்
அற்புத உலகம்
Arvind
பெண்மையின் நளினம் ததும்பும் புடவைகள், பருத்தியில்
INTERP/13-A-1 TAM

# :.பாஸ்:.போமின்



# சக்தியை அதிகரிக்கிறது.



# பசியைத் தூண்டுகிறது.

# வலிவைப் பெருக்குகிறது.



# நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.

**சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது :.பாஸ்:.போமின்**




:.பாஸ்:.போமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும், பலவகை கிளிஸரோ:.பாஸ்பேட்டுகளும் அடங்கிய, பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக்.

SQUIBB® ® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்காகும். கரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SARABHAI CHEMICALS Shilpi SC 50 A /67 Tam

ணம் இதுதான்: சொந்தமா ஒரு குடிசை கூடக் கிடையாது. அதனுலேதான் இங்கே வந்து வாடகை குடுத்துக் குடியிருக்கிருங்க '' என்ருள் தங்கம்.

அப்போது யாரும் எதிர்பாராத விதத்தில், ''அவர் பணக்காரர் ! இந்த ஊரிலே அவருக்கு வீட்டு வாடகையிலே மட்டுமே ஆயிரம் ரூபாய் வரும் '' என்று பதற்றமில்லாமல் சொன்ஞர் நடராஜமுதலியார்.

''நீங்க யாரைச் சொல்றீங்க ?'' என்று தங்கம் கேட்டாள்.

''இப்போ வந்துட்டுப் போன பெண்களோட தகப்பனுரைத்தான் சொல்றேன். இந்த வீட்டைக்கூட அவர்தான் விலைக்கு வாங்கப் போறதாகக் கேள்வி.....'' என்று மற்ரெரு வெடிவாணத்தையும் விட்டார் அவர். ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் செய்திகளைச் சாவதானமாகவும், இயல்பான குரலிலும் சொல்லிக் கொண்டிருந்தார் நடராஜ முதலியார். அப்போது மற்றவர்கள் முகத்தைக்கூட அவர் பார்க்கவில்லை.

ரங்கராஜனுக்கு மனம் துள்ளிக் குதித்தது. அப்பாவிடம் இவ்வளவு செய்திகள் அடைபட்டுக் கிடந்திருக்கின்றனவே என்று எண்ணும் போது, அவனுடைய கண்கள் இமைப்பதையே மறந்து விட்டன.

'' பணக்கார வீட்டுப் பெண்களாயிருந்தும் என்ன அடக்கம் ! இந்தக் காலத்திலே புதுசா ஒரு சேலை வாங்கிக் கட்டிக்கிட்டாலே ஒவ்வொருத்தி தலை கீழே விழுரு !'' என்று அருணுசல முதலியாரின் மனைவி சொன்னதும், ரங்கராஜன் தங்கத்தின் முகத்தைத் தான் பார்த்தான்.

அந்த முகத்தில் ஈயாடவில்லை.

''தங்கம் ! நிறைகுடம் தளும்பாதுன்னு சொல்றதைக் கேட்டிருக்கிறயோ ?'' என்று அவன் கேட்டது அவனுக்குச் சுருக்கென்று தைத்து விட்டது.

''அதை எனக்கு ஏன் சொல்லறே? நான் யார் வீட்டுக்கு வலியப் போய் எங்க அப்பாவுக்குப் பங்களா இருக்குன்னு பெருமை பீத்திக்கிட்டேன் ?''

அருணுசல முதலியார் இருவரையும் பார்த்து, ''சும்மா இருங்க'' என்று அமர்த்திவிட்டு, தமையனுரிடம், ''அவர் பேரென்ன?'' என்று கேட்டார்.

''ஆர். கே. ராமலிங்கம் பிள்ளை.''

''ஆர். கே. ராமலிங்கம்பிள்ளையா ? யார் அது ?......''

''உனக்குத் தெரியாது.....''

'' அவ்வளவு பெரிய பணக்காரர், இந்தச் சந்திலே வந்து ஒரு சின்ன வீட்டிலே....?''

''பார்க்கிறதுக்கு வீடு சின்னதாத் தெரிஞ்சாலும் பெரிய வீடுதான். உள்ளே நிறைய இடம் இருக்கு. இந்த வீட்டைப் போல இரண்டு மடங்கு இருக்கும்....''

'' இருக்கட்டுமே ! மனுஷன் பங்களாவை விட்டுட்டு இங்கே எதுக்கு வந்திருக்கணும் ?''

'' எதுக்குன்னு யாருக்குத் தெரியும் ? நீங்க எதுக்குச் சன்னசிப் புதூரிலே அத்தனையையும் வித்துட்டுச் சாத்தூருக்கு வந்தீங்க? ஒவ்வொருத்தருக்கும் ஒரு பிளான் இருக்கும்'' என்று சொல்லிவிட்டு ரங்கராஜன் எழுந்தாலும், அவனுக்கும் அந்த மர்மம் என்ன என்பதை அறிய வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

இப்படிப்பட்ட பணக்காரனின் மகளா அதிலும் பட்டதாரிப் பெண்ணு அம்மாவின் காலில் பூப்போட்டுக் கும்பிடுவதாகச் சொன்ஞள் என்று நினைத்த போது, அவளை நோக்கி அன்று ஒரு நமஸ்காரமல்ல, ஆயிரம் நமஸ்காரங்களை செய்திருந்தாலும் தகும் என்று தோன்றியது. (தொடரும்)

## குமரவேளுக்குக் கும்பாபிஷேகம்

கலியுக வரதனுகிய கந்தப்பெருவேள் கோயில்கொண்டுள்ள ஆறுபடை வீடுகளில் ஐந்தாம் படை வீடாய குன்றுதோருடலில் முதலாக வைத்து எண்ணப்படும் தலையாய திருத்தலம் திருத்தணிகை. முருகப் பெருமான் இச்சா சக்தியாம் வள்ளியம்மையை மணம் புரிந்து அடியவர்கட்கு வேண்டிய வேண்டியாங்கு அருள் பாலித்து வந்தருளும் பெரும் பதி இது. சூராதி அவுணரை வென்றபின் ஐயன் கோபம் தணிந்து குடிகொண்ட பதியே திருத்தணிகை.

இத்திருத்தலத்தே வீற்றிருக்கும் பெருமானுக்கு ஜூன் 25ந் தேதி காலை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இப்பெரு விழா சிறப்புற நடைபெறுவதற்கு அன்பர்கள் திரவிய காணிக்கை செலுத்தியும் மகா கும்பாபிஷேகத்தைக் கண்டும் ஆனந்திக்க வேணும்.

திருமலையில் மேற்குப் பக்கத்தில் சுமார் 365 திருப்படிகள் அமைக்கப் படி ஒன்றுக்கு ரூ. 101.00 வசூலித்து நன்கொடையாளரின் திருப்பெயரை அப்படியில் பொறிக்கக் கருதியுள்ளனர். இப்பணியை அன்பர் கவனிக்க வேண்டுகிறோம்.

பொருளுதவி அனுப்பும் முகவரி: **''நிர்வாக அதிகாரி, ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி தேவஸ்தானம், திருத்தணி.''**

# இப்பொழுது!

# 12 நாட்களில் வெண்மை பளிச்சிடும் பற்கள்!

சக்தி வாய்ந்த புதிய
செய்முறை.
பனிரெண்டே நாட்களில்
பற்களுக்கு அதி
வெண்மையையும்
ஆரோக்கியத்தையும்
அளிக்கிறது




[illegible]

| புதிய செய்முறை | புதிய சுவை | புதிய பேக் |
|---|---|---|

[illegible]

HTA-HOIL 1972

அட்டைப் படக் கதை

# காக்கும் கரங்கள்

## எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

அவர்கள் இருவரிலும் அவள்தான் அதிகக் குதூகலமாக இருந்தாள். முதல் நாள் ரகு அலுவலகத்திலிருந்து வந்து செய்தி சொன்ன பொழுதிலிருந்து, அவனைத் தாஜாப் பண்ணி, அவன் பேச்சுக்களுக்கு இனிப்புப் பாகாய்ப் பதில் கொடுத்து, சிரிப்பிலும் கிண்டலிலும் அவன் சளைத்த இடத்தில் தான் புகுந்து அவன் ஆவலையும் ஆர்வத்தையும் மூட்டி விட்டு அவளுக்கு வேண்டிய அனுமதியைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள்.

"நான் அடுத்த வாரம் டில்லிக்குப் போகிறேன்...!"

மன எழுச்சி தெரிய, வியர்வையில் பளபளத்த நெற்றி, அவன் புறமாக நிமிர்ந்த போது, அவன் சிரிப்பும் பார்வையும் குறு நிலமாகத் தெறித்தது. அடுத்ததாக அவள் கேட்டாள்: அவன் அங்கே எதற்காகப் போகிறான்? எவ்வளவு நாட்கள் தங்கப் போகிறான் என்று. அந்த எதிர்பார்ப்பில் முகத்தில் ஒரு பிரசன்னம் வீசிற்று.

ஆனால் அவள் இதழ்களில் புன்னகை கட்டவில்லை. இருமருங்கிலும் வங்கி வங்கியாகப் படிந்த கூந்தல். மின்விசிறியின் மென்காற்றில் நெற்றி மேட்டில் பிரிந்து விளையாடிய அதன் இரு சுருள்கள். புருவ வளைவுகள் வியப்பில் நெருங்கும் ஒதுக்கம்.

"எதற்கு என்று கேட்கிறாயா?" அவனே மேலே பேசினான். "ஆபீசில் தனிப் பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். இடையென்றுதான் இந்தத் திட்டம் வந்தது. உடனே பதில் கொடுக்க வேணுமென்று கேட்டார்கள். உன்னைக் கேட்காமலே பதில் சொல்லிவிட்டேன்."

அவளைச் சமாதானப்படுத்தும் பாவனையாய்க் குரல் தாழ்ந்தது. பார்வையில் இரகசியமாய் அவன் ஆதரவை விழையும் ஆவல் ததும்பி விளையாடிற்று. நெருங்கப் பிடித்த விரல்களில் வளையல்கள் உறுத்த அவளைத் தன்புறமாக இழுத்துக் கொண்டான். விரலில் அவன் மோதிரம் கீறிற்று.

"நானும் வைத்திருக்கிறேன் — உங்களுக்கு ஒரு ஸர்ப்ரைஸ்!"

"என்ன அது?"

அவள் உடனே பதில் சொல்லாத ஒரு கண நேரம், அவன் கற்பனை விதம் விதமாய் ஓடிற்று. அவள் மனத்தைப் படிப்பதுபோல் முகத்தைத் தேடினான்.

"நான் எங்கே இருக்கிறது?"

"ஏன் இரண்டு மாசம்தானே? என் அக்கா வெகு நாட்களாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்; அவள் வீட்டுக்கு வரச் சொல்லி..."

"இல்லை. உங்களை உங்கள் விருப்பப்படி விடுகிறேன்; என்னை என் விருப்பப்படி விடுங்கள்!"

மாவில் நனைத்து எடுத்த விரல்கள் இடைவிடாமல் கோலம் வரைவது போல், அவள் திட்டம் பேச்சில் தொடர்ந்து கொண்டே வந்தது. சிறு குழந்தை விளையாடும் விதமாய், அவன் மார்பில் ஆள்காட்டி விரலால் எழுதிக் கொண்டே பேசினாள்.

"என்னோடு படித்தவள், மதுரையில் கல்லூரியில் வேலையாக இருக்கிறாள். இப்போது இரண்டு மாதம் கோடைக்கானலுக்குப் போகிறாளாம். வானிலை ஆராய்ச்சிப் படிப்புக்காக. நான் வந்தால் துணையாக, பொழுது போக்காக இருக்குமாம்."

அந்தச் சிரிப்பிலும், பேச்சின் நைச்சியத்திலும் நெஞ்சில் எதிரொலிகள் கிளம்பின. சிற்சில நாட்கள் அவன் முன் தூக்கமாய் அயர்ந்து விடும்போது, அவனை மெதுவாய் எழுப்பிச் சர்க்கரை கூடச் சேர்த்த பாலை அவன் பருக அவள் வார்க்கும் விதம்? இங்கே இப்படி அமர்ந்து சொல்லும் விதத்திலும், கெஞ்சும் குரலிலும், அப்படி ஓர் இனிப்புப் பாகு நூலாய் இறங்கிற்று.

அவனுக்கு மறுக்க விருப்பமில்லை.

அவளுக்கும் ஒரே கொண்டாட்டம்தான்.

சிறு குழந்தையைப் போல அவன் கன்னத்தைக் கிள்ளி அவள் விரல் சொடுக்கிற்று.



ஆவல் நிறைவேறல் கண்ட பொழுதில் ஆசையாய்க் கண்கள் விரிந்தன. தோள் மேல் வைத்த கையின் பிடி பூனாய்க் கவ்விக் கொண்டது.

ஒரு விமான தளத்தை நோக்கி இறங்கிப் போனான். இறக்கை விரித்த பெருங் கழுகாய் விமானம் திரும்பி நின்று கொண்டிருந்தது. வெய்யிலின் கதிர்களில் அதன் அலுமினிய முதுகு கண் கூச ஒளிவிட்டது. தோளிலிருந்து பை தொங்க, கோட்டை இழுத்து விட்டபடி அவளைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே போனான். அவள் புறமாய் அலைந்த கைக்குட்டை, நடைபாதையில், ஏணியில் ஏறிய நிலையில், அப்புறம் கண்ணாடி ஜன்னலின் வழியாகவும் கூட அலைந்து கொண்டே இருந்தது.

"நான் உனக்கு எழுதுகிறேன். நான் வெய்யிலிலிருந்து அதிக வெய்யிலாய் இருக்கும் இடத்துக்குப் போகிறேன். நீ வெய்யிலை விட்டுக் குளு குளுவென்ற இடத்துக்குப் போகிறாய்—"

திரும்பி வரும் வழியில் அவன் உதட்டைச் சுளித்துக் கொண்டு, அவளுக்கு மட்டும் கேட்பது போல், சிணுங்கிக் கொண்டது அவள் நினைவைத் தொடர்ந்து கொண்டே வந்தது. முப்பது வயதை எட்டிவிட்டாலும் அவன் குழந்தைதான்; அவள் கையுள் அவன் கை உறங்க அருகே அமர்ந்து விடும் போது கண்கள் புன்னகை புரியும். இசை பிரியும் குழலின் துவாரங்களில் ஒளிந்து விளையாடும் நயமாய், அவன் அன்பும் பரிவும் ஒவ்வொரு சிறு செயலிலும் வடிவெடுத்துக் கொண்டே யிருக்கும்.

அலுவலகத்துக்குப் போக நேர்ந்த சமயம் தவிர, மற்ற நேரங்களில் அவளை அரைக் கணம் பிரிய விட மாட்டான். அவர்களுக்குள்ளே ஆசையாகப் பங்கிட்டுக்கொள்ளும் பொழுதுகளில், பிறர் நிழல் நடுவில் கொஞ்ச நேரம் விழுவதைக்கூடப் பொறுக்க மாட்டான். ஒரு காரியமும் இல்லாவிடினும் அவள் தங்கும் அறையில் தயங்கித் தயங்கி, நடந்து சுற்றி வர அவனுக்கும் ஏதாவது வேலை இருக்கும்.

அவள் எங்கே சென்றாலும், என்ன செய்தாலும் அவன் பார்வை அவளையே தொடர்ந்து கொண்டிருக்கும். குனிந்தபடி காரியமாக இருப்பவள் சட்டென்று நிமிர்ந்து திரும்பிப் பார்ப்பாள். அவன் பார்வை அவள் வடிவக் கோடுகளில் இழைந்து கொண்டிருக்கும். பொறுமை இன்மையும், நாணமுமாய், அவள் கன்னங்களில் சிவப்புத் திட்டாய்ப் பூக்கும்.

ஜன்னல் ஓரமாய், வெளியே செடியில் பூத்திருக்கும் பூக்களைப் பார்த்தபடி எண்ணிக் கொண்டிருப்பவளை, முதுகில் மார்பு இடிக்கப் பின்புறமாக வந்து தொட்டுக் கொள்வான். அவள் சிணுங்கி ஒதுங்குவாள்.

"கதவு திறந்திருக்கிறது. யாராவது வரப் போகிறார்கள்!"

"வந்தால் வரட்டும். எனக்கு ஒன்றும் இல்லை" என்று குழந்தைச் சைகையாய்க் கையை உதறிக் கொள்வான். அவளுக்குச் சிரிப்புத்தான் வரும்.

அவளை மணந்து கொண்ட பிறகு அல்ல; அவர்கள் சந்தித்த அன்றையிலிருந்தே, அவனுக்கு இப்படித்தான் ஒரு வேகம். அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும். கொஞ்சம் பொறுமை இல்லாமலும் போய்விடும். இது ஓர் ஆசையின் வாசமா? இளமையின் நெருக்கி வைக்கும் மனத்தின் கமழ்ச்சியா? அப்படி இருப்பினும் எவ்வளவு நாட்களுக்கு? மூன்று ஆண்டுகளுக்கா?

ஆம். மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் அவர்கள் முதன் முதலாய் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டது. அவள் அந்த அலுவலகத்தில் வரவேற்பு அறையில் 'போனி'ல் வரும் செய்திகளைக் கவனிக்கும் வேலையில் இருந்தாள். அவன் அங்கேயே மின் இயல் துறையில் இஞ்சினீயராக வந்து சேர்ந்தான். அப்புறம் ஓர் ஆண்டு; சிறுகச் சிறுக அவர்கள் மன அண்மை நேருவதற்கு.

அவள் அவன் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்து விட்டாள். ஆனால் இந்த விதமாய் ஒரு திருப்பத்தை எதிர்பார்க்கவில்லை. அவள் மேல் பிறர் பார்வையின் பனி படிவது பொறுக்காது அவனுக்கு. அவள் யாரிடமும் பேசுவதையும் விரும்ப மாட்டான். அவன் துணை இன்றி அவள் வெளியே போவதையும் அனுமதிப்பதில்லை.

அவள் வேலைக்குப் போவதற்கு அவன் அனுமதி கிடைக்கவில்லை. அவர்களுடைய கலியாணக் கடிதத்தை மானேஜரின் மேஜையின் மேல் வைத்த போது, அவள் தான் வேலையை விட்டு நீங்கும் கடிதத்தையும் சேர்த்துத்தான் வைத்தாள். இன்னதென்று புரியாமல், ஒரு மகிழ்ச்சியும் கலக்கமுமாய் மனம் குழம்பிற்று.

"என்னம்மா இது?"

"நான் வேறு பொறுப்பை ஏற்றுக் கொண்டாகி விட்டதே ஸார்?"

உடைந்து வந்த சிரிப்பில் உள்ளூற ஒரு பொருமல் தெறிற்று. அவர் அதைக் கவனிக்காமல் இல்லை.

"இருக்கட்டும், அம்மா! குட் லக்!"

அவளுக்கு ஆசி கூறும் விதமாக அந்தக் குரல், ஏதோ ஒன்றை நழுவ விடுவதற்காக, அவள் இலேசாய் வருந்துவதை உணர்ந்து தேற்றுவது போலவும் தோன்றிற்று அது.

அவள் அவனோடுதான் இருந்தாள். ஆனால் எவ்வளவு இருந்தாலும் அவனுக்குப் போதவில்லை. சூழும் இந்த ஆவல் கடல் அலையின் பாயாகச் சுருண்டு அவளை மூழ்க வைத்துக் கொண்டிருந்தது. சில சமயம் அதிலிருந்து மீளும் வகை தெரியாமல் அவள் தவித்துப் போவாள். அவனுடைய செய்கையிலும் பேச்சிலும், அந்த ஆசையின் உருவம் நிறைந்து விரவித் தெரிந்தது. தாயின் மார்பில் கட்டிவிட்ட பால் போல், அவள் நெஞ்சில் அதன் வேகம் கனமாக அழுத்திற்று.

அந்த அன்பு இந்த இரண்டு ஆண்டுகளில் சிறையாகவே கூடு கட்டிக் கொண்டு விட்டது. இயல்பாக இருக்க வேண்டிய ஒரு வாழ்க்கை, இயற்கையாக இருக்க வேண்டிய சுதந்திரம், அந்தப் பிணைப்பில் வேலிக்குள்

# முதலில்


அவளுக்கு
ரக வாரியான
பிஸ்கெட்டுகளை
வாரி வழங்குகிறது
பார்லே:
முதன் முதலாகப்
பல வகை உன்னத
உப்பு பிஸ்கெட்டுகளை
தயாரித்தவர்கள்



## பார்லே
## பிஸ்கெட்

வாங்குக இன்றே, பார்லே நன்றே !

விருப்பமானதைத் தேர்ந்தெடுங்கள்!
ஏன், பலவையுமே கலந்து மகிழுங்களேன்.
ஜெ:ஃப்ஸ், ஓர்லே, ஸ்பின்-ஹொச்
சீஸ்லிங்ஸ். யாவுமே 30. ஆண்டு நிபுணத்து
வத்தைப் பின் பலமாகக் கொண்ட
பாரதத்தின் மிக நவீனமான பிஸ்கெட்
தொழிற்கூடத்தில் உருவானவை.
தயாரிப்பவர்கள் யார் என்று சொல்லவா
வேண்டும்—பார்லே தான். பாரதத்திலேயே
அதிக விற்பனையுடைய இனிப்பு மற்றும்
உப்பு பிஸ்கெட்டுகளான
க்ளூகோவையும், மொனேகோவையும்
தயாரிப்பவர்கள். அவர்களைத் தவிர வேறு
யார் இந்த சுவை இன்பத்தை அளிக்க முடியும்?



| க்ளூகோ | மொனேகோ | ஓர்லே | ஸ்பின்-ஹொச் | ஜெ:ஃப்ஸ் | சீஸ்லிங்ஸ் |
|---|---|---|---|---|---|

everest/506a/PP tm




# புரட்சிகரமான புதிய சிகிச்சை
# அறுவை சிகிச்சை இன்றியே
# மூலத்தைச் சுருக்கிக்
# குணப்படுத்துகிறது.

**நமைச்சலை நிறுத்துகிறது—நிமிடங்களில் வலியைப் போக்குகிறது.**

நியூ யார்க்—இப்பொழுது விஞ்ஞானத் துறை மூலத்தைச் சுருக்கும் அற்புத சக்தி கொண்ட புதிய மருந்துப் பொருள் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது. இந்த மருந்தால், மூலநோய் கண்டுள்ள கணக்கற்றவர்களுக்கு 'கருத்தைக் கவரும் அபிவிருத்தி' ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் தரும் வலியும் நமைச்சலும் அதிவிரைவிலேயே தணிந்து, அதே சமயம் மூலம் சுருங்கியுள்ளது. உண்மையில் இதன் விளைவுகள் வியக்கத்தக்க வகையில் இருக்கின்றன. இந்த நோய் கண்டவர்கள் "இப்பொழுது மூலநோய் ஒரு பிரச்னையே இல்லை" என்று பிரமிக்கத்தக்க அறிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். இந்த சிகிச்சை, மயக்க மருந்து, உணர்விழப்ப மருந்து மற்றும் சுருங்கச் செய்யும் மருந்துகளைப் பயன்படுத்தாமலேயே பெரும் வெற்றியைத் தந்திருக்கிறது! உடனே உங்கள் மருந்து வியாபாரியை **ப்ரிபரேஷன் எச்***—அதாவது புரட்சிகரமான புதிய பயோ-டைன்* அடங்கிய இந்த சிகிச்சையைப் பற்றிக் கேளுங்கள். (மருந்து இடும் குழாயுடன்) இது 30 கிராம் மற்றும் 50 கிராம் கொண்ட ட்யூபுகளில் கிடைக்கிறது. மேற்கொண்டு விவரங்களை அறிய, டிபார்ட்மெண்ட் 38, ஜெப்ரி மேனர்ஸ் அண்டு கம்பெனி லிட்., தபால் பெட்டி 10133, பம்பாய் 1 என்னும் முகவரிக்கு எழுதி, இலவச சிறுநூலை அனுப்பச் சொல்லுங்கள்.

* ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்

அடைத்த பூஞ்செடியாய்த் திணறிக் கொண்டிருந்தது.

அவள் வளர்ந்த சூழ்நிலையில் எவ்வளவோ ஆண்களோடு பேசிச் சிரித்துக் கொட்டம் அடித்திருக்கிறாள். அவள் வீட்டில் அதற்குத் தடங்கல் இல்லை. உறவினர் வீட்டுக்கோ, கலியாணங்களுக்கோ போனால், அவள் குரலும் சிரிப்பும்தான் முதலில் கேட்கும். வானத்தில் உயர உயரப் பறக்கும் பட்சியாகத் தன்னைக் கற்பனை செய்து கொள்வாள்.

கல்லூரியில் படித்தபோதும் அவள் அப்படிப்பட்ட மாணவியாகத்தான் இருந்தாள்.

வேலையில் அமர்ந்த பிறகு, இந்தச் சுதந்திரத்துக்கும் கட்டற்ற பழக்கத்துக்கும், காலில் அவ்வப்போது முட்கள் நெருடாமல் இல்லை. ஆனால் அவள் சாதுரியமாய் ஒதுங்கி விடுவாள். குத்துவதற்குமுன் முள்ளை அப்புறப்படுத்தி விடுவாள்.

அப்படி வளர்ந்து விட்ட பிறகு, இந்தவிதமாக நேர்ந்துவிட்ட வாழ்க்கை? அவனிடமே சொல்ல நினைப்பாள். உள்ளம் கிளர்ந்து பொங்கி வார்த்தை நாவின் நுனி வரையில் வந்துவிடும். ஆனால் புரண்டு தவழ்ந்து வரும் அலை கரையைக் கண்டு அடங்குவது போல, சொல் பின்தங்கிவிடும்.

கடற்கரைக்குப் போனபோது ஒரு நாள், பைகிராப்ட்ஸ் சாலையின் முடிவில் கிளி ஜோசியன் ஒருவனைப் பார்த்துக் கொண்டு நின்றது நினைவிருக்கிறது. அவன் அந்தக் கிளி அடுக்கடுக்காய் எடுத்து வைத்த சுவடிகளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழகான அந்தக் கிளியின், பறக்க முடியாத, குட்டையாகத் தரித்த சிறகுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இந்தக் கிளி எவ்வளவு அழகாக வேலை செய்கிறது பார்த்தாயா?''

அவள் பதில் சொல்லவில்லை. அதன் சிறகுகளை மட்டும் விரல் சுட்டிக் காட்டினாள். அவன் புரிந்து கொண்டு விட்டான். மணலில் உட்கார்ந்த பிறகும்கூட அவனிடமிருந்து பேச்செழவில்லை. மங்கிய ஒளியின் நிழல்பட்ட அவள் முகத்தைப் பார்த்தபடி, அவளையே, அவள் கண்களையே, பார்த்துக் கொண்டிருந்த கண்கள் மீண்டும் மீண்டும் அலை பாய்ந்தது.

சிலை போல, செதுக்கிய முக பாவனையோடு, அப்படியே அமர்ந்து விட்டாள். கட்டுக்கடங்காமல் உதறிப் பறந்த மேலாடை நுனியை இழுத்து இடையில் செருகிக் கொண்டாள்; தன்னையே அடக்கிக் கொள்வதைப் போல.

**ப**ஸ்ஸில் வீடு திரும்பியாயிற்று.

தனியாக அந்த வீட்டில் நுழையும்போது வெறிச்சென்று இருந்தது: அவன் இருந்தே பழக்கமான நிறைவு இல்லாமல், அவன் உட்கார்ந்திருந்த, படுத்துறங்கிய ஜன்னலோர நாற்காலியும், விளக்கடிக் கட்டிலும் மூளியாகத் தெரிந்தன. வெள்ளம் வடிந்த ஆற்றின் மணற் படுகையாக இருந்தது அவன் புழங்கி விட்டுப் போன வீடு.

ஆனால் இது ஒரு மாறுதல்; அவள் வேண்டி விரும்பிய மாறுதல். இன்னும் இரண்டு மாதங்களுக்கு, அவள் ஒரு சுதந்திரப் பறவை. நாளை மறு நாள் கொடைக்கானல் பயணம். அப்புறம் அவளும் தோழி சரோஜாவுமாக இரண்டு மாதங்கள் இருக்கலாம். பழைய நாட்களும் தொடர்பும் நினைவுக்கு வரும் விதமாய்ப் பழகலாம். இரண்டு ஆண்டுகளாக அவள் அறிந்திராத வாழ்க்கை இன்னும் இரண்டு மாதங்களுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது.....

நினைக்கும்போதே ஆவலும் இன்பமும் கலந்த உணர்ச்சி. ஆர்வமும் எதிர்பார்ப்பின் வேகமும் கலந்த ஒரு வேதனை. மனத்தில் பிடிபடாமல் அது பொங்க, வேண்டிய சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பெட்டியில் அடுக்கினாள். அடுக்கும்போதே மனத்தில் அந்த இரண்டு மாதங்களின் பொழுதும் படிப் படியாக இதழவிழ்ந்து நின்றன. ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு பொழுதையும், கழிக்கும் விதம் விதமான திட்டங்கள் நெஞ்சில் மலர்ந்தன.

வியாழன்; சனி. வெள்ளி ஓடியது தெரியவில்லை. கோடை ரோடு ஸ்டேஷனில் சரோவின் முகத்தை எதிர்பார்த்து இடைவரை வெளியே நீட்டிக் கவிழ்ந்தபடி தேடினாள். திராட்சையும் அன்னாசியுமாக, மாதுளையும் ஆரஞ்சுமாகக் கொட்டிக் கிடந்த பழ ஸ்டாலின் பக்கத்திலிருந்து அவள் கை அசைந்தது. ஆடி அவளை வரவேற்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு அப்புறமும் அப்படியேதான் இருக்கிறாள் அவள். கன்னத்துச் சதை கொஞ்சம் இலேசாய் ஒட்டி இருந்தது. முன்புறம் பின்னல் விழ நின்ற ஞாபகம். இப்போது கொண்டையிட்டு மல்லிகையை வில்லாய் வளைத்து வைத்திருந்தாள். மற்றப்படி அதே முகம், பார்வை, குழையும் சிரிப்பு — எல்லாம் அதுவேதான்.

பஸ்ஸில் போகும் வழியெல்லாம், ஓயாமல் பேசிக் கொண்டே வந்தார்கள். கிண்டலுக்கும் சிரிப்புக்கும் குறைவில்லை. துருவித் துருவிப் பதிலை வரவழைக்கும் சரோவின் பேச்சில் இன்னும் அந்த விஷமம் மங்கவில்லை. சில பதில்களைச் சொல்ல அவளுக்குக் கொஞ்சம் நாணமாகக்கூட இருந்தது.

மலையில் அவர்களுக்கு ஒதுக்கிய அறையில் சாமான்களைச் சேர்த்து, எல்லாவற்றையும் அடுக்கி ஒழுங்குபடுத்த மாலையாகி விட்டது. அன்று எங்கேயும் வெளியே போக முடியவில்லை. ஆனால் இலேசாய் இரவு ஆகாரத்தை முடித்து விட்டு, கட்டிலில் படுத்துக் கொண்டு பேசிப் பொழுது போக்கினார்கள். பத்திரிகை சங்கீதம், சினிமா, புடைவை, இருவருக்கும் பிடித்த உணவு, இவ்வளவையும் வாய் மாறி வாய் பரிமாறிக் கொண்டேயிருந்தார்கள்; கடிகாரம் பன்னிரண்டு அடித்து அலுத்து ஓயும் வரையில்.

மறு நாளிலிருந்தே சரோவுக்கு வேலை தொடங்கி விட்டது. தினமும் காலையில் அவள் வேலைக்குப் போய் விடுவாள். பிற்பகலில் திரும்ப மணி மூன்று ஆகிவிடும். ஆனால் அதற்குப் பிறகு நாளும் பொழுதும் அவர்கள் வசம்தான். இஷ்டப்படி பொழுது போக்குவார்கள். பூவை விட்டுப் பூவுக்குப் பறக்கும் வண்ணத்துப் பூச்சியாய், மனம் போனபடி உலாவித் திரிவார்கள்.

தினம் ஓர் இடம். பொடானிகல் கார்டன், மலைப் பாதை, குறிஞ்சி ஆண்ட

# பொன் மொழிகள்



தொகுப்பு:

**வி. எஸ். சம்பத்**

ஆயிரம் துப்பாக்கிகளுக்கு அஞ்சாதவன் ஒருவனது ஓர் அங்குல நாவுக்குப் பயந்துதான் ஆக வேண்டும். — ஜப்பானிய பழமொழி

கோழை பல முறை செத்துப் பிழைக்கிறான். ஆனால் வீரன் ஒரே முறைதான் சாகிறான்.
— ஷேக்ஸ்பியர்

சிறிய செலவுகளைக் குறைத்துக் கொள்வதில் கவனம் செலுத்து. ஏனெனில், சிறிய துளைகள் காரணமாகப் பெரிய கப்பல்கள்கூட மூழ்குவதுண்டு.
— பிராங்க்ளின்

கடவுள் ஏழைமையைத்தான் மிகவும் விரும்புகிறார் என்கின்றனர் சிலர். ஆனால் நானோ கடவுளையே ஏழைமைக் கோலத்தில் காண்கிறேன். எனவே, ஏழைமைக் கோலத்தை நான் விரும்புகின்றேன்.

உண்மைக்காக எதையும் இழக்கத் தயாராக இருங்கள். ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்காதீர்கள். — அண்ணல் காந்தி

---

வன் கோவில், கோக்கர்ஸ் நடைபாதை, படகுகள் தவழும் ஏரி, இப்படி. அந்தச் சுதந்திரமான பொழுதுபோக்கும், அடுத்த மணி நேரப் பொறுப்பின் கவலையற்ற நிம்மதியும், அந்த மலைக் காற்றின் ஆரோக்கியமாய்ச் சாந்தாவின் மூச்சில் கலந்து நிற்கும்.

சரோவின் முகத்திலும் அப்படித்தான் ஒரு மகிழ்ச்சி எதிர்நிழலாய் விரிந்து கொண்டிருந்ததைப் போல் அவளுக்குப் புலப்பட்டது. அந்த நாட்களின் முழு மகிழ்ச்சியையும், ஒவ்வொரு பொழுதிலும் ததும்பிய விடுதலையின் நுகர்ச்சியையும், வலிய அநுபவிக்கும் வேகம் அவள் கண்களில் குடி கொண்டிருந்தது. அதை, அந்த உணர்வின் துடிப்பை, அதன் காரணத்தை அறிய விரும்பிச் சாந்தாவின் மனம் காத்திருந்தது.

அன்று அவளுக்கு விடுமுறை. இருவருமாக, மேலே மலைச் சாலையில் நடந்து போனார்கள். மரகதக் கம்பளமாய் விரிந்த 'கோல்ப்' மைதானம். அதன் பசுமைக்கு நடுவே, சிவப்பு நிறக் கால் சட்டையும், சட்டையின் வெண்மையுமாக நடந்து விளையாடிய குழந்தைகள், பழுத்த பழமாகக் கனிந்த கன்னச் சிவப்பு. தெரிய, மருண்டு விழித்த வெள்ளைக்காரச் சிறுமியின், பவுன் நிறக் கூந்தல். வைத்த கண் வாங்காமல் அதைப் பார்த்தபடி நின்றாள் சரோ.

பிறகு இருவருமாக எதிர்ப்புறம் போனார்கள். கைப் பிடிச் சுவருக்குக் கீழே மலையின் மடிப்பு தெரியவில்லை. செங்குத்தாக இறங்கும் கிடுகிடு பள்ளம். அந்த ஆழமும் தெரியாத மூடு பனிப் போர்வை.

''இதுதான் 'ஷேபிளைட் வார்னர்'.''

சரோவின் இதழ்களிலிருந்து ஒரு வெற்றுச் சிரிப்பு உதிர்ந்தது. சாந்தாவின் முதுகில் சிலிர்ப்பு ஓடிற்று. இப்படியும் ஓர் இடமா?

''எதற்காக அப்படிச் செய்வதாம்?''

''வாழ்க்கையில் ஏமாற்றம் என்று ஏற்பட்டு விட்டால், அதை விலக்கிக் கொள்ள எத்தனையோ வழிகள்......''

அவள் குரல் நிதானமாய்ப் பூரண வடிவுடன் பிரிந்து வந்தது. சட்டென்று அவள் புறம் திரும்பினாள். ''எல்லோருக்குமே உன்னைப்போல நிறைவான வாழ்க்கை கிடைத்து விடும் என்று நினைக்கிறாயா, சாந்தா?''

சரோவின் கண்கள் கும்மட்டியின் தணலைப் போல் ஒரு கணம் ஜ்வலித்து அடங்கின. தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் புறமாய் அவள் பார்வை தடைத்து ஒய்ந்தது. சாந்தா தன் தோழியின் சழுத்தை அணைத்துத் தன்புறமாக இழுத்துக் கொண்டாள். என்ன நினைக்கிறாள் அவள்?

''ஆமாம், சாந்தா! இதோ இந்த இரண்டு மாதமும் முடியப் போகிறது. மறுபடியும் மதுரைக்குத் திரும்பினால் ஒற்றை வாழ்க்கைதான்; திசை தப்பிய பறவை ஆகாயத்தில் இஷ்டப்படி அலைவதைப்போல். இந்தக் குழந்தைகளைப் பார்க்கும் போது, உன்னைக் காணும் போது, என் மனத்திலும் அந்த ஏக்கம் பொங்கிக் கொண்டு வருகிறது. நம்மைப் பாதுகாக்கக்கூடிய இரு கரங்களில் நம் வாழ்க்கையை ஒப்படைத்து விடக் கூடாதா என்று. ஆனால்... ம்.... எல்லோருக்கும் அது அவ்வளவு எளிதில் கிடைத்து விடுவதில்லையே?''

அவளுடைய விழிகள் பெருகின. தலையை உதறிக் கொண்டாள். அவளைத் தேற்றுவது போல் சாந்தா அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள். இருவராலும் பேச முடியவில்லை. வழி நெடுக அவரவர் தத்தம் யோசனைகளைத் தொடுத்துக் கொண்டே வந்தார்கள்.


சாந்தாவின் மனத்தில் புதிதாய் அந்த உணர்ச்சி விழித்துக் கொண்டது. அவளுக்கு ஏன் தன் அருமை தெரியவில்லை? பிறர் காட்டும் கண்ணாடியில்தான் முகத்தைப் பார்த்துக் கொள்ள முடிகிறதா? சுதந்திரமான வாழ்க்கைக்கு அவள் ஏக்கம்? அதற்கு இப்படி ஓர் உருவமும் இருக்கிறதா?

**கா**லை நேரம். சரோ வேலைக்குப் போய் விட்டாள். அவள் மட்டும் தனியாக ஏரிக் கரைக்குச் சென்று வரப் போனாள். கரையோரம் வெண்ணிறக் கட்டடம் உயர்ந்த மேட்டில் கம்பீரமாக நின்றது. நெஞ்சில் தைரியத்தை ஊட்டும் தோற்றம். ஆஸ்பத்திரிக் கட்டடம்.

வெளியே நடந்து வந்த நர்ஸ் ஒருத்தி, அவளைக் கண்டதும் கிழுதடைத் திருகிக் கொண்டு ஆச்சரியத்துடன் நின்றாள். வெண் புறாச் சிறகெனத் தலையில் குல்லாய். தூய வெண்ணிற உடுப்பு. மடிப்புக் கலையாத உடையின் சீர் மிகுந்த தோற்றம்.

''சாந்தாவா அது?''

mas. TTP.8757.TAM



ஆயுட்காலமையும் உழைப்பதற்கான உத்தரவாதம் கொண்டது ப்ரெஸ்டீஜ்

# சிறந்த குடும்பக்கலையின் தொடக்கம் ப்ரெஸ்டீஜ்

**Prestige**

**முற்றிலும் அபாயமற்றது:** அதிகபட்ச பாதுகாப்பு சாதனங்கள் உள்ளன.


**தாராளமான இடவசதி:** உங்கள் பாத்திரங்களுக்கோ, ஸ்டீம்-இட்டிற்கோ.

**சர்வீஸ்:** இந்தியா முழுவதும், விற்பனைக்குப்பின் சர்வீஸ்.

## எந்தக் குடும்பத்திற்கும் ஏற்றதொரு சரியான சைஸ் இருக்கிறது.

நேரத்தை - மிச்சப்படுத்துகிறது

எரிபொருளை - மிச்சப்படுத்துகிறது




உள்நாட்டிற்கு ஏற்றுமதிக்கு


**இலவசம்:** உங்கள் வசதிக்கென, அதிகப்படி ப்ளக் ஒன்றும், பிண்டில் ஒன்றும், சமையற்கலைப் புத்தகம் ஒன்றும் இந்த அட்டைப் பெட்டிக்குள் பேக் செய்யப்பட்டுள்ளன.

தயாரிப்பாளர்கள்:
டிடி. (ப்ரைவேட்) லிமிடெட்
பெங்களூர்-16.

# நீங்கள்
# புத்திசாலியான முற்போக்குள்ள தாயாரா, அல்லது, பழமையைப் பின்பற்றும் தாயாரா?

## கீழ்க்கண்டதைப் படித்துத் தீர்மானியுங்கள்:

உங்கள் அன்புக் குழந்தைக்கு தாய்ப்பால் அல்லது பால் உணவுகள் தருவதை படிப்படியாக நிறுத்தி, திட உணவு அளிக்க வேண்டியது மிகவும் முக்கியம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.



சரி.
இவ் விஷயத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்!

குழந்தைக்கு வீட்டில் சமைத்த தானிய உணவைத் தரப்போகிறீர்களா? ஆனால் அதைத் தயாரிக்க அதிக நேரமாகிறது. அநேகமாக அதைக் குழந்தைகள் விரும்பி உண்ணுவதில்லை; மேலும், அதில் போதிய அளவு போஷாக்குச் சத்தும் இருப்பதில்லை.

இல்லை, குழந்தைக்கு பாரெக்ஸ் புகட்டப் போகிறீர்களா?




GLO 8073 TM

(இது குழந்தைகளுக்கு வழக்-கமாக வழங்கப்படும் முதல் திட உணவு) அப்படியென்-ருல். நீங்கள் புத்தி சாலியான தாயார்தான்!

பாரெக்ஸ் குழந்தைகளுக்கு முழுப்போஷாக்கும் அளிக்-கிறது; இது எளிதில் ஜீரண-மாகும். சுகாதார ரீதியில் உருவாக்கப்படும் பாரெக்ஸ், தயாரிப்பதற்கு சௌகரிய-மானது; சுலபமானது பாரெக்ஸுடன், தேவைக்குத் தக்கபடி பாலும், சர்க்கரையும் சேர்க்க வேண்டியது தான். குழந்தையின் உணவு தயார்! முதலில் குழந்தைக்கு சிறு-சிறு அளவில் பாரெக்ஸ் ஊட்டத் தொடங்குங்கள்.

பின்னர், அளவை அதிகரிக்-கவும். தானியங்கள், விடமின்கள் கனிஜ சத்துக்கள், இரும்-புச்சத்து மற்றும் சரியான அளவு புரத சத்துக்கள் கலந்து உருவாக்கப்படும் பாரெக்ஸ் பச்சிளம் குழந்தைகளுக்கு முழுப் போஷாக்கும் அளிக்-கிறது.



ஆரோக்கியமுள்ள திடமான வளர்ச்சிக்குத் தேவைப்படும் எல்லா சிறந்த அம்சங்களும் இதில் அடங்கி-யுள்ளன. அதனுல்தான், உலகெங்கிலும் தாய்மார்கள் பாரெக்ஸை நம்புகிறுர்கள்.

இலவசமாக பாரெக்ஸ் புத்-தகம் பெற. இந்தக் கூப்பனை அனுப்புங்கள்.

என் குழந்தைக்கான மிகச் சிறந்த உணவைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன் தயவுசெய்துபாரெக்ஸ் புத்தகத்தின் பிரதி ஒன்றை அனுப்பவும். தபால் செலவுக்காக 20 பைசா தபால்தலை அனுப்பியிருக்கிறேன் என் முகவரி.

பெயர் ........................................................

விலாசம் ........................................................

........................................................

........................................................

பாரெக்ஸ் தபால் பெட்டி நம்பர் 202, பம்பாய்-1.




பாரெக்ஸ் குழந்தைகளின் முதல் திட உணவு!

**Glaxo**

கிளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) லி.

ஒரு கணம் அவளை விழிகள் அசையாமல் பார்த்தாள் சாந்தா. கொஞ்சம் கொஞ்சமாக அந்த முகம் புரிவது போல் இருந்தது. கனவில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் போது, தட்டி எழுப்பினால் சிறிது சிறிதாக அது கலைந்து நினைவு திரும்புவது போன்ற உணர்ச்சி.

''நீ..... நீ.... மேரி அல்லவா ?''

''ஓ மைகாட்... எங்கே மறந்து போய்விட்டாயோ என்று பார்த்தேன்.''

அவள் தோள் மேல் கையை வைத்துத் தட்டிக் கொடுத்தாள் மேரி. ''வா, என் அறைக்குப் போகலாம்.''

பேசிக் கொண்டே இருவருமாக அறைக்குப் போனார்கள். அழகான நேர்த்தியான அறை. சுத்தமான நறுவிசான அமைப்பு. மேரி என்றைக்குமே அப்படித்தான். பள்ளிக்கூட நாட்களில் கான்வெண்டில் படித்த போதுகூட. புத்தகங்களுக்கு அவள் அட்டை போட்டுக் கொண்டு வருவதே ஓர் அழகு.

பேசிக் கொண்டே சாந்தாவுக்காகத் தேநீர் தயார் செய்தாள் அவள். கோப்பையும் கையுமாக இருவரும் எதிர் எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். சாந்தாவின் பார்வை உயர்ந்தது. தலைக்குமேலே ஓர் அழகிய வாலிபனின் நிழற்படம் இருந்தது.

''யார் மேரி அது ?''

நெருப்பிலே விழுந்து விட்டது போல் அவள் புருவம் நிலைகொள்ளாமல் தத்தளித்தது. அதைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது. வெடிச் சத்தத்தில் பறவைக் கூட்டம் கலைவது போல், அந்தக் கேள்வியில் அவள் முகத்தில் மலர்ந்த உணர்ச்சிகள் அனைத்தும் கலைந்து போயின.

''என் கணவர் சாந்தா. விமானப் படையில் இருந்தார். மூன்று வருஷங்களுக்கு முன்னால் எல்லைப்புறச் சண்டையில் —''

அவள் மேலே பேச முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள். பூக் கவசத்திலிருந்து ஒரு பூவை எடுத்து விரல்களின் நடுவே வைத்துத் திருகினாள். இதழ்கள் உதிர்ந்து சிதறின; அவள் உணர்ச்சிகளைப் போல்.

''ஐ ஆம் ஸாரி. நான் கேட்டிருக்கக் கூடாது.''

''பரவாயில்லை சாந்தா. யாரும் ஞாபகப் படுத்தா விட்டாலும் என்னால் அவரை ஒரு கணமும் மறக்க முடியாது. அதற்கப் புறம்தான் நான் இங்கே நர்ஸாகச் சேர்ந்தேன். சில சமயம் துன்பப்படுபவர்களுடன் கலந்து கொள்வதில்தான் நம் துயரத்தை மறந்துவிட முடிகிறது.''

''இருந்தாலும் மேரி —'' அவள் குரல் உள் வலியில் கனித்தது.

''உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் சாந்தா; ஒரு கணவரின் அன்பும் ஆதரவும் எத்தனை அருமையானதென்று. இன்று அதை நான் இழந்து நிற்கிறேன். அவர் இருந்தவரை எனக்கு எந்தப் பொறுப்பின் சுமையும் இருந்ததில்லை. இன்று எல்லாப் பொறுப்புகளும் மட்டும் அல்ல; அவருடைய நினைவே பெரும் சுமையாகக் கனக்கிறது.''

அறைக்குத் திரும்பும்போது மனம் ஒரு நிலையில் இல்லை. சரோ... மேரி.... அந்தச் சந்திப்புகளில் அவர்கள் மனத்தில் தெரிந்த அந்த உணர்ச்சிகள். இருவருக்கும் வெவ்வேறு நிலைகள். ஒருத்தி வாழ்க்கையில் அதற்காக ஏங்கிக் கொண்டிருப்பவள்; இன்னும் எட்ட முடியாதவள். இன்னொருத்தி அதை இழந்து நிற்பவள்; எட்டி நழுவ விட்டவள். ஆனால் இருவர் மனத்திலும் அந்த ஒரே ஏக்கம்தான் குடிகொண்டிருக்கிறது. அவளுக்குக் கிடைத்து, அவள் அருமை புரிந்து கொள்ளாத அந்தக் கரங்களின் ஆதரவுக்கும் அணைப்புக்கும்தான் அவர்கள் இருவருமே ஏங்குகிறார்கள்.

அவர்களுக்கு வாழ்க்கையில் சுதந்திரம் இருக்கிறது. மனம் விரும்பியபடி நடக்க, பழக, வாழ, வசதி இருக்கிறது. ஆனால் அந்த விடுதலையை அவர்கள் ஏற்க விரும்பவில்லை. தங்களுடைய சுதந்திரத்தை ஒருவரின் பாதுகாப்பில் ஒப்படைக்க முடியாத நிலைக்குத்தான் ஏங்குகிறார்கள். அந்த ஏக்கத்தில் தன்னுடைய உணர்ச்சி, வெறும் கற்பனையாகத் தெரிந்தது. பொருளற்றதாகத் தெரிந்தது.

விடைபெற்று ஊருக்கு வரும் போது, கோடை ரோடு ஸ்டேஷனில் சரோவின் கண் கலங்கிற்று. கொடைக்கானல் மலையின் குளிர்ச்சியிலிருந்து கீழே இறங்கி வந்துவிட்ட வெம்மை, அவள் மூச்சிலும் தட்டிற்று. பழங்களின் மலர்களின் மணம் கமழும் ஸ்டாலின் அருகே இருவரும் நின்று கொண்டிருந்தார்கள். அவற்றின் வாசத்தையும் குளிரையும் போல், வாழ்க்கையில் இளமையும் கொஞ்ச நாளைக்குத்தான். அவற்றைத் துய்ப்பதற்கு ஒருவர் இருந்தால்தான் அவற்றுக்கும் மதிப்பு இருக்கும்.

ரயில் வந்தது. ஏறிக் கொண்டாள்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தை விட்டு வண்டி விலகிய போது, சரோவின் உருவம் மறைவது கண்முன் நின்றது. ஏதோ ஓர் உண்மையைக் காட்டி மறைப்பது போல் இருந்தது. அந்த இரு மாதங்களில் அவள் மனத்தில் ஒரு புத்துணர்ச்சி அரும்பி நின்றது.

ரகு திரும்பி விட்டான். கொஞ்ச நாட்களில் அநேகமாகத் தில்லிக்கே மாற்றல் இருக்குமாம். உத்தியோக உயர்வாம் அது.

''அங்கே உனக்கு வசதிகள் இருக்கும். நீ விரும்பினால்.....''

''விரும்பினால் ?''

''வேலைக்கும்கூடப் போகலாம்'' என்று அவளைப் பார்த்தான் ரகு. கண்களில் கனிவு தெரிய அவளைத் தன்புறமாக இழுத்துக் கொண்டான். ''உன் ஏக்கம் எனக்குத் தெரியும் சாந்தா.''

அந்தப் பிடியிலிருந்து விலக மனமின்றி அவன் மேல் சாய்ந்து கொண்டாள் சாந்தா. அந்த வளைத்துப் பிடித்த அணைப்பும் கட்டுப்பாடும் அவளுக்குப் புதுப் பொருள் கொண்டு தோன்றின.

''வேண்டாம். எனக்கு வீட்டிலேயே ஒரு புது வேலை காத்துக் கொண்டிருக்கிறது.''

''என்னது ?''

''உங்கள் குழந்தைக்குத் தாயாக இருக்கப் போகிற வேலை !''

நாள் முழுதும்
தலைமயிர் படிந்திருக்க



கல்கெமிகோவின்

# காஸ்டரால்

சுகந்த கூந்தல் தைலம்
உபயோகியுங்கள்

மிக சுத்தமான கனிம்பற்ற ஆமணக்கெண்ணெயிலிருந்து தயாரித்தது. மயிர்க்கால்களை புஷ்டிப்படுத்தி மங்கலான மயிர்களுக்கு புத்துயிரையும் பிரகாசத்தையும் அளித்து நாள் முழுதும் மயிர் கலையாமல் இருக்கவும் உதவுகிறது.




ஒரு கல்கத்தா கெமிக்கல் தயாரிப்பு

பண்டிட்
டி.கோபாலாசார்லுவின்

# அருணா

மாதர்களின் ஆரோக்கிய
சௌபாக்கியத்திற்கு

1898 ஆண்டிலிருந்து
பிரசித்தி பெற்றது...

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்

# மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

# ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
— ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

# ஒருவரும் அடாத விலை கொடுக்க விரும்புவதில்லை...

ஆகவே நீங்கள் அடித்துப் பேசி வியாபாரி உங்கள் விலைக்கு வர முயற்சிக்கிறீர்கள். சில சமயங்களில் வெற்றி பெறுவதுடன் சொற்ப பணமும் மிச்சப்படுத்துகிறீர்கள்— சந்தோஷம்தான். ஆனால் அது ஒரு அற்பகால வெற்றியே!

உங்கள் வரும் காலத்திற்காக நீங்கள் உங்களிடமே விலைபேச பழகவேண்டும். அனாவசியமான செலவுகளை சுருக்கி பணத்தை சேமியுங்கள்.

உங்கள் பணத்தை வளர்த்து, சந்தோஷமான எதிர் காலத்துக்குவழிகாட்ட யூகோ பாங்கில் உங்கள் பணத்தை சேமியுங்கள்.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை காரியாலயம் : கல்கத்தா-1




நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.



# யுத்தகளத்தில் ஒரு நாய்!

**1950**-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் காலைப் பொழுது. லண்டனுக்கு அருகில் உள்ள ஓர் இடுகாட்டில் நூற்றுக் கணக்கான ஆங்கிலேய இராணுவ வீரர்கள் அணி வகுத்து நிற்கின்றனர். ஒரு சவப் பெட்டியை நான்கு போர்வீரர்கள் பயபக்தியுடன் மெல்ல மெல்ல அதற்காகத் தோண்டப்பட்ட குழிக்குள் இறக்குகிறார்கள். ராணுவ மரியாதையுடன் சவ அடக்கம் நடந்து முடிந்ததும், அந்தப் பிரதேசத்தைச் சுற்றி நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு ராணுவத் தளபதி ஒருவரின் குரல் ஒலிக்கிறது:

''இன்று சவப் பெட்டியில் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் டிச்சின் வீரமும், கடமையுணர்வும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது எண்ணற்ற போர் வீரர்களைப் பலவித அபாயங்களிலிருந்து பாதுகாத்துள்ளன.''

இவ்வாறு சகல ராணுவ மரியாதைகளுடன் பூமியில் புதைக்கப்பட்ட டிச் இங்கிலாந்து நாட்டின் பிரசித்தி பெற்ற ராணுவ வீரனல்ல — மனிதனே யல்ல! ஆம்! டிச் ஒரு நாய்; பெண் நாய்!

டிச் பிறந்தது ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள, உலக யுத்த வரலாற்றில் புகழ்பெற்ற எல் அலாமின் என்ற ஊரில். கன்னங்கரிய மேனியைக் கொண்ட டிச் ஓர் அதிசயமான நாயாக'வளர்ந்தது. அதன் முதுகில் சிலுவை வடிவில் ஒரு மச்சம் போன்ற ரேகை இருந்தது. எல் அலாமினின் வீதிகளில் டிச் அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு நாள் ஓர் அராபியன் அதனைத் தந்திரமாகப் பிடித்து விட்டான். பிடித்தவன், தானே அதை வளர்க்கவில்லை. வளர்க்க விரும்பவும் இல்லை. தன் வயிற்றுப்பாட்டுக்கே திண்டாடுபவன், இன்னொரு ஜீவனின் வயிற்றுப் பசிக்கு என்ன வழி செய்வான்? எனவே, ஜான் ஸென்ஸ்பை என்ற பிரிட்டிஷ் போர்வீரனுக்கு ஒரு கோப்பைத் தேநீரை விலையாகப் பெற்று டிச்சை விற்று விட்டான். ஸென்ஸ்பையிடம் டிச் ஒருசில வாரங்களே இருந்தது.

டிச் அவனிடமிருந்து டாமி வாக்கர் என்ற வீரனிடம் கைமாறியது. டாமிக்கும் டிச்சுக்கும் இடையே ஓர் அசாதாரணமான, நெருக்கமான நட்பு வளரத் தொடங்கியது.

**த**ளபதி ரோமலின் தலைமையில் ஆப்பிரிக்காவிலிருந்த ஜெர்மானியப் படைகளை எதிர்த்துப் போர் புரிந்த பிரிட்டிஷ் வீரர்களுள் டாமியும் ஒருவன். போர்க்களத்துக்கு டிச்சையும் அழைத்துச் சென்றான் டாமி.

நாய்களுக்கே உரிய மோப்பம் பிடிக்கும் சக்தியால் டிச் டாமியையும் அவனது நூற்றுக்கணக்கான சக போர் வீரர்களையும் நாஜிப் படையினரின் வெடி குண்டுகளினின்றும் காப்பாற்றியது. ஒரு சமயம் போர்க்களத்தில் குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடந்த நூற்றுக் கணக்கான வீரர்களைத் தூக்கி ராணுவ லாரிகளில் ஏற்றிக் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. டாமி அப்பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது டிச் காயமடைந்த ராணுவ வீரர்களை வாயால் கவ்வி ஒருவர் பின் ஒருவராக இழுத்து வந்து கொண்டிருந்தது. சுற்றிலும் நாஜிப் படைகளின் குண்டு வீச்சு பயங்கரமாக மழையெனப் பொழிந்து கொண்டிருந்தது. அவ்வேளையில் டிச்சையும் டாமியையும் தவிர மற்ற எல்லா ஆங்கிலேய வீரர்களும் குழிகளில் பயந்து பதுங்கிக் கொண்டிருந்தனர், தங்கள் உயிரை வெல்லமாக எண்ணி.

அப்படைப் பிரிவைச் சேர்ந்த தலைவர் வில்லியம்ஸ் பதுங்கிக் கிடக்கும் வீரர்களையும் உயிருக்குத் துணிந்து பணியாற்றும் டிச்சையும் மாறி மாறிப் பார்த்தார். ''குழிகளை விட்டு வெளியே வாருங்கள். கேவலம் ஒரு நாய்கூட நாஜிப் படைகளுக்குப் பயப்படாதபோது நீங்கள் பயந்து சாகிறீர்களே! நீங்களும் வீரர்கள்தானா?'' என இரைந்தார்.


அவரது பேரிரைச்சலைக் கேட்டு வெளி வந்த போர்வீரர்கள் டிச்சின் அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு வியந்து அதை முன் மாதிரியாகக் கொண்டு மீண்டும் போரிடத் தொடங்கினார்கள்.

போர்க்களத்தில் ஓர் இராணுவ வீரனைப் போலவே தங்கியிருந்த டிச், சிகரெட் பிடிக்கவும் கற்றுக் கொண்டது. எல் அலாமின் ஒரு பாலைவனப் பிரதேசமாதலால் அங்கு தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோதெல்லாம் அது ராணுவ வீரர்கள் க்ஷவரம் செய்து கொட்டிய தண்ணீரைக் குடிக்கப் பழகிக் கொண்டது.

1945ம் ஆண்டில் உலகப் பெரும் போர் ஒருவாறாக முடிவடைந்ததும் ஆயிரக் கணக்கான இராணுவ வீரர்களோடு டிச்சும் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டது. இதற்குள் டிச்சின் வீரச் செயல்கள் நாடு முழுவதும் ஏற்கனவே பரவியிருந்த காரணத்தால் மிருக வைத்தியசாலைகள் அமைக்க நிதி திரட்டுவதற்காக டிச், டெலிவிஷன் நிகழ்ச்சிகளிலும் பொருட்காட்சிகளிலும் பங்கு கொண்டது.

1949ம் ஆண்டில் மேலும் பெருமையும் புகழும் டிச்சைத் தேடி வந்தன. விம்ளி மைதானத்தில் பத்தாயிரம் மக்கள் அடங்கிய ஒரு விசேஷக் கூட்டத்தில் இங்கிலாந்து நாட்டின் சிறந்த இராணுவ வீரர்கள் கௌரவிக்கப்படுவது போல் டிச்சும் கௌரவிக்கப்பட்டது. போர்க்களத்தில் புரிந்த வீர சாகஸங்களுக்காக டிக்கின் பதக்கம் டிச்சுக்கு வழங்கப்பட்டது.

— **அ. இராமதுரை**



# மன்னிப்பு..

ருக்மிணி பார்த்தசாரதி

பெர்க்லி-கல்கி இலக்கியப் பரிசுத்திட்டம்

ஹேராஷியோ வானத்தைப் பார்த்தான். வெளிர் நீல நிறத்திலேயே ஏதோ தூய்மை தெரிந்தது. நேற்று இருண்டு கிடந்த மேகங்களின் சுவடே இல்லை. நேற்று கோதுமை வயல்களில் விழுந்த மழைத் துளிகள் நெஞ்சுக்குள் மறைந்து கொள்ளும் பரம பிதாவைப் போல் பூமிக்குள் மறைந்து விட்டன. இன்றோ பூமி புத்தாடை தரித்தது போல் மின்னிற்று. கதிரவன் இன்னும் வானத்தில் ஏறவில்லை. ஏறிவிட்டால் இதோ புல் மீது ஜ்வலிக்கும் பனித் துளிகள் உருகி அமுது நீராய் உருமாறி விடுமே !

இயற்கையில்தான் எத்தனை அழகுகள் ! இன்னிசை எழுப்பி, வானத்தில் லாகவமாகப் பறக்கும் பறவைக்கூட்டம். சண்டையின்றி, சச்சரவின்றி, ஒன்றாய் ஒற்றுமையாய், மிதந்து செல்லும் ஒரு பெரிய கருமேகமே போல் பறந்து செல்லும் கூட்டம் ! பின்னணியில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் நீல வானில் தவழும் வெள்ளை மேகங்கள்... காய்ந்து கிடக்கும் பூமிக்கு வானம் கனிந்து மழை நீரைக் கொட்டித் தாகத்தைத் தீர்க்கும் கருணை.... பூமிக்கு மேகம் தாயோ? அழும் குழந்தையை அரவணைக்கும் தாயோ ?

குழந்தை தூக்கம் கலைந்து அழுதான்.

ஹேராஷியோ குழந்தையினருகே விரைந்தான். சட்டென்று நெஞ்சில் துன்பம் அழுத்திற்று...... இந்தக் குழந்தையின் தாய்

எங்கே? கோமேர் (Gomer) எங்கே? அழகின் அரசியான அவன் மனைவி எங்கே ?

கோமேர் போய் விட்டாள். போய் இதோ ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. மூன்று குழந்தைகளை ஈன்றவளுக்கு அவர்களைப் பிரிந்து போகத்தான் மனம் எப்படி வந்தது ?

போனவள் அவன் நெஞ்சில் எப்படி வேதனையைக் கொட்டி விட்டுப் போய் விட்டாள்!

கோமேர் அவன் வாழ்விலிருந்து மட்டுமல்லாமல் உலகிலிருந்துமே போயிருந்தால் அவன் நெஞ்சில் இந்த மாதிரியான வேதனை இருந்திருக்காது. அப்போதும் அவன் வருந்தியிருப்பான். ஆனால் சாவின் மாபெரும் சக்தியினால் அவன் நினைவே புனிதமடைந்து அவன் நெஞ்சில் நறுமணமாய்க் குடிகொண்டிருக்கும்.

ஆனால் கோமேர் போனது, அவனையும் குழந்தைகளையும் விட்டுத்தான். இதே நகரில்,



இதே இஸ்ரேயிலில் (Israel) அவள் வாழ்கிறாள். ஒரு நாள் ஒருவன் இல்லத்தில், மறு நாள் மற்றொருவன் இல்லத்தில்.

அவள் நினைவையே உதறி விடுபவன் போல் ஹோஸியா தன் உடம்பை உலுக்கிக் கொண்டான். அழும் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டான். தாய்க் கரம் பட்டதும் அழுகையை மறந்து சிரிக்கும் குழந்தையைப் போல் தந்தையின் கரங்களில் சிறு வாய் மலரச் சிரித்தான் குழந்தை!

தமக்குள் இன்பமாய் விளையாடிக் கொண்டிருந்த மற்ற இரு குழந்தைகளும் ஏதோ பொறுமையும் கட்டுக்கடங்காத அன்பும் பெருக ஓடி வந்து அவன் கால்களை அணைத்துக் கொண்டார்கள்.

அழகே உருவான தன் மூன்று மக்களைப் பார்த்தபோது ஹோஸியா தன் துன்பங்களை மறந்தவனாய் முறுவலித்தான். எட்டு வயதில் மூத்த மகன். ஐந்து வயது எழில் வடிவமான மகள். இரண்டு வயதுக் குழந்தை. மூவரிடமும் தாயின் கொள்ளை அழகு. இவர்களை விட்டுப் போகத்தான் கோமேருக்கு மனம் எப்படி வந்தது? அவன் அழகற்றவனாய் இருக்கலாம். ஆனால் தன் பெற்றெடுத்த குழந்தைகளிடம்கூட அவள் அன்பும் பெருமையும் கொள்ளவில்லை என்றால், அவள் மனம்தான் எத்தனை விகாரமாயிருக்க வேண்டும்!

அது கி. மு. எழுநூற்று ஐம்பதாம் ஆண்டு. சரித்திரத்தில் மிக மிகப் பழமையான ஏடு! அந்தக் காலமே விசித்திரமானது, கொடியதும்கூட. வயல்களுக்கும் வயல்களின் தானியங்களுக்கும் "பால்" (Baal) என்ற ஒரு தெய்வத்தைச் சிருஷ்டித்து, அந்தத் தெய்வத்தைத் திருப்திப்படுத்த நரபலியையும், குடித்துக் கிறங்கி ஆடும் ஆட்டத்தையுமே சிறந்த வழிபாடுகளாக இஸ்ரவேலின் மக்கள் நினைத்திருந்த காலம் அது. பூமிக்கு அரசன் 'பால்'. வனமைக்கு அரசி ஆஸ்டார்டே (Astarte) ஆனால், இவர்கள் கொடுமையானவர்கள்.... நரபலிக்காகப் பசித்திருப்பவர்கள்! அந்தப் பலி கிடைக்காவிட்டால் வயல்களைக் காய வைத்துப் பஞ்சத்தை ஏற்படுத்தி விடுவார்கள்.

இந்த அரக்க மனம் படைத்த "பால்" உண்மையான தெய்வமல்ல, நல்லோர்க்குத் துணை நிற்கும் யேஹோவாவே (Jehovah) எல்லாம் வல்ல பரம பிதா என்று எலிஜா (Elijah) இஸ்ரவேல் மக்களிடம் புதியதொரு ஞானத்தைப் பரப்பியிருந்த தென்னவோ உண்மைதான். ஆனால் இதனால் ஏற்பட்ட மாறுதல், பழைய நரபலிகளோடு மது மயக்கத்தோடும் "பால்" என்பதற்குப் பதில் "யேஹோவா!" என்று உச்சரித்தார்கள் அவர்கள்....

மூடத்தனமும் அசுர வழக்கங்களும் மலிந்து கிடந்த அந்தக் காலத்தில் வாழ்ந்த ஹோஸியா, அந்தக் காலத்தோடு தானும் தேய்ந்து மறைந்துவிடவில்லை என்றால் அதற்கு ஒரு காரணம்தான் இருக்க முடியும். தன் காலத்துக்கு ஒவ்வாத அன்பு மனம் கொண்டிருந்தான ஹோஸியா!

**ம**னத்தை மயக்கும் மாலைப் பொழுது. ஹோஸியா கடைத்தெருப் பக்கமாக நடக்கலானான். வீட்டிலிருந்தால் கோமேரின் நினைவு இதயத்தைத் தூள் தூளாக்கி விடுகிறது.....

சட்டென்று மனத்தில் ஏதோ எண்ணம் எழுந்தது. ஒரு வேளை இன்று கோமேர் கண்ணில் படுவாளோ? தன் நடத்தைக்காக வருந்தி, திருந்தித் திரும்பி விடுவாளோ?

இந்த எண்ணம் இனிப்பாகவும் இருந்தது, அடி மனத்தில் கசக்கவும் செய்தது.

வீதிகள் உயிர்த் துடிப்போடு சலசலத்துக் கொண்டிருந்தன. கவலையின்றி ஓடி ஆடும் சிறுவர் சிறுமியர். அழகழகான பெண் மணிகள், கம்பீரமான ஆண்கள். அகன்ற மார்பும் நிமிர்ந்த தலையும் கொண்டவர்கள் ஹூம்! அவனைப் போன்ற அழகற்றவர்களா எல்லோரும்!

அவன் பூஜை பீடத்தை அடைந்து விட்டான்!

• பூஜை பீடம்... அதாவது பலிபீடம்...

அதனருகே அகலமான கல் தூண் — ஆண் தெய்வம் 'பாலி'ன் சின்னம்... மெல்லியதான மரக் கம்பம் — பெண் தெய்வம் ஆஸ்டார்டேயின் இந்தச் சின்னத்தைப் பூமாலைகளால் அலங்கரித்துக் கொண்டிருந்தாள் ஒரு பணிப் பெண்.

பலிபீடம் காலியாயிருந்தது. ஆனால், அதைச் சுற்றி மதுவுண்டு வெறிகொண்ட ஆடவர் ஆடிக் கொண்டிருந்தார்கள். சிவந்து கிடந்த அவர்கள் கண்களும், காலியாயிருந்த பலிபீடத்தை நோக்கி அவர்கள் வாளை வீசி வீசி ஆடிய விதமும் ஹோஸியாவுக்கு அருவருப்பை அளித்தன.

சட்டென்று ஹோஸியாவின் கண்கள் கூர்மையாயின. எதிரே ஆபரணங்கள் ஜ்வலிக்க, இளமையின் சௌந்தர்யம் அங்கமெல்லாம் பூரித்து வழிய, கொடியைப் போல் ஏதோவொரு வாலிபனின் தோள் மீது துவண்டு சாய்ந்து, பலி பீடத்தைச் சுற்றி ஆடும் வெறியர்களைச் சுவாரசியமின்றிப் பார்த்துக் கொண்டிருந்த கோமேரை அவன் கண்டான்.

பலிபீடத்தையும், மதுவுண்டு ஆடுபவர்களையும் அவன் மறந்தான். இதயமே கிழிந்து விடும் போல் "கோமேர்!" என்று கூவி விட்டான்.

அவள் கண்களைத் திருப்பி அவனைப் பார்த்தாள். உதடுகளில் ஏளனமான புன்னகை சர்ப்பம் போல் நெளிந்தது. தலையை உயர்த்தி அருகேயிருந்தவனிடம் ஏதோ சொன்னாள். அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

சுற்றியிருந்தவர்கள் எல்லாருமே அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்; கைகொட்டிச் சிரித்தார்கள்.

அவள் தன் துணைவன்மேல் துவண்ட நிலையில் அன்னமென நடந்து சென்றாள்.

சிரிப்பொலி இடியாக அவன் செவிகளில் வெகு நேரம் முழங்கிக் கொண்டிருந்தது.

**ம**று நாள் காலையும் அவன் கடைத்தெரு பக்கம் சென்றானே ஏன்? கோமேரைப் பார்க்க முடியலாம் என்ற சபலம்தான். பார்த்தால் நெஞ்சம் அப்படியே வேதனை

# தாங்க முடியாத நோவா?

அதிகச் சக்தி வாய்ந்த
நிவாரண மாத்திரையான பல நிற

# ஸால்ஜான்


உபயோகியுங்கள்

தலை நோவு • ஜலதோஷம் • உடல் நோவு
பல்வலி • தசைவலி • ஃபுளு

நினைவிருக்கட்டும் ஸால்ஜான் மட்டுமே
பல நிறம் கொண்ட நோவு நிவாரணி


ஒரு எஸ். எஸ். தயாரிப்பு



# நிறுத்து!

## பணத்தை எடுத்துச்செல்லப் பாதுகாப்பான வழி—
## ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகள்




இருந்தும் அவற்றை நீங்கள் விரைவாக ரொக்கமாக்க முடியும்—பாங்கி அலுவலகத்திற்கு வெளியே கூட. அவை தொலைந்துபோனாலோ, நாசமானாலோ அல்லது களவு போனாலோ கூட நீங்கள் உங்கள் பணத்தைத் திரும்பப் பெறலாம். கமிஷன் ஏதுமின்றி. அவை ரூ. 50/- மற்றும் ரூ. 100/- தொகைகளில் வழங்கப்படுகின்றன.
அடுத்த தடவை பயணம் செய்யும்போது, பணத்தை ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகளாக எடுத்துச் செல்லுங்கள்.
ஸ்டேட் பாங்க் பிரயாணிச் செக்குகள்
—பணத்தை எடுத்துச் செல்லப் பாதுகாப்பான வழி.

**சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்**

S-534

யில் துவண்டு போகிறதென்னவோ உண்மை தான். இருந்தும் அவளைப் பார்க்கத்தான் அவன் விரும்பினான்.

ஆனால் கோமேர் இன்று கண்ணில் படவில்லை. அதிர்ச்சி தரும் வேறொரு விஷயத்தை அவன் செவியுற்றான்.

பலிபீடத்தை ஒருவன் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

''இன்று மாலை பலியாக்கும்!'' என்றான் ஹோஸியா.

''ஆமாம்....''

''எருதா ? ஆடா ?''

''ஆண் குழந்தை !''

''என்னது !''

''வயல்களில் சரியான விளைச்சல் இல்லாததால் யேஹோவாவைத் திருப்திப்படுத்த தன் மூத்த பிள்ளைக் குழந்தையைப் பலியிடுகிறார் ஒருவர்.....''

''ஆனால் 'பால்' அல்லவா பலி கேட்கும் தெய்வம்? உண்மைத் தெய்வம் யேஹோவா அன்பின் அவதாரமில்லையா ?''

''ஏன்? பலியைப் பார்க்க உனக்குப் பயமாயிருக்கிறதா?'' கேட்டவனின் குரலிலேயே கேலி கொப்பளித்தது.

''ஆமாம்!'' நியதைக் கண்டால் நெஞ்சம் அச்சமுறுவது உண்மைதான் !

''பயமாயிருந்தால் முகத்தை மூடிக் கொண்டு விட்டிரு !''

''ஆனால் இது தவறு ! நரபலி பாபத்தின் சிகரம். ஒன்றுமறியாத குழந்தையைக் கூசாமல் பலியிடுவது....''

''குழந்தைக்கு வலி தெரியாது. மயங்கிக் கிடப்பான்.''

''அது முக்கியமில்லை.''

''உன் வரையில் மனைவி கண் முன்னே நாடகம் ஆடினால்கூட முக்கியமில்லை!'' — சிரிப்பு சிதறிற்று. ஹோஸியா வாயடைத்து நின்றான். ஆனால் அவன் மனம் தன் மனைவியை நினைத்து அவமானப்படும் நிலையில் அப்போது இல்லை. இந்த நரபலி — இதை அவன் எப்படியாவது நிறுத்த வேண்டும். வயலின் வளமைக்காக ஆண் குழந்தைகளைப் பலியிடுவது, வீடு தழைக்க அஸ்திவாரத்திலும் சுவர்களிலும் உயிரோடு மக்களைப் புதைப்பது — இவை அறிவீனத்தால் வளர்ந்த வழக்கங்கள். ராட்சச மனம் கொண்ட 'பால்' இவற்றை ஏற்றிருக்கலாம். ஆனால் அன்பின் உருவான, மன்னிப்பின் அவதாரமான யேஹோவின் பெயரிலா இந்த மூடத்தனம்?

அவன் இந்த நரபலியை எப்படியாவது நிறுத்த வேண்டும். நெஞ்சில் அந்த உறுதி மெள்ள மெள்ள வளர்ந்து அவன் இதயத்தையும் உடலையும் ஆட்கொண்டது. மனத்தில் ஓர் எண்ணம் எழுந்தது.

அவன் திரும்பி நடக்கலானான்.

ஒரு பலகையில் ''என் மக்கள் இல்லை'' என்றும் மற்றொன்றில் ''தயை இல்லை'' என்றும் எழுதியாகி விட்டது.

தன் கடைசி இரண்டு குழந்தைகளை அழைத்தான் ஹோஸியா. மார்போடு மார்பாக அணைத்து நெற்றியில் மெத்தென்று முத்தமிட்டான். பின் அழகிய பெண் மகவின் கழுத்தில், ''தயை இல்லை'' என்ற பலகையையும், மழலைமொழி பாலகனின் கழுத்தில், ''என் மக்கள் இல்லை'' என்ற பலகையையும் மாட்டினான். நெஞ்சம் ஒரு கணம் விண்டு விடும் போல் வலித்தது. ஆனால் அந்த வலியோடுகூட ஒரு நம்பிக்கை இருந்தது. கள் வெறியில் ஆடும் மூடர்களின் நெஞ்சைத் தொடும் சக்தி எதற்காகிலும் உண்டு என்றால், அது நிச்சயம் கள்ளமற்ற குழந்தைகளுக்குத்தான் உண்டு. மகள், ''கழுத்து வலிக்கிறது, கழற்றி விடு !'' என்று முகம் சுளித்தாள்.

''இன்னும் கொஞ்ச நேரம்தான் !'' என்று அவளை அழைத்துச் சமாதானப் படுத்தினான் ஹோஸியா.

பின், இரண்டு வயதுப் பாலகனைத் தோள் மீது சுமந்து கொண்டு, பலகையின் கனத்தில் தள்ளாடும் மகளை ஒரு கையால் அணைத்துக் கொண்டு, பலிபீடத்தை நோக்கி நடக்கலானான்.

வீதியில் எத்தனையோ ஜோடிக் கண்கள் அக்குழந்தைகள் மீது பதிந்தன. அவற்றில் ஆச்சரியம், ஏளனம் வழிந்தன. ''பைத்தியக்காரனுக்கு இன்று பித்து தலைக்கேறி விட்டது!'' என்று ஒருவன் உரக்கக் கூறி வீதியே அதிரச் சிரித்தான். ஹோஸியாவோ நடந்தான், பலிபீடத்தை நோக்கி. எதற்காகவும் இன்று அவன் தாமதிக்கக் கூடாது. இதயத்தைத் தைக்கும் எந்தச் சொல்லுக்காகவும் அவன் கூசிப் பின்வாங்கி விடக் கூடாது.

பலிபீடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மயங்கிய நிலையில் ஓர் ஆறு வயதுச் சிறுவன் அதில் கிடத்தப்பட்டிருந்தான். ஹோஸியாவின் இதயம் அந்தக் காட்சியைக் கண்டு உருகிற்று, கூடவே திடம் பெற்றது. குழந்தையினருகே அதன் தகப்பனும் எதிரே விம்மி விம்மித் தேயும் தாயும் இருந்தனர்.

பூசாரி கள் வெறியில் இரை தேடும் கொடிய விலங்கென மயங்கிக் கிடக்கும் பாலகனைப் பார்த்துப் பல் தெரியச் சிரித்துக் கொண்டிருந்தான்.

சுற்றி ஜனங்களின் கூட்டம். நரபலி என்ன கண்ணுக்கு ரம்யமான காட்சியா ? இதயத்தை மகிழ்விக்கும் அழகிய கலையா?

கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு பலிபீடத்தருகே சென்றான் ஹோஸியா. பீடத்தின் மேல் மயங்கிக் கிடக்கும் பாலனருகே தன் மகளை நிறுத்தினான். அவளுக்குப் பக்கத்தில் தன் மகனையும் நிற்க வைத்தான்.

''பாருங்கள் இவர்களை.'' அவன் குரல் உயரக்கூட இல்லை. ஆனால் கணப் பொழுதில் பேச்சுக் குரல்கள் சலசலத்துக் கொண்டிருந்த இடத்தில் மௌனம் குடிகொண்டது.

''பார்த்தீர்களா? யேஹோவாவின் கண்களில் உங்கள் செயல் எப்படிப் படும் என்று புரிந்து கொண்டீர்களா? நரபலியில் இன்பம் காணும் உங்களை, 'என் மக்கள் இல்லை !' என்று ஒதுக்கி விடுவான் — யேஹோவா. உங்களிடம் தனக்குத் தயை இல்லை என்று சொல்லி விடுவான். உண்மைத் தெய்வம் 'பால்' இல்லை, யேஹோவா தான் என்று நீங்கள் உணர்ந்து கொண்டு நடக்கும் விதமா இது ? நரபலியும் ஒரு தெய்வ வழிபாடா?''

அவன் குரல் உணர்ச்சியில் உயர்ந்தது.

கூட்டத்தில் இன்னமும் மௌனம் நிலவியது.

''பால் நரபலியினால் திருப்தி பெற்றிருக்கலாம். ஏனென்றால் ''பால்'' உண்மையில் தெய்வமில்லை. யேஹோவா மன்னிப்பின் அவதாரம் நற்செயலில் திருப்தி பெறும் நற்குணத்தின் உருவம். யேஹோவாவின் கருணை வேண்டுமானால் அரக்கத்தனமான வழிபாட்டை மறந்து விடுங்கள். அவன் கண்களில் இது மன்னிக்க முடியாத குற்றம்.....''

கூட்டத்தில் இப்போது பேச்சுக் குரல்கள் கிசுகிசுக்க ஆரம்பித்தன. சட்டென்று ஒரு வாலிபன் அவனருகே வந்து, ''உன் குரல் என்ன இன்று உயர்கிறது? உன் மனைவி திரும்பி விட்டாளா ?'' என்று கேட்டுச் சிரித்தான்.

மறுகணம் கூட்டம் கொல்லென்று சிரித்தது.

ஹோஸியா முகம் சுளிக்கக்கூட இல்லை. இப்போது அவன் மனத்தில் தன்னைப் பற்றிய சிந்தனையே இல்லை. குனிந்து பலிபீடத்தின் மேல் மயங்கிக் கிடந்த குழந்தையைப் பார்த்தான். கேலிச் சிரிப்பு சற்று அடங்கியதும் அந்த வாலிபனிடம், ''என் மனைவி செய்தது தவறு என்று உனக்குத் தெரிகிறதல்லவா ?'' என்று கேட்டான்.

''இது உன் மூளைக்குக்கூட எட்டியிருக்குமே !'' மறுபடியும் கூட்டத்தில் கேலிச் சிரிப்பு அலையாய் எழுந்து மோதிச் சிதறிற்று.

ஹோஸியாவின் குரல் உயர்ந்தது. ''என் மனைவி செய்த தவற்றை நீங்கள் எல்லாரும் கூடச் செய்கிறீர்கள் !''

''என்னது ! பைத்தியமா உனக்கு?''

''இல்லை. யோசித்துப் பாருங்கள். கோமேர் என்ன செய்தாள் ? கணவன் இருக்க அவனை விரும்பாமல் காதலனைத் தேடிச் சென்றாள். அதே தவற்றை நீங்கள் செய்யவில்லையா ? யேஹோவா இருக்க, 'பாலி'ன் திருப்திக்குத் தானே நரபலி கொடுக்கிறீர்கள்? இதுவும் ஒரு விதத்தில் பதி துரோகம்தான்!''

கூட்டத்தில் இன்னமும் மௌனம் நிலவியது.

''இது பதித் துரோகம்தான். ஆனால் நீங்கள் திருந்தி விட்டால் யேஹோவா உங்களை மன்னித்து விடுவான். சாதாரணக் கணவன் செய்யக் கூசும் காரியத்தைச் செய்து விடுவான்.''

சட்டென்று கோபம் தெறிக்கும் ஒரு குரல் ''பைத்தியக்காரா ! எங்களையா உன் மனைவியோடு ஒப்பிடுகிறாய்?'' என்று சீறிற்று....

உடனே பல்வேறு குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

''உபதேசம் செய்ய உனக்கு என்ன தகுதி இருக்கிறது ?''

''நீ அறிஞனா ?''

''யேஹோவாவின் பிரதிநிதியா ?''

''மனைவியை அடக்கத் தெரியாதவன் ஊருக்கு உபதேசம் செய்ய வந்து விட்டான்.''

இவற்றினூடே பலிபீடத்தின் மேல் மயங்கிக் கிடந்த குழந்தையின் தாயார் தன் கணவனிடம் கதறும் ஒலியும் கலந்து ஒலித்தது. ''அவன் சொல்வது சரிதான். குழந்தைப் பலி தவறானது. என் குழந்தை இன்னும் என் மடியில் உட்கார்ந்துதான் உணவு கொள்கிறான். இவனை என்னிடமிருந்து பிரித்தால் நம் வயல்கள் விளைச்சலே இல்லாமல் கருகிவிடும்.''

''எப்படியும் இன்று பலி கிடையாது. இந்தப் பைத்தியக்காரன் ஒரேயடியாய்க் குழப்பி விட்டான்.'' குழந்தையின் தகப்பன் மயங்கிக் கிடந்த தன் மைந்தனைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

''ஹோஸியா !'' பூசாரி அவன் தோளை முரட்டுத்தனமாகப் பற்றித் திருப்பினான். ''உபதேசம் செய்யத்தானே வேண்டும் உனக்கு? அதோ நிற்கிறாளே, அவளுக்குச் செய்!'' அவன் குரூர திருப்தியோடு கூட்டத்தில் நின்றிருந்த ஒருத்தியைச் சுட்டிக் காண்பித்தான்.

கோமேர் ! அவளருகே இன்று மற்றோர் ஆண் மகன்.... அகன்ற மார்பும், திரண்ட தோள்களுமாய், இடது கையால் கோமேரின் மெல்லிடையை வளைத்துக் கொண்டு....

ஹோஸியா அப்படியே குன்றிப்போனான். ஏதோ மனத்தில் சட்டென்று தோன்ற தன் மகனிடம், ''அதோ உங்கள் தாய். நீயும் உன் தம்பியும்போய் அழைத்துப் பாருங்கள். அவள் வந்து விடுவாள்'' என்று அவர்களைப் பலிபீடத்திலிருந்து கீழே இறக்கி விட்டான்.

இருவரும் ஓடினார்கள். தாயின் கால்களை வளைத்துக் கொண்டார்கள்.

கோமேர் ஏதோ கனிவோடு அவர்களை நோக்கிக் குனிந்தாள்.

அவளுடன் இருந்தவன் தன் இரு கைகளால் இரு குழந்தைகளையும் பற்றி, பிஞ்சு உடல்களை முரட்டுத்தனமாய்ப் புழுதியில் தள்ளினான்.

வலி பொறுக்க முடியாமல் குழந்தைகள் வீறிட்டு அழுதார்கள்.

ஹோஸியா அவர்களிடம் ஓடி அவர்களை வாரி அணைத்தான்.

கூட்டம் சிரித்தது. சிரித்துக் கொண்டே இருந்தது.

**கா**லம் ஓடிக் கொண்டே இருந்தது.

ஹோஸியா இப்போதெல்லாம் கடைத் தெருவுக்கோ வழிபாடு நடக்கும் இடத்துக்கோ போவதில்லை. வீட்டில் குழந்தைகள் இன்பமாய் இருந்தனர். வெளி உலகம் கசப்பானது, துன்ப மயமானது! குழந்தைகளின் பராமரிப்பில் அவன் தன் மனப் புண்ணுக்கு மருந்தைத் தேடலானான். கோமேர் அவனுடன் வாழ்ந்த நாட்களில் கூட அவள் குழந்தைகளைக் கவனித்ததில்லை. சிறு கைகளைப் பற்றி முதலடி எடுத்து வைக்கக் கற்பித்தவன் அவன்தான். இரவில் அழும் குழந்தையைத் தாலாட்டியவன் அவன்தான். தவழ்ந்த நிலையில் தன்னையே குதிரையாக்கிக் குழந்தையைச் சவாரி ஏற்றிச் சென்றவன் அவன்தான். கோமேர் எப்போதுமே அலங்காரத்தில் லயித்திருப்பாள். வேறு எதிலுமே அவளுக்கு ஊக்கம் இருந்ததில்லை. இப்போதோ கோமேர் இதயத்தில் அடித்த அடிக்கு மருந்தாகவும் குழந்தைகளின் எழில் முகங்களே அமைந்தன.

கோமேரை நினைக்கையில்தான் இதயத்தில் கோபமும் துன்பமும் நிறைந்தன. 'சீ...தாயா அவள்! தன் குழந்தைகளைப் புழுதியில் தள்ளும் ஒருவனோடு போகிறவள் எத்தனை நீசமானவள்! நரபலி செய்து களித்துக் கூத்தாடும் பூசாரிக்கும் அவளுக்கும் என்ன வித்தியாசம்?'

இதயம் சீறும்... இதயம் கதறும்... கதறிச் சீறும்... சீறிக் கதறும்...

காலம் ஓடிக் கொண்டே யிருந்தது.

அப்படி வெளி உலகத்தில் நடக்கும் எதிலுமே மனம் ஒட்டாமல் இருந்தவன் அன்று மாலைமட்டும் வெளியே செல்ல மனம் கொண்டது விந்தைதான்... விந்தையோ யேஹோவாவின் சித்தமோ?

அவன் நடந்தான். மாலைப் பொழுது இன்று எழில் சிந்திற்று. தூரே பாலைவனத்திலிருந்து வரும் காற்றில் கூட ஒரு குளுமை இருந்தது. தெளிந்த வானில் வெண் பறவைக் கூட்டம் தவழ்ந்து சென்றது. இயற்கையின் நியதியிலே இன்று ஒரு லாகவம், ஒரு நளினம் இருப்பது தெரிந்தது.

அவன் நடந்தான். வழியில் குழந்தையொன்று தத்தித் தத்தி நடந்து வந்து அவனருகே நின்று, அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை பூத்தது. அவன் குனிந்து அதன் முகத்தை இரு கைகளால் ஏந்தி இதயம் குளிர முறுவலித்தான். பின், குழந்தையைத் தூக்கி அதன் தாயாரிடம் கொடுத்துவிட்டு மேலே நடந்தான்.

நடந்தவன் சந்தையை அடைந்துவிட்டான்.

சந்தையில் இன்று அசாத்திய கலகலப்பாயிருந்தது. விலைபோகும் எத்தனையோ பொருள்கள்...அவற்றில் ஜனங்களின் கவனத்தை அதிகமாக இழுத்தது அடிமைகள் தாம். குழந்தைகள், கிழவர்கள், பெண்கள், ஆண்கள்...

சட்டென்று ஹோஸியாவின் விழிகள் பிதுங்கின. என்னது! உண்மைதானா இது? அவன் மனப் பிரமையோ? நினைத்து நினைத்துக் கண்ணீர் சிந்தியதால் அந்தக் கண்ணீரே இரண்டு உருவம் பெற்றுவிட்டதோ?

விழிகளை மூடிக்கொண்டான். மனத்தில் ஐம்பதுவரை எண்ணினான். இது பிரமையானால் கலைந்துவிடும்! பின் கண்களைத் திறந்தான்...

எதிரே அதே காட்சி... அடிமையாக விற்கப்படப்போகிறவள் கோமேர்!

இந்தக் குறுகிய காலத்தில் அவள் எப்படி மாறிப் போய்விட்டாள்! பார்வையில் அந்த அகம்பாவமில்லை. கண்களில் அடிபட்டவளின் சோகம். மனம் குமுறி அழும் அழுகையை நன்கு அறிந்தவை போல் உதடுகளில் ஒரு கோணல். வாளிப்பான தேகம் வாடி மெலிந்து பரிதாபமாக இருந்தது.

அவள் தன் குழந்தைகளையும் விரும்பாமல் தேடிச் சென்ற காதலர்கள் எங்கே? எல்லோருமே வஞ்சித்து இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்களா?

ஹோஸியாவின் மனம் ஒரு கணம் உணர்ச்சிமயமாகியது. கோமேர்... அவன் மனைவி ... தன்னை மோசம் செய்தவள்... இவளா? இவளேதானா? சீ! பெண்ணா இவள்? பேய்! மிருகம்!

உணர்ச்சிகள் குமுறின. பின் மெள்ள மெள்ள அடங்கின.

அடிமை வியாபாரம் தொடங்கிவிட்டது.

''இதோ பாருங்கள்! இந்த அழகான பெண்ணைப் பாருங்கள்? உங்கள் விருந்தினரை மகிழ்விக்க வேறு சிறந்த பொருளை நீங்கள் வாங்க முடியுமா? இவளுக்கு என்ன விலை தருகிறீர்கள்? ஐந்து வெள்ளி நாணயங்கள்?''



செகோஸ்லொவாக்கியா நாட்டில் கேலிச் சித்திரங்கள் (கார்ட்டூன்கள்) போட்ட தபால் தலைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆதாரம்: ''இலஸ்டிரேடட் வீக்லி''
தகவல்: ''முத்து''

கூட்டத்திலிருந்து குரல்கள் தெறித்தன.

''ஐந்து நாணயங்கள்!''

''ஆறு...''

''ஏழு...''

ஹோஸியாவின் குரலும் இப்போது சேர்ந்து கொண்டது. ''பத்து வெள்ளி நாணயங்கள்...''

கூட்டத்தில் மற்றும் குரல்கள் எழுந்தன.

''பதினொன்று...''

''பதினொன்றும் கால் மரக்கால் தானியமும்....''

''பன்னிரண்டு...''

அதற்குப் பிறகு சற்று நேர மௌனம் நிலவியது. பின் ஹோஸியாவின் குரல் இரண்டாம் முறையாக உயர்ந்தது. தெளிவோடு, உறுதியோடு...

''பதினைந்து வெள்ளி நாணயங்களும் ஒன்றரை மரக்கால் தானியமும்...''

வியாபாரம் முடிந்து விட்டது.

விலைக்கு வாங்கி வீடு அழைத்து வந்தவளிடம் ஹோஸியா கேட்டான்: ''கோமேர் உன்னை நான் ஏன் வாங்கினேன் தெரியுமா?''

அவள் கண்களை உயர்த்தாமலே ''நான் அடிமையாகச் சேவகம் செய்ய!'' என்றாள்.

''இல்லை!''

''பின்னே?''

கலவரத்தில் நிமிர்ந்த அவள் கண்களில் ஏதோ குழப்பம், பீதி!

''இது உன் வீடு. இந்தக் குழந்தைகளின் தாய் நீ... அவர்கள் உனக்காக ஏங்கிப்போய் விட்டார்கள், கோமேர்! நீ பழையபடி இந்த வீட்டின் எஜமானிதான்!...''

''ஐயோ!'' அவள் கதறியவளாய் அவன் பாதங்களில் விழுந்தாள். ''அன்று நீங்கள் பலி பீடத்துக்கு முன் சொன்னீர்களே, தவற்றுக்காக வருந்தித் திருந்தினால் யேஹோவா மன்னிப்பான் என்று, அதைக் கேட்டுக் கூட்டமே சிரித்தது போல் நானும் சிரித்தேன். எல்லோரையும் போல் மன்னிப்பு என்பது பைத்தியக்காரனின் கற்பனை என்று நானும் நினைத்தேன். இன்று மன்னிப்பு என்னும் வார்த்தையின் அர்த்தத்தை உணர்த்தி விட்டீர்கள். இப்போது எனக்

குப் புரிகிறது. மனிதரான உங்களாலேயே என்னைப் போன்றவளை மன்னிக்க முடியுமானால் யேஹோவாவின் நெஞ்சில் எத்தகைய மகத்தான மன்னிப்பு இருக்க வேண்டும்?....''

''ஆமாம்... யேஹோவாவின் மன்னிப்புக்கு ஈடேது, இணையேது?''

''யாருமே ஏற்காத இதை இன்று என் மனம் உணர்கிறது. ஆனால்...''

''ஆனால்...''

''நான் நீசமானவள். என்னை மன்னிக்காதீர்கள்! மன்னிப்பதன் மூலம் நீங்களும் யேஹோவாவைப் போலவே உயர்ந்துவிடுகிறீர்கள்... இந்த உயர்வு எனக்கு அச்சத்தை மூட்டுகிறது. நீங்கள் மனிதனாய் என்னை அடியுங்கள், கொல்லுங்கள்...இந்த உயர்வை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது....''

''முடியும்.... இப்போதில்லாவிட்டாலும் மெள்ள மெள்ள முடியும். இதை உயர்வென்றே எண்ணாதே, கோமேர்... அன்பு என்று நினைத்துக் கொள்...''

''என்னால் முடியாது... நான் நீசமானவள் பாவி....''

''அதையெல்லாம் மறந்துவிட முயன்று பார், முடியும்...''

''எப்படி முடியும்? உங்களைப் பார்த்து நான் எள்ளி நகையாடியிருக்கிறேன்....கீழ்த்தரமான ஹாஸ்யத்தில் நானும் சேர்ந்து சிரித்திருக்கிறேன். என்னால் எப்படி முடியும்?''

''முயன்றால் முடியும்.''

ஆனால் அவளால் முடியவில்லை என்பதை அவன் மறுநாள் காலையில் சில்லிட்டிருந்த அவள் உடலைக் கண்டபோதுதான் உணர்ந்தான்.

அவள் கையில் விஷ வேர்...

தன் மனப் போராட்டத்துக்கு முடிவு கண்டு விட்டவளின் நிறைவு முகத்தில் நிலவியது.

அவள் நீசமானவள்...அவன் உயர்ந்தவன்.

இந்த வித்தியாசத்துக்கு மரணத்தின் புனித கரம்தான் பாலம் அமைக்க முடியும்! இனி அவன் இதயத்தில் அவள் நினைவு தூய்மையோடு வாழ முடியும்.

# வட்டமேஜை

''**உ**த்தரவின்றி உள்ளே வரக் கூடாது'' என்பதற்குப் பதில் ''அனுமதி பெற்று வரவும்'' என்று எழுதுவது பண்போடும் மனமகிழ்ச்சி அளிக்கவல்லதாகவும் இருக்கிறதென்கிறார் கல்யாணி.

(கல்கி 4—5—69 பக். 69)

இதே போல் கிறித்தவக் கல்லூரியில் (தாம்பரம்) செலக்ஷன் தேர்வில் வெற்றி பெறாதவர்களைப் பற்றிய அறிக்கையை இவ்வாறு வெளியிடுகின்றனர்: ''கீழே குறிப்பிடப்பட்ட மாணவர்கள் **செப்டம்பர்** தேர்வுக்கு அனுப்பப்படுவர்.''

சென்னை—30
16—5—69 ப. வியாசமூர்த்தி

**கல்வித்** தொண்டு ஆற்றுவோர் பலர் உண்டு. ஆனால் ''நீ ஏழையா? கண் கலங்காதே!'' என்று கூறித் தொண்டு செய்பவர் ஒருவரே: அவரை 18—5—69 கல்கியில் பாராட்டியது கண்டு அகமகிழ்வு கொண்டேன். அவருடைய பழைய மாணவர்களுள் நானும் ஒருவன். அவர் மாணவர்களைக் கண்டிக்கும் இயல்பே தனி. பள்ளியில் ஆசிரியர் என்ற கடமையுணர்வுடன் செயல் ஆற்றுபவர். மற்றைய இடங்களில் ''அண்ணா'' வாகவும் அறிவுரை ஆற்றுபவர்.

மதுரை,
15—5—69 மே. தருமலிங்கம், பி.ஏ.

**தி**ரு ராமகிருஷ்ணன் மாணவர்களிடம் ஓர் உறவினர் போல நெருங்கிப் பழகுகிறார். இவர் ஒரு வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்றால் போதும். மற்ற வகுப்பு மாணவர்களும் ஓய்வு நேரமாயின் இங்கு வந்து சுவரின் மறைவாக நின்று ஒட்டுக்கேட்பார்கள். அந்த அளவுக்கு அவர் வகுப்பில் நகைச்சுவை விருந்தளிப்பார்!

திருப்பரங்குன்றம்,
16—5—69 இரா. சூரியநாராயணன்.

**இ**ரண்டாவது பரிசு பெற்ற ஹோமியோ பதி—பதி என்ற ஹாஸ்யக் கதையைப் படித்தேன். கள்ளமில்லாத, விரசமில்லாத — ஏன் உயர்தரமான ஹாஸ்யமும் கூட என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. வரிக்கு வரி ஹாஸ்யம் இழையோடுகிறது. கதையை எழுதியவருக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

சிதம்பரம்,
17—5—69 வெ. சுகவனம்

**செ**ன்ற வாரம் கல்கியில் வெளியான ''இணை கோடுகள்'' சிறு கதையில் வரும் கீழ்க்கண்ட பகுதியை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்: ''ஆபீஸுக்கு வரும் மணமான பெண்கள் வருமானத்துக்கு வருகிறார்களே தவிர, கடமையைச் சரிவர மதிப்பதில்லை.''


கதைதான் என்றாலும் பொதுப்படையாக விஷயங்கள் எழுதுவதில் கவனம் தேவை. எங்களைப் போன்ற பல மணமான அலுவலக ஊழியைகளின் மனத்தை இனிமேலும் இவ்வண்ணம் புண்படுத்த வேண்டாம்.

வனஜா சுந்தரராஜன்,
சண்முகவடிவு மோகன்,
லலிதா நாகராஜன்,
சென்னை, ஜெயலக்ஷ்மி ராமமூர்த்தி
24—5—69 ராஜேசுவரி தியாகராஜன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

# காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச்சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!





## பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!


சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)


REGISTERED No. M. 4392.
Registered as a Newspaper in Ceylon


# முதன்மையில் நிலைப்பீர் மாஸி-பர்கூஸனுடன்









இந்தியாவிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் மற்றெந்த டிராக்டரைக் காட்டிலும் மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் இது மிகுந்த சக்தி கொண்டது. சிக்கனம் வாய்ந்தது. பல வகையில் பயன் அளிப்பது. உலகப் புகழ் பெற்ற பர்கூஸன் முறையைக் கொண்ட டிராக்டர் இது ஒன்றே.

மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரும், கருவிகளும், விற்பனைக்குப் பின் விரிவான சேவை அளிக்கும் சீரிய ஏற்பாடுகள் கொண்ட, நாடு முழுதும் பரவியுள்ள விற்பனையாளர் அமைப்பின் ஆதரவைக் கொண்டுள்ளன.

TAFE

டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம்
எக்விப்மென்ட் லிமிடெட், மதறாஸ்

